# தமிழரசு

1-6-77 50 காசு.





# தீண்டாமை ஒழிப்பு

"பிறப்பினால் தீண்டத்தகாதவன் என்று கருதப்படும் கடைசி மனிதன் இருக்கும் வரை நமது போராட்டம் ஓயப் போவதில்லை"

"காந்தி அடிகள்"

"ஜாதி மதங்களைப் பாரோம்—
உயர் ஜன்மம் இத்தேசத்தில்
எய்தினராயின் வேதிய ராயினும்
ஒன்றே—அன்றி வேறு
குலத்தின ராயினும் ஒன்றே"

"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே
—நம்மில் ஒற்றுமை நீங்கில்
அனைவர்க்கும் தாழ்வே நன்றிது
தேர்ந்திடல் வேண்டும்—இந்த
ஞானம் வந்தாற்பின்
நமக்கெது வேண்டும்?"

"மகாகவி பாரதியார்"





அன்னை கஸ்தூரி பாய் காந்தி அவர்களின் திரு உருவப படத்தை நமது பிரதமர் திரு மொரார்ஜி தேசாய் அவர்கள் 17—5—1977 அன்று, கிண்டி ராஜ்பவனில் திறந்து வைத்தார். தமிழ்நாடு ஆளுநர் திரு பிரபுதாஸ் பட்வாரி அவர்கள் அருகே உள்ளார்.

# தமிழரசு

மலர் : 7 ❀ 1—6—1977 ❀ இதழ் : 23

## இந்த இதழில்


| | பக்க எண் |
|---|---|
| உலக சுற்றுப்புறச்சூழ்நிலை நாள் | 3 |
| உணவுப் பொருட்களைப் பாதுகாத்தல் | 4 |
| வார்டு நெம்பர்-8 | 5 |
| யூரியாவைப் பதனப்படுத்திப் பயன் அடையுங்கள்! | 8 |
| வைகுந்தன் உயில் (சரத்சந்திரர் நாவல்-தொடர்ச்சி) | 10 |
| படமும் செய்தியும் | 23 |
| தஞ்சைக்கேற்ற சிறுதொழில்கள் | 33 |
| மாவட்டங்களின் மாறிவரும் தோற்றம்! | 39 |
| மாட்டுவண்டிகள் நவீனப்படுத்தப்படும்! | 42 |
| யுனெஸ்கோவும் இந்தியாவும்! | 43 |
| முந்திரிக்கு உரமிட்டு உற்பத்தியைப் பெருக்குங்கள்! | 45 |
| எள் பயிரில் பூச்சிகளும் தடுப்பு முறைகளும் | 46 |
| நிலக்கடலையில் சிவப்புக் கம்பளிப் புழுவைத் தடுக்கும் முறைகள் | 47 |
| 100 மணி நேரத் தமிழ் இணைப்புப் பயிற்சி | 48 |


அட்டைப்படம்: கன்னியாகுமரியில் உள்ள விவேகானந்தர் நினைவுச் சின்னம்.

நன்றி: பொது (சுற்றுலா) துறை, சென்னை.

கட்டுரையாளர்களின் கருத்துக்களுக்கு ஆசிரியர் பொறுப்பாளி அல்ல.

தமிழ்நாடு சட்டப் பேரவைக்காக நடைபெற விருக்கும் பொதுத் தேர்தல் முடிவுகளுடன் அடுத்த இதழ் வெளிவரவிருக்கிறது!


காற்று நிகர் மென்மை
வண்ணத்துப் பூச்சியின்
எழில் வண்ணம்
கோ-ஆப்டெக்ஸ்
அச்சிட்ட நூல் சேலைகள்
உண்மைதான்! மென்மையான அச்சிட்ட நூல் சேலைகள்—நவீன டிசைன்கள்—யமுனா, அஜந்தா, சாமுண்டி-உள்ளங்கவர் வகைகள்—பரவசமூட்டும் வண்ணங்கள். கோ-ஆப்டெக்ஸ் அச்சிட்ட சேலைகள் இன்றைய நாகரீகமாகத் திகழ்பவை!
கைத்தறியே
வண்ணத்துப்பூச்சி



# "உலக சுற்றுப்புறச் சூழ்நிலை நாள்"

'உலக சுற்றுப்புறச் சூழ்நிலை நாள் வரும் ஜூன் மாதம் 5-ந் தேதி கொண்டாடப்படுகிறது. இந்த ஆண்டு 'உலக சுற்றுச் சூழ்நிலை நாளி'ன் முக்கிய நோக்கம், ''பூமி வளங்களைப் பயன்படுத்துதல், பாதுகாத்தல் ஆகியவற்றில் உலகநாடுகள் ஒன்றையொன்று சார்ந்திருத்தல்'' என்பதேயாகும்.

'உலக சுற்றுப்புறச் சூழ்நிலை நாள் 1972-ஆம் ஆண்டில் ஸ்டாக்ஹோமில் மனித சமுதாயத்தின் சுற்றச் சூழ்நிலைகள் பற்றிய ஐ நா. மாநாடு துவக்கப்பட்டதைக் குறிக்கும் வகையில் கொண்டாடப்படுகிறது. ஐ.நா. பொதுச் சபையில் 27-வது கூட்டத்தில் ஜூன் மாதம் 5-ந்தேதியை 'உலக சுற்றுச்சூழ்நிலை நாளாக'க் கொண்டாடுவது என்று முடிவு செய்யப்பட்டது. ஸ்டாக்ஹோமில் நடைபெற்ற சரித்திரச் சிறப்புமிக்க பிரதம மந்திரிகளைப் பிரதிநிதியாகப்பங்கு பெறச்செய்த இரண்டு நாடுகள் இந்தியாவும், சுவிட்சர்லாந்தும் மட்டுமே ஆகும்.

'உலக சுற்றுச்சூழ்நிலை நாளைக்' குறிக்கும் வகையில் இந்த ஆண்டில் மத்திய அரசு ஒரு நினைவுத்தபால் தலையை வெளியிட முடிவு செய்துள்ளது. மாநில அரசுகளும், யூனியன் பிரதேசங்களும் 'உலக சுற்றுச்சூழ்நிலை நாளின்' முக்கியத்துவத்தைக் குறிக்கும் வகையில் இந்த நாளைப் பயனுள்ள விதத்தில் கொண்டாட வேண்டும் என்று விஞ்ஞான, தொழில் நுட்பத் துறை வேண்டுகோள் விடுத்துள்ளது. இளைஞர்-குடும்பநலத் திட்ட கவுன்சில் ஜூன் மாதம் 4, 5 தேதிகளில் புதுதில்லியில் ''சுய தேவை நிறுவனங்களும், சுற்றுச் சூழ்நிலைப் பிரச்சினைகளும்'' என்னும் கருத்தரங்கொன்றை நடத்த உள்ளது. இந்திய இளைஞர் சமுதாயக் கூட்டமைப்பு 'சுற்றுச்சூழ்நிலையும், அது அசுத்தமாதலும்' என்னும் மண்டலக் கருத்தரங்கை, சென்னையிலுள்ள மண்டலக் கழகத்தில் நடத்துகின்றது.

'சுற்றுச்சூழ்நிலைகளைப் பாதுகாப்பது' என்பது தனிப்பட்ட பொறியாளர்கள், விஞ்ஞானிகள், நிர்வாகிகள் ஆகியோர் மட்டுமே சம்பந்தப்பட்ட ஒரு விஷயம் அல்ல; மாறாக ஒவ்வொருவரும் அவர் சிறியவராயினும், பெரியவராயினும் பகிர்ந்து கொள்ளவேண்டிய ஒரு விஷயமாகும்' என்ற உண்மையை 'உலக சுற்றுச் சூழ்நிலை நாள்' நினைவூட்டுகிறது.

# உணவுப் பொருட்களைப் பாதுகாத்தல்

— பி. கே. பாலிகா

மனிதனுக்கு இன்றியமையாது தேவைப்படுவன மூன்று, உண்ண உணவு, இருக்க இடம், உடுக்க உடை என்ற மூன்றில் முதலாவதும் முக்கியமானதும் உணவு ஆகும். எந்த வகையான உணவும் அழியும் தன்மையுடையது. ஆகையால் உலகம் தோன்றிய காலம் தொட்டு உணவுப் பொருட்களைப் பாதுகாக்க மனிதன் முயன்று வந்திருக்கிறான்.

உணவுப் பொருட்கள் அவற்றின் தன்மையாலும், அவற்றில் அடங்கியிருக்கும் கூறுகளாலும், அவை பேணப்படுகிற முறையாலும் பாதிக்கப்படுகின்றன. தட்ப வெப்பம், ஈரம், பிராணவாயு, சத்துக்கள் ஆகியவை உணவுப் பொருட்களைப் பாதிக்கின்றன.

உணவுத் தானியங்கள் அறுவடைக் காலத்தில் பெய்யும் திடீர் மழை முதலியவற்றால் அழுகிவிடுவதும் உண்டு. கிடங்கில் அடுக்கி வைத்திருக்கும் போது கெட்டுப் போவதும் உண்டு. ஆகையால் எல்லாக் கட்டங்களிலும் விஞ்ஞான முறைகளைக் கடைப்பிடித்து அவற்றைப் பாதுகாப்பதும் அவை வீணாகப் போவதைத் தடுப்பதும் நமது கடமையாகிறது.

உணவுப் பொருட்கள் உற்பத்தி உபரியாக இருக்கும்போது அவற்றில் ஒரு பகுதி நீண்ட தூரத்திலுள்ள இடங்களில் தேவைப்படுகிறது. ஆனால் அங்கும் அது உடனடியாக உபயோகப்படுவதில்லை. சில மாதங்கள் கழித்துத்தான் அது உபயோகப்படும். அதுவரையில் அதைத் தக்கவாறு பேணி வைத்திருந்து பிறகு விற்கப்படும் இடத்துக்கு அனுப்பி நுகர்வோர்க்குக் கிடைக்கும்படி செய்ய வேண்டியதிருக்கிறது. இடைப்பட்ட காலத்தில் அதனுடைய நிறமோ, மணமோ, சுவையோ குன்றிவிடாதபடியும், தூசி, நச்சுப்பொருட்கள் தேவையற்ற கலப்படங்கள் ஆகியவை சேர்ந்துவிடாமலும் பார்த்துக் கொள்ள வேண்டும்.

கிருமிகள் நாம் வாழும் சூழ்நிலையில் ஏராளமாகவும் எத்தனையோ வகைகளிலும் உள்ளன. உணவுப் பொருட்களில் ஏதாவது ஒரு கிருமி சேர்ந்து விட்டால் அது பல மடங்காகிப் பெருகி விடும். ஆகையால் கிருமிகள் பரவுவதைக் கட்டுப்படுத்த வேண்டியதும் அவசியம்.

உணவுப் பொருள் அழுகத் தொடங்கிய பிறகு புழு அல்லது சிலவகைக் காளான்கள் அதில் சேர்ந்து அதை வேகமாக அழிக்க முயல்கின்றன.

இந்தப் பூஞ்சக் காளான்கள் மிக வேகமாகப் பெருகும் ஆற்றல் பெற்றிருக்கின்றன. இவற்றில் சில வகைகள், சம்பந்தப்பட்ட உணவுப் பொருளுடன் சேர்ந்துவிட்டால் அவற்றை உண்பவர்களின் உயிரைக் கொல்லும் சக்தியை கூடப் பெற்று விடும்.

நாம் வாழும் சூழ்நிலையில் புளித்த மாவின் நுரை வகைகளால் உண்டாகும் கேடுகள் எவ்வளவோ உண்டு. உயிர் அணுக்களும் உணவுப் பொருளில் தங்கி, பிறகு கிருமிகள்போல பெருகி விடுகின்றன. இவற்றால் உணவுப் பொருட்களின் தன்மையே அடியோடு மாறிவிடுகிறது. உணவுப் பொருட்களைப் பாதுகாக்க எல்லா நாடுகளிலும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்தியாவில் 1954-ல் கலப்படத் தடுப்புச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. அந்தச் சட்டத்தின் விதிமுறைகளை மீறி உணவுப் பொருள்களைத் தரக்குறைவாக உற்பத்தி செய்பவர்களுக்குக் கடுமையான தண்டனைகள் விதிக்கப்படுகின்றன.

சாதாரண உப்பு, சர்க்கரை, 'டெக்ஸ்ட் ரோஸ்' 'குளுக்கோஸ்' வாசனைப் பொருட்கள், புளித்த சாராயம் முதலியவற்றை எந்த உணவுப் பொருளிலும் சேர்ப்பதற்கு இந்தியாவில் எவ்விதமான தடையும் இல்லை. வேறு சில பொருட்கள் இன்ன அளவுவரையில்தான் இந்தியாவில் உணவுப் பொருட்களுடன் சேர்க்கப்படலாம் என்று மேற்கண்ட சட்டம் 55-வது விதியில் வரையறுக்கப்பட்டிருக்கிறது.

கிருமிகளை அழிக்கக்கூடிய ஆற்றல் படைத்த பொருட்களை உணவுப் பொருட்களில் சேர்க்கச் சில நாடுகள் அனுமதிக்கின்றன. இந்தியா இத்தகைய அனுமதியை வழங்கவில்லை.

உணவுப் பொருட்களில் சாதாரணமாகக் கலக்கப்படுகிற பல பொருட்கள், முக்கிய உணவு வகையின் தன்மையையும் சுவையையும் முற்றிலும் மாற்றிவிடக் கூடியவையாக இருப்பதால் அவற்றை மிகவும் குறைந்த அளவில் உபயோகிப்பது நல்லது. இவ்விஷயத்தில் மிகுந்த எச்சரிக்கை தேவை.

எண்ணெய் வகைகள், கொழுப்புக்கள், முதலியவற்றிலும் கவனம் அதிகமாகச் செலுத்தப்பட வேண்டும். சுத்தி செய்யப்பட்ட சமையல் எண்ணெய்க் காற்றுப்பட வைத்திருந்தால் வயிற்றைக் குமட்டும் ஒருவகையான வாடை உண்டாகும். சாப்பாட்டில் எப்போதும் இருக்கும் செம்பு, மங்கனீசு, இரும்புச்சத்து ஆகிய உலோகங்களின் சிறு கூறுகளால் இந்த வாடை உண்டாகிறது. ஊறவைக்கப்பட்ட எண்ணெய் வகைகளைவிட, ஊற வைக்கப்படாத எண்ணெய்கள், வெளிக் காற்றால் மிகவும் பாதிக்கப்படுகின்றன. எண்ணெயில் பொரிக்கப்பட்ட அல்லது தாளிக்கப்பட்ட உணவு வகைகளால் தான், மற்ற வகை உணவு வகைகளைவிட, அதிகமான கெடுதல் ஏற்படுகின்றன. ஆப்பிள் முதலிய சில பழங்கள் அவற்றை வெட்ட ஆரம்பித்தவுடன் சில சமயம் பாதிக்கப்படுகின்றன. 'சிட்ரிக்' அமிலம் அல்லது எலுமிச்சம் பழச் சாற்றை உடனே அந்தப் பழத்தில் கலந்தால் பழத்தின் நிறம் மாறுவதைத் தடுக்கலாம்.

எல்லா வகையான உணவுகளையும் பாதுகாப்பதில் மிகுந்த அக்கறை தேவைப்படுகிறது. உலகம் முழுவதும் புதிய முறைகளைக் கையாண்டு உணவைப் பாதுகாக்க முயற்சிகளும் ஆராய்ச்சிகளும் செய்யப்பட்டு வருகின்றன. இவற்றை நாமும் அறிந்து பயன் பெற வேண்டும்.

நன்றி : அகில இந்திய வானொலி நிலையம்.

# வார்டு நெம்பர் 8



சென்னை அரசினர் பொது மருத்துவமனையிலுள்ள வார்டு நெம்பர்: 8.

பத்தாம் நம்பர் படுக்கையில் உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கும் ஒரு நோயாளியை டாக்டர்களும், நர்சுகளும் சூழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

மருத்துவர் நோயாளிக்குத் துரித சிகிச்சை அளிப்பதில் தீவிரம் காட்டுகிறார்.

நர்சுகள் இங்கும் அங்கும் ஓடிக் கொண்டிருக்கின்றனர்.

நம் கண்ணுக்கெதிரிலேயே ஒரு உயிர் ஊசலாடிக் கொண்டிருக்கிற பரிதாப நிலையைப் பார்க்கிறோம்.

''அந்த நோயாளி பிழைத்துக் கொள்ள வேண்டும்'' என்றும் நம்மையறியாமலேயே நாம் பிரார்த்தனை செய்து கொள்கிறோம்.

அவரைச் சிகிச்சை செய்யும் டாக்டரின் முகத்தில், அவரை உயிர் பிழைக்க வைக்க வேண்டும் என்ற தீவிரம் காணப்படுகிறது. அதற்கு உதவியாக நர்சுகள் பம்பரமாய்ச் சுழல்கின்றனர்.

உயிருக்குப் போராடும் அந்த நோயாளிக்குப் ''பெனிசிலின் அலர்ஜியாம்''. நவீன கருவிகளுடன் அவருக்கு உயிர் தர டாக்டர்கள் போராடிக் கொண்டிருந்தனர்.

ஒரு வாரம் கழித்து அதே வார்டுக்குச் செல்கிறோம். அதே 10-ஆம் நெம்பர் படுக்கையில் இன்னொருவர்; இருதய நோயாளி. நினைவிழந்த நிலையில் காணப்படும் அவருக்குத் தலைமை மருத்துவர் உட்பட ஏழெட்டு டாக்டர்களும், நர்சுகளும் சிகிச்சை அளித்துக் கொண்டிருக்கின்றனர்!

'பெனிசிலின் அலர்ஜி' நோயாளி என்ன ஆனார்?

அதை அறிந்து கொள்ள மனம் துடிக்கிறது. அவருக்குச் சிகிச்சை அளித்த டாக்டர் முகம்மது ஜகீர் உதீன் அவர்களைக் கேட்டபோது, ''அவரா? உயிர் பிழைத்துக் கொண்டாரே..... மறுநாள் 'ஜம்' மென்று எழுந்து வீட்டுக்கு புறப்பட்டு விட்டாரே!'' என்கிறார் பெருமிதத்துடன்.

இப்படி கவலைக்கிடமானவர்களை-உயிருக்குப் போராடுபவர்களைப் பிழைக்கவைப்பதில் பெரு முயற்சி எடுத்துக் கொள்கிறது, சென்னை அரசினர் பொது மருத்துவமனையிலுள்ள (Government General Hospital ) தீவிர மருத்துவக் கவனிப்புப் பிரிவு ( Intensive Medical Care Unit ). இந்தப் பிரிவு வார்டு நெம்பர் 8-ல் உள்ளது. இது, இம்மருத்துவமனையிலுள்ள மிக முக்கியமான பிரிவாக இரவும் பகலும் இயங்கி வருகிறது.

''பெனிசிலின் ஊசி சிலருக்கு ஒத்துக்கொள்வதில்லை. பொதுவாக 'டெஸ்ட்' ஊசி போட்ட பிறகே பெனிசிலின் போடப்





'பெனிசிலின் அலர்ஜி'க்குத் தீவிர சிகிச்சை அளிக்கப்படுகிறது.



படுவதுண்டு. இருந்தாலும் ஒரு சிலருக்கு அதனல் 'அலர்ஜி' ஏற்பட்டு விடுகிறது. சில சமயங்களில் அதுவே, உயிருக்கு ஆபத்து விளைவிப்பதாக ஆகிவிடுவதுண்டு'' என்கிருர் இந்தப் பிரிவின் தலைமை மருத்துவர் டாக்டர் எம். தாயுமானவன் அவர்கள்.

ஆமாம், 'அலர்ஜி' என்ருல் என்ன?

''நோயாளிக்கு ஏற்பட்டிருக்கும் நோய் இன்னதென்று கண்டு பிடிக்க முடியாவிட்டால், அவருக்கு ஏதோ ஒன்று ஒத்துக் கொள்ளவில்லை., அதனுல்தான் நோய் ஏற்பட்டிருக்கிறது என்று மருத்துவர்கள் சொல்லி விடுவார்கள்'' என்று பலர் சொல்லக் கேட்டிருக்கிருேம்.

ஒரு குறிப்பிட்ட நிலைமையுடன் கொஞ்சங்கூடப் பொருந்தாமல் முற்றிலும் மாறுபட்ட செயல் அல்லது விளைவு ஏற்படுவதையே 'ஆகாது' என்று சொல்லுகிருேம். இதைத்தான் 'அலர்ஜி' என்கிருேம்.

பதினைந்து ஆண்டுகளுக்கு முன் 'அலர்ஜி'யை அடித்து விரட்ட வழி வகை இல்லாமல் இருந்தது. ஆனல் இன்று? 'அலர்ஜி' அலறிக் கொண்டு ஓடுகிறது! அந்த அளவுக்கு அறிவியல் நாளுக்கு நாள் முன்னேறிக் கொண்டு வருகிறது.

தீவிர மருத்துவ கவனிப்புப் பிரிவில் 12 படுக்கைகள் உள்ளன. இந்தப் படுக்கைகள் என்றும் நிறைந்தே காணப்படும். 'நோய்க்கு இடங்கொடேல்' என்கிருேம். ஆனல் நோய்க்கு இடங் கொடுத்தவர்கள் இங்கே வந்து கொண்டுதான் இருக்கிருர்கள்!

இருதயம், நுரையீரல், கல்லீரல் நோய்கள், மூளைக்காய்ச்சல், சிறுநீரகக் கோளாறு இப்படிப் பலவிதமான நோயாளிகள் அபாய கட்டத்தை அடையும்போது இந்தப் பிரிவுக்கு உடனே அனுப்பப்படுகின்றனர்.

இந்தப் பிரிவில்-வார்டு நெம்பர்: 8ல், 24 மணி நேரமும் சிகிச்சை நடக்கிறது. இதற்காகத் தலைமை மருத்துவர் உட்பட 23 பேர் இப்பிரிவுக்கென நியமிக்கப் பட்டிருக்கிருர்கள். தலைமை மருத்துவருக்கு உதவியாக இருவரும், முதுநிலை அவுஸ் சர்ஜன்கள் 7 பேரும், அவுஸ் சர்ஜன்கள் 7 பேரும், நர்சுகள் 6 பேரும் ஆக மொத்தம் 23 பேர் தேனீக்கள் போலச் சுறுசுறுப்பாய் இயங்கிக் கடமையாற்றுகின்றனர்.

இந்தப் பிரிவில் செயற்கைச் சுவாசக் கருவிகள், இருதயத்தைத் துடிக்க வைக்கும் கருவிகள் முதலானவை உள்ளன. மேலும் இப்பிரிவுக்கென சுமார் ரூ. 33,000 மதிப்புக்கு நவீன கருவிகள் வாங்குவதற்கான திட்டம் ஒன்றும் உள்ளது.

அண்மையில் சென்னையில் விஷவார்னிஷ் சாப்பிட்டுக் கவலைக்கிடமானவர்கள் இந்தப் பிரிவில் தான் சேர்க்கப்பட்டுச் சிகிச்சை பெற்றனர்.

இந்தப் பிரிவுக்கு வந்து சிகிச்சை பெற்று, பிறகு அபாய கட்டத்தைத் தாண்டிய நோயாளிகள், இதற்கு அடுத்த 'இடைநிலை கவனிப்புப் பிரிவு'க்கு **(Inter mediary Care Unit)** மாற்றப் படுகின்றனர்.

இங்குச் சிகிச்சை பெற்று முழுக் குணம் அடைந்து வீடு திரும்பியவர்கள் தமக்குத் தீவிர சிகிச்சையளித்த மருத்துவர்களையும் நர்சுகளையும் வாழ்த்தவும், பாராட்டவும் தவறுவதில்லை. அந்தப் பாராட்டுக் கடிதங்களையெல்லாம் பார்க்கும்போது, இங்குள்ள மருத்துவர்களின் அயராத பணி நமக்கு நன்கு விளங்குகிறது.

இந்தத் 'தீவிர மருத்துவக் கவனிப்புப் பிரிவில்' சிகிச்சை பெறும் ஒரு நோயாளிக்கு ஒரு நாளைக்கு ஆகும் செலவு ரூ. 100 இவையனைத்தும் இலவசமே!

இதே தீவிர சிகிச்சை, தனியார் மருத்துவமனையில் நடப்பதாயிருந்தால் ஒரு நாளைக்கு ரூ. 200-லிருந்து ரூ. 300 வரை செலவு ஆகுமாம்!

அரசினர் பொது மருத்துவமனையில் 7 மருத்துவக்குழுக்கள் ( Medical Units ) உள்ளன. இதேபோல 7 சர்ஜன்கள் குழுக்களும் உள்ளன. இந்த மருத்துவ குழுக்கள் கவனிக்கும் நோயாளிகள் அபாய கட்டத்தை அடையும்போதுதான், வார்டு நெம்பர்-8க்குச் சிறிதும் தாமதமில்லாமல் கொண்டு வரப்படுகிருர்கள்.

சென்னை அரசினர் பொது மருத்துவமனையில் பல துறைகள், பல பிரிவுகள் உள்ளன. அவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகையில் சிறப்புற்று விளங்குகின்றன. அதேபோல் 'தீவிர மருத்துவக் கவனிப்புப் பிரிவும்' பெருமைப் படத்தக்க வகையில் சிறந்து விளங்கி வருகின்றது.

பெங்களூரிலுள்ள மருத்துவர்கள் குழு ஒன்று இந்தப் பிரிவில் பயிற்சி பெற வரப்போகிறதாம். சென்னையிலுள்ள துறைமுகப் பொறுப்புக் கழக மருத்துவமனை மருத்துவர்களும் இங்குப் பயிற்சி பெறவிருக்கின்றனர் என்ற செய்தி, இப்பிரிவின் பெருமையை மேலும் ஒரு படி உயர்த்துகிறது.

உயிருக்குப் போராடும் நோயாளியை-சுய நினைவிழந்து மரண வாயிலில் நிற்கும் மனித உயிரைக் காப்பாற்றி மறு பிறவியாக்கும் மகத்தான பணியில் ஈடுபட்டிருக்கும் இம்மருத்துவர்களை எவ்வளவு போற்றினுலும் தகும்!

பி.வி. கிரி.

## உலோகவியல் துறையில் புதிய சாதனைகள்.....

தேசிய ஆராய்ச்சி அபிவிருத்திக் கார்ப்பொரேஷன், வர்த்தகத் துறையின் உபயோகத்துக்காக உலோகவியல் துறையில் மூன்று முக்கிய முறைகளை கண்டு பிடித்துள்ளது. 'மிஷ்ச்' உலோகம், கரிமம் அல்லாத இரும்பு கலப்பு உலோகங்கள், 'பி. எம்.²' கலப்பு உலோகம் ஆகியவற்றைத் தயாரிக்க இந்த முறைகள் உதவுகின்றன.

செரியம் மற்றும் சில கிடைத்தற்கரிய மண்கள் அடங்கிய உலோகக்கலப்பு தான் 'மிஷ்ச்' உலோகம் என்பது. சிறப்பு வகையான வார்ப்பிரும்பை தயாரிப்பதற்குக் கலப்பு உலோகத் தொழிலில் பயன்படுவது மட்டுமின்றி, சிகரெட் பற்ற வைக்கப் பயன்படும் கருவி, கைக் குண்டுகள், துப்பாக்கிக் குண்டுகள் ஆகியவற்றைத் தயாரிப்பதற்கும் இந்த உலோகம் பயன்படுகிறது. மானேசைட் மணலிலிருந்து தோரியத்தைப் பிரித்தெடுப்பதன் மூலம் கிடைக்கும் துணைப் பொருளைக் கொண்டு இந்த உலோகம் தயாரிக்கப்படுகிறது. காரைக்குடியிலுள்ள மத்திய மின்—இரசாயன ஆராய்ச்சிக் கழகம் இந்த உலோகத் தயாரிப்பு முறையைக் கண்டுபிடித்துள்ளது.

சிறப்பு எஃகுகள், பொறியியல் துறையில் பயன்படுத்தப்படும் மற்ற சாதனங்கள் ஆகியவற்றைத் தயாரிக்க கரிமம் அல்லாத இரும்பு கலப்பு உலோகங்கள் மிகவும் அவசியம். ஜாம்ஷெட்பூரிலுள்ள தேசிய உலோகங்கள் ஆய்வுக் கூடம் இந்த முறையைக் கண்டுபிடித்துள்ளது. இந்த முறை மிகவும் எளிமையானதும், சிக்கனமானதுமாகும்.

'பி. எம்.²' கலப்பு உலோகம் ஒரு புதுவகையான கலப்பு உலோகமாகும். தற்போது மின்சாரத்தை அனுப்புவதற்குப் பயன்படுத்தப்பட்டுவரும் செம்பு அல்லது அலுமினியத்துக்குப் பதிலாக, இந்தப் புதிய உலோகத்தைப் பயன்படுத்தலாம். உயர்மின் கடப்பாற்றல், அலுமினியத்தை விட அதிகமான அரிப்புத் தடுப்புத் தன்மை ஆகியவை இந்த உலோகத்தின் சிறப்புத் தன்மைகளாகும். இந்தக் கலப்பு உலோகத்தைப் பயன்படுத்தித் தயாரிக்கப்படும் கம்பியை மோட்டார் மற்றும் டிரான்ஸ்பார்மர் சுருள்கள், மோட்டார் வாகன கேபிள்கள், ஆகியவற்றிற்கும் பயன்படுத்தலாம், ஜாம்—ஷெட்பூரிலுள்ள தேசிய உலோகவியல் ஆய்வுக்கூடம் இதன் தொழில்முறையை கண்டு பிடித்துள்ளது.

## அரிசித் தவிட்டிலிருந்து சமையல் எண்ணெய்!

தொழிற்சாலை உபயோகத்துக்கென நாட்டில் இதுவரை பெருமளவு பயன்படுத்தப் பட்டு வந்த அரிசித் தவிட்டிலிருந்து தயாரிக்கப் படும் தவிட்டு எண்ணெயிலிருந்து தரமான உணவு (சமையல்) எண்ணெய் உற்பத்தி மேம்பாட்டிற்கான திட்டம் ஒன்றை இந்திய உணவுக் கார்ப்பொரேஷன் பரிசீலித்து வருகிறது.

துர்நாற்றம் வீசி, கெட்டுப்போகாமல் இருப்பதிலிருந்து அரிசித் தவிட்டைப் பாதுகாக்கும் செயல்முறை ஒன்றை மைசூரில் உள்ள மத்திய உணவு தொழில்நுட்ப ஆராய்ச்சி நிலையம் கண்டு பிடித்துள்ளது. பல அரிசி மில் உரிமையாளர்களுக்கு இந்த செயல்முறை, நேரில் விளக்கிக் காட்டப்பட்டுள்ளது.

தஞ்சாவூர் மாவட்டம் செம்பனூர் கோயிலில் உள்ள இந்திய உணவுக் கார்ப்பொரேஷனின் அரிசி ஆலையில் அமைக்கப்பட்டிருக்கும் தவிடு தகுதிப்படுத்தும் ஆலை தற்போது திருப்திகரமாக செயல்பட்டு வருகிறது.

பஞ்சாப், மத்தியப் பிரதேசம், ஆந்திரப்பிரதேசம் மற்றும் தமிழ்நாடு ஆகிய மாநிலங்களில் தவிடு தகுதிப்படுத்தும் சில ஆலைகளை நிர்மாணிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் மில் உரிமையாளர்களுக்குப் பொருளாதார மற்றும் தொழில்நுட்ப அனுகூலங்களை விளக்கிக் காட்டவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

தவிடு தகுதிப்படுத்தும் ஆலையுடன், தவிட்டைத் தகுதிப் படுத்துவதற்கு முன்னும் பின்னும் அரிசித் தவிட்டின் தரத்தை மதிப்பீடு செய்யும் வகையில் ஆய்வுக் கூடங்களும் அமைக்கப் படுகின்றன. இந்தத் திட்டம் மத்திய உணவுத் தொழில் நுட்ப ஆராய்ச்சி நிலையம், இந்திய உணவுக் கார்ப்பொரேஷன், நெல் பதப்படுத்தும் ஆராய்ச்சி நிலையம் (திருவாரூர்) ஆகியவற்றின் கூட்டு முயற்சியிலானதாகும்.

அரிசித் தவிடு தகுதிப்படுத்தும் ஆலையின் அமைப்புச் செலவுத் தொகை சுமார் ரூபாய் 15 ஆயிரம் என மதிப்பிடப்பட்டுள்ளது. இதற்கான வடிவமைப்பு மற்றும் இதர விவரங்கள் மைசூரில் உள்ள மத்திய உணவுத் தொழில்நுட்ப ஆராய்ச்சி நிலையத்திலிருந்து கிடைக்கப்பெறும். அரிசி ஆலைகளிலிருந்து கிடைக்கப்பெறும் 20 இலட்சம் டன் தவிட்டில், 50 சதவிகிதம் தகுதிப்படுத்தப் படுமானல், மக்களின் உபயோகத்திற்கென சுமார் $1\frac{1}{2}$ இலட்சம் டன் சமையல் எண்ணெய் வடித்தெடுக்கப்படும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

## யூரியாவைப் பதனப்படுத்திப் பயன் அடையுங்கள்!

* யூரியா ஓர் தழைச்சத்து நிறைந்த, சிறந்த இரசாயன உரமாகும்.

* இதில் 46 சதவீதம் தழைச்சத்து உள்ளது.

* இதனை நேரிடையாகப் போட்டால், தண்ணீரில் கரைந்து, நிலத்தில் உள்ள பயிர்களின் வேருக்குக் கீழே போய்விடும். அதனால் எந்தவிதப் பயனும் இல்லை.

* எனவே, யூரியாவை மண்ணுடன் கலந்து, பதனப் படுத்திய பின்பே பயிர்களுக்கு இட வேண்டும். இதனால் தழைச்சத்தின் சேதாரத்தையும் தவிர்க்கலாம்.

* 25 கிலோ யூரியாவை, 125 கிலோ இருமண் பண்பாடு உள்ள மண்ணுடன் நன்றாக இரண்டறக் கலக்கவேண்டும்.

* இந்தக் கலவையுடன் சுமார் 4-5 லிட்டர் தண்ணீரைத் தெளித்துப் பொல பொல வென்று கிளறி அவல் பதத்தில் இருக்குமாறு செய்ய வேண்டும். அதிகமாகத் தண்ணீரை ஊற்றிவிடக் கூடாது.

* பிறகு யூரியாவும் - மண்ணும் சேர்ந்த கலவையை நிழலில் சுமார் 48 மணி நேரம் வைத்து இருக்கவும்.

* இதனால் யூரியாவில் 'அமைடு' உருவத்தில் உள்ள தழைச்சத்து, அம்மோனியா தழைச்சத்தாக மாறிவிடும். மேலும் மண்ணில் உள்ள களிமண், அம்மோனியா உருவத்தில் உள்ள தழைச்சத்து முழுவதையும் ஈர்த்துப் பயிர்களின் வேர்கள் சுலபமாக எடுத்துக்கொள்ள வழிசெய்கிறது. மேலும், யூரியா தண்ணீரில் கரைந்து சேதாரமாகப் போவதையும் தடுத்து நிறுத்துகிறது.

* எனவே, உழவர் பெருமக்கள் யூரியாவை மண்ணுடன் கலந்து பதனப்படுத்திய பின்பு, குறிப்பாக நெற்பயிருக்கு இடவேண்டும். அதனால் நல்ல பயனை அடையலாம்.

தகவல்: மண்ணியல் துறை,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்,
கோவை-3.

வெளியீடு: தகவல் தொடர்பு நிலையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்,
கோவை-3.

## உழவர்களுக்கு மின்சாரக் கட்டணச் சலுகை!

தமிழக உழவர் பெருமக்களுக்குப் பின் கண்டவாறு மின்சாரக் கட்டணச் சலுகை வழங்க தமிழ்நாடு அரசு ஆணையிட்டுள்ளது.

### மின்சாரக் கட்டணச் சலுகை

முன் காப்புப் பணம் (செக்யூரிட்டி டெபாசிட்) முந்திய ஆண்டின் மிக அதிகமான 3 மாதக் கட்டணமாக இருந்தது. இதில் மாற்றம் செய்யப்பட்டு உள்ளது. இனி முந்திய ஆண்டின் 12 மாதக் கட்டணத்தில் சராசரி பார்த்து, 3 மாதக் கட்டணக் காப்புப் பணமாக வசூலிக்கப்படும்.

### நிலையான கட்டணச் சலுகை

நிலையான கட்டணம் (பிக்சட் சார்ஜ்) முன்பு 1 குதிரைச் சக்திக்கு $2\frac{1}{2}$ ரூபாய் வீதம், அதிக பட்சம் 1 சர்வீசுக்கு மாதம் 10 ரூபாய் வசூலித்தார்கள்.

மின்சார வாரியத்துக்கு ஏற்பட்ட நட்டத்தை ஈடுகட்ட 1.4.76 முதல் அவ்வாறு வசூலிக்கப்பட்டது.

தமிழ்நாட்டில் 7 இலட்சத்து 70 ஆயிரம் மின்சார 'பம்பு' செட்டுகள் இயங்குகின்றன. ஆனால், பருவ காலங்கள் காரணமாக மொத்தத்தில் 10 சதவீத 'லோடு' மின்சாரம்தான் பயன்படுகிறது. 1 யூனிட் மின்சாரத்துக்கு 40 காசு செலவானாலும், வருமானம் 19 காசுதான். இதனால் நட்டம் ஏற்படுகிறது. இருந்தாலும் உழவர்களுக்கும் குறிப்பாக மழையை நம்பி உள்ள பகுதியில் இருப்பவர்களுக்கும் - அடிக்கடி வறட்சியால் பாதிக்கப்படும் பகுதியில் உள்ளவர்களுக்கும் இந்த நிலையான கட்டணம் 50 சதவீதமாகக் குறைக்கப்படுகிறது.

அதாவது 1 குதிரைச் சக்திக்கு $1\frac{1}{4}$ ரூபாய் வீதம், அதிக பட்சம் 1 சர்வீசுக்கு மாதம் 5 ரூபாய் வீதம் வசூலிக்கப்படும்.

### குறைந்த பட்சக் கட்டணம் ரத்து!

நிலத்தடி நீர் குறைவாக உள்ள பகுதிகளில் ஆண்டுக்குக் குறைந்த பட்ச கட்டணமாக, 1 குதிரைச் சக்திக்கு 20 ரூபாய் வீதம் வசூலிக்கப்பட்டது. அப்படிப்பட்ட பகுதிகளில் இந்தக் குறைந்த பட்ச கட்டணம் கைவிடப்படும்.

புதிய சலுகைகள் கடந்த ஏப்ரல் மாதம் முதல் தேதியில் இருந்து அமலுக்கு வருகிறது.







# குழந்தைகளுக்குத் தேவை சத்தான உணவு பயிர்களுக்குத் தேவை விஜய்

குழந்தைகளின் ஆரோக்கியமான வளர்ச்சிக்கு எல்லாச் சத்துக்களும் அவசியம். அதுபோலவே பயிர்களின் வளர்ச்சிக்குத் தழை, மணி, சாம்பல் சத்துக்கள் மூன்றையும் அளித்தால்தான் முழுப் பலனைப் பெறலாம்.

இம் மூன்று சத்துக்களையும் ஒருங்கே கொண்டவை விஜய் காம்ப்ளெக்ஸ் உரங்கள். உங்கள் பயிர்களுக்கும் நிலங்களுக்கும் ஏற்றவாறு சத்துக்களை அளிக்க விஜய் 17-17-17, விஜய் 14-28-14 காம்ப்ளெக்ஸ் ரகங்கள் உங்களுக்கு இப்போது கிடைக்கின்றன. விஜய் உரங்கள் நவீன முறையில் தயாரிக்கப்பட்டு, நன்கு பரிசோதிக்கப்பட்ட தரமான உரங்களாகும்.

தரமான விஜய் உரங்களைத் தயாரிப்பது, இந்தியாவின் மிகப்பெரிய உரத் தொழிற்சாலைகளில் ஒன்றான மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் லிமிடெட்.



உங்கள் பயிர்களுக்கு விஜய் உரங்களைப் பயன்படுத்தி அதிக விளைச்சலைப் பெறுவதற்கான சாகுபடி முறைகளை அறிய, கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதி, இலவச வெளியீடுகளைப் பெறுங்கள்.

ஏரியா மானேஜர்
மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் லிமிடெட்
5/1 ராமச்சந்திரபுரம், தென்னூர், திருச்சி 620 017

VIJAY
MADRAS FERTILIZERS




MFL-1517



# வைகுந்தன் உயில்



## சரத்சந்திரர் நாவல்

தமிழாக்கம் : அ. கி. ஜயராமன்.

சென்ற இதழ் தொடர்ச்சி

## 8

இரவுச் சாப்பாடு முடிந்து அவரவர் தத்தம் இடத்திற்குச் சென்றனர். அப்போது வேலைக்காரன் கோகுலனிடம் வந்து 'எஜமான் கூப்பிடுகிறார்' என்றான். கோகுலன் சட்டென்று எழுந்து அடக்கத்துடன் அவர் முன் வந்து நின்றான். நிமாயி ராய் தன் அருமைப் பேத்தியையும் உடன் உட்கார வைத்துக்கொண்டு சாப்பிட்டுக் கொண்டிருந்தார். அருகே மனோரமா தலையில் முக்காடு நழுவ நின்றுகொண்டு தன்னுடைய இளைய மாமியாரைப் பற்றிய உண்மையான விவரங்களைக் கூறிக் கொண்டிருந்தாள். இந்தச் சமயத்தில்தான் கோகுலன் அங்கே வந்து நின்றான்.

நிமாயி ராய் பாதாம்கீர் நிறைந்த லோட்டாவை ஒரே மூச்சில் காலி செய்துவிட்டு, அந்த லோட்டாவின் விளிம்பினாலேயே மீசையைத் துடைத்துக் கொண்டு, கோகுலனை ஏறெடுத்துப் பார்த்தார். பிறகு, ''அப்பா, கோகுல்! நான் உன்னிடம் ஒன்று கேட்க விரும்புகிறேன். வில்லில் இருந்து விடுபட்ட அம்பும், வாயினின்றும் வெளிவந்த வார்த்தையும் மீண்டும் திரும்புவதுண்டா?'' என்றார்.

கோகுலன் ஒன்றும் புரியாமல் 'இல்லை' என்றான்.

நிமாயி முதலில் தன் மகளின் பக்கம் பார்த்தார். பிறகு ஓர் இளஞ் சிரிப்புடன் தன் மருமகனைப் பார்த்து, 'சரி, அப்புறம்' என்றார்.

வானளாவத் தேடிப் பார்த்தும் 'சரி, அப்புறம்' என்ற இந்த வார்த்தைக்கு கோகுலனால் அர்த்தம் கண்டுபிடிக்க முடியவில்லை. ஆகையால் அவன் பேசாமலிருந்தான். நிமாயி பாபு மெள்ள பீடிகை போட்டுக் கொண்டு தொடங்கினார்.

'கோகுல், இவள் என் மகள். நீ என் மருமகன். நீங்கள் இருவரும் அழுது அங்கலாய்த்து என்னை வற்புறுத்திப் புயலில் சிக்கியுள்ள இந்தப் படகின் துடுப்பை என் கையில் கொடுக்க வேண்டுமென்று என்னை அழைத்திருக்கிறீர்கள். சரி. நானும் அதை ஏற்றுக் கொள்ள முடியும்! ஏற்றுக் கொள்ளவும் போகிறேன். ஆனால் கோகுல்! நீ உறுதியாக நிற்காவிட்டால் காரியம் நடக்காது. உனக்கு நான் போடும் நிபந்தனை ஒன்றுதான். அதாவது நான் 'உட்காரு' என்று சொன்னால் அந்த இடத்தில் நீ உட்கார்ந்துவிட வேண்டும். 'நில்' என்று சொன்னால் நீ நிற்க வேண்டும். அப்போதுதான் இந்தப் பயங்கரக் கடலை நான் கடக்க முடியும். விநோதன் ஹஜாரிபாக்கில் இருந்தான் என்பது போன்ற அபத்தங்களைக் கூறிக் கொண்டிருந்தாய். இப்போது என்ன நடக்கிறது? நாமே நம் தலையில் மண்ணை வாரிப் போட்டுக் கொள்கிறோம் என்பதை நீ அறிந்து கொள்ளவில்லையே?''

தந்தையின் விளக்கவுரையைக் கேட்டு மனோரமா நெகிழ்ந்து போய்ப் படபடப்புடன், ''அப்பா, அதுதானே நடந்து கொண்டிருக்கிறது. அதற்காகத்தானே உன்னை வாழ வைத்தேன். எங்களுக்கு ஒன்றும் தெரியாது. நீங்கள் என்ன சொல்கிறீர்களோ, செய்கிறீர்களோ, அதுதான் இனிமேல் நடக்கும். நீங்கள் என்ன செய்தீர்கள், என்ன செய்யவில்லை என்பதைக் கூட இனி நாங்கள் கேட்க மாட்டோம்.

நிமாயி பாபு மகிழ்ச்சி அடைந்தவராய் ''சரிதான் அம்மா. இதைத்தான் நான் விரும்புகிறேன். வம்பு வழக்குகள் எத்தனையோ இருக்கிறது. நீ கேள்விப்பட்டதில்லையா? உன் வீட்டில் வம்பு வழக்கு வரட்டும் என்று தன் விரோதியைப் பார்த்துச் சிலர் சாபமிடுவார்களே. அந்த மாதிரி வம்பும் வழக்கும் இப்போது உங்கள் வீட்டுக்குள் வந்து புகுந்து விட்டது. என் புத்தி திடமாக இருக்கிறது. ஆகையால் உங்களைக் கரை சேர்த்து விட்டுத்தான் கிளம்ப வேண்டும் என்று துணிந்து விட்டேன். இதனால் எனக்கு என்ன வந்தாலும் சரி! பாதகமில்லை. நான் ஒவ்வொருவராக இவர்கள் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளாவிட்டால் என் பெயர் நிமாயி அல்ல!'' என்றார். இதைக் கூறிவிட்டு அவர் முகத்தை வைத்துக் கொண்ட பாவனையில் மிளிர்ந்த கர்வம், வாட்டர்லூ போரில் வெற்றி கண்டு வந்த வெல்லிங்டன் முகத்தில் கூட ஏற்பட்டிருக்காது.

தந்தையும் மகளும் பேசிக் கொண்ட வார்த்தைகளில் ஓர் எழுத்துக் கூட அவனுக்குப் புரியவில்லை. யார் வீட்டில் வழக்குப் புகுந்திருக்கிறது? யாருடைய கழுத்தைப் பிடித்து யார் வெளியே தள்ள வேண்டும்? யாருக்கு நாசகாலம் வந்திருக்கிறது என்பதைப் பற்றி ஒன்றுமே விளங்காமல் அவன் கல்லாய்ச் சமைந்து நின்ருன். அப்போது, நிமாயி சொன்ஞர் ''கோகுல்! நீ ஏன் நின்று கொண்டிருக்கிருய். சற்று நிம்மதியாக உட்காரு, இரண்டொரு வார்த்தைகள் பேச வேண்டும்.''

கோகுலன் நின்ற இடத்திலேயே உட்கார்ந்து விட்டான். மாமஞர் பேசலானுர். ''கோகுல் இது உங்களுக்குத் தக்க தருணம். செய்ய வேண்டியதை இப்போதே செய்துவிடு. படுநாச வழக்கு ஒன்று வந்தே தீரும் என்பது கண்முன் நி[illegible]மாகக் தெரிகிறது. வரட்டும்! அதற்கு நான் பயப்படவில்லை. ஹாட்கோலாவிலுள்ள வக்கீல் ஜத்துபாபுவும் தாரிணி முன்சீப்பும் நன்ருக அறிவார்கள். நிமாயி ராயின் பெயரைக் கேட்டாலே பெரிய பெரிய வக்கீல், பாரிஸ்டர்களெல்லாம் நடுங்குவார்கள். இவன் என்ன நேற்றுப் பையன்! ஏதோ நாலு ஆங்கில எழுத்தைப் படித்து விட்டதால் என்ன செய்துவிட முடியும்?''

கோகுலனுல் பொறுக்க முடியவில்லை. அவன் பயந்து கொண்டே, சற்றுத் தாழ்மையுடன் ''நீங்கள் யாரைப் பற்றிச் சொல்கிறீர்கள்? இது யாருடைய வழக்கு'' என்று கேட்டான்.

நிமாயி ராய் பேயறைந்தவர் போல் ஆஞர். கோகுலன் வார்த்தைகளைக் கேட்டு அவர் பெரும் வியப்பில் ஆழ்ந்தவராய் அவன் முகத்தையே பார்க்கலானுர். மனோரமா ஆத்திரமும் பதட்டமும் அடைந்தவளாய் ''பார்த்தீர்களா அப்பா! நான் சொன்னேன்! சரியாக இருக்கிறது பாருங்கள். யாருடைய வழக்கு என்று கேட்கிருரே இவர்? அப்பா! நான் உனக்குச் சத்தியம் செய்து சொல்வேன். இவரைப் போல அப்பாவி மனிதன் இந்த பூலோகம் முழுதும் தேடினுலும் கிடைக்க மாட்டான். இவரை ஏமாற்றி, மைத்துனர் சொத்துக்களைப் பிடுங்கிக் கொண்டார் என்ருல் இதில் அதிசயம் ஒன்றும் இல்லை. நீங்கள் வந்திருக்கிறீர்கள். கொஞ்சம் நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது. இல்லை என்ருல் ஒரு வருஷத்திற்குள் உன் பேரன் பேத்திகள் தெருவில் பிச்சை எடுக்க நேரிட்டிருக்கும்'' என்ருள்.

நிமாயி பெருமூச்செறிந்து கொண்டு ''அப்படித்தான் தோன்றுகிறது. அது இருக்கட்டும். இனி அந்தப் பயம் வேண்டாம். நான் வந்து விட்டேன். முதலில் உன் கடையில் வேலை பார்க்கும் இந்த சக்கரவர்த்தியை வேலையினின்றும் நீக்கப் போகிறேன். இவர்களெல்லாம் பாலுக்கும் காவல், பூனைக்கும் தோழன்! தெரிந்ததா? இவர்களெல்லாம் உள்ளுக்குள் விநோதனுக்கு உடந்தையாக இருப்பவர்கள். அப்படி இல்லை என்ருல் என் பெயரை மாற்றிக் கொள்கிறேன். மனிதரின் நிழலைப் பார்த்தே அவர்கள் மனத்தைப் புரிந்து கொண்டு விடுபவன் நான். என்னிடமா பலிக்கும்?'' என்ருர். இதைக் கூறிவிட்டு மகளையும் மருமகனையும் ஒரு முறை பார்த்தார்.

மனோரமா உடனே தன் சம்மதத்தைத் தெரிவித்தாள் ''ஆமாம்! ஆமாம்! உடனே அவரை நீக்கிவிடுங்கள். அப்பா எனக்குத் தெரியும். நான் என்ன செய்வேன்? தெரிந்தும் தெளியாதவள் போல் இருக்கிறேன். உங்களுக்கு விருப்பமானவர்களை வைத்துக் கொள்ளுங்கள். பிடிக்காதவர்களை விரட்டுங்கள்! நாங்கள் அதைப் பற்றி ஒன்றும் சொல்ல மாட்டோம்!'' என்ருள்.

இவ்வளவு நேரத்திற்குப் பிறகு கோகுலனுக்கு விஷயம் என்ன வென்று விளங்கியது. தன் தம்பி விநோதன் தன் மீது வழக்குத் தொடரச் சூழ்ச்சி செய்து கொண்டிருக்கிருன். இவர்கள் அவன் கருத்தை நன்ருகப் புரிந்து கொண்டு விட்டார்கள். தானே ஒன்றும் அறியாதவனுய் அந்தத் தம்பியை மகிழ்விக்க அவன் பின்னுல் ஓடிக் கொண்டிருக்கிருன் என்பதை ஒருவாறு புரிந்து கொண்டான்.



கோபத்தினால் அவன் உள்ளம் கொதித்தெழுந்தது. ஆனால் ஒரு கண நேரந்தான். அடுத்த கணம் அவன் உள்ளக்கனல் அவிந்து சாம்பலாயிற்று. அவனைச் சுற்றி நாற்புறமும் இருள் சூழ்ந்து விட்டது. அவன் பார்வை, புத்தி, உணர்ச்சி யாவற்றையும் அது விழுங்கிவிட்டதைப் போல் இருந்தது. அவன் செவிகளில் பல குரல்கள் ஒன்று சேர்ந்து உரக்கச் சத்தமிட்டு, ''விநோதன் கோட்டில் உன் மீது வழக்குத் தொடர்ந்து விட்டான். வழக்குத் தொடர்ந்து விட்டான்'' கூச்சல் போடுவது போல் இருந்தது.

இதற்குள் நிமாயி சொன்னார் : ''கோகுல்! இப்போது பணத்தைப் பார்த்தால் காரியம் நடக்காது. சாட்சிகளை நம் கைவசப்படுத்திக் கொள்ள வேண்டும். வழக்கின் வெற்றி தோல்வி சாட்சிகளின் கையில்தான் இருக்கிறது, தெரியுமா?'

மாமனார் வார்த்தையை முடிக்கும் முன்னரே கோகுலன் பேசாமல் எழுந்து வெளியே சென்று விட்டான். நிமாயி ராய் தன் மகளைப் பார்த்துச் சொன்னார் : ''இவன் ஒன்றும் பேசவே இல்லையே. கோர்ட்டு, வழக்கு என்றால் பணம் இல்லாமல் நடக்குமா? எதிர்க்கட்சியைச் சேர்ந்த சாட்சிகளைக் கலைப்பதென்றால் அவர்களுக்குப் பணம் கொடுக்க வேண்டாமா? செலவைக் கண்டு பயந்தால் முடியுமா? வெறும் கை முழம் போடாது அம்மா.''

நிமாயி பாபு சாமானியப்பட்டவரா? மனிதரின் நிழலைப் பார்த்தே அவர்கள் மனத்தை அறியக் கூடியவராயிற்றே! அவருக்கு கோகுலன் பேசாமல் சென்றதன் கருத்தைப் புரிந்து கொள்ள அதிக நேரமாக வில்லை.



அவன் பணம் செலவாகும் என்ற பயத்தினாலேயே ஒன்றும் பேசாமல் சென்றான். ஆனால் இதற்காக அவர் கோபித்துக் கொண்டு இந்த ஆபத்து வேளையில் அவர் மகளைத் தனியே விட்டுச் செல்ல முடியுமா? தன் இஷ்டப்படி எவ்வளவு செலவு செய்தாலும் அதைப்பற்றி கணக்குக் கேட்காத மனிதர்கள் இவர்களைத் தவிர வேறு யார் தன்னை அழைக்கிறார்கள்? ஆகையால் இதனால் தனக்குச் சொந்த நஷ்டம் என்று ஏற்பட்ட போதிலும் சரி, இனி இந்த இடத்தை விட்டுப் பின் வாங்க அவரால் முடியாது. முன் வைத்த காலைப் பின் வைக்கும்



கோழையல்ல அவர். கோகுலன் சென்ற பிறகு இவ்வாறு பற்பல விஷயங்களை எடுத்துக் கூறி ஆபத்தில் சிக்கித் தவிக்கும் தன் மகளுக்கு ஆறுதல் கூறலானார்.

சிறு காரணங்களுக்காகக் கூட கோகுலன் இப்போது ஆத்திரப்படலானான். இரவு பூராவும் கண் விழித்து விட்டுக் காலையில் தன் சிறிய தாயாரின் அறையில் வந்து நின்றான். அவனுடைய அந்தக் கோரமான தோற்றத்தைக் கண்டு பவானி பயந்து விட்டாள். அவன் அறைக்குள் காலை வைத்தவுடனே சொன்னான் : ''அடாடா! மாற்றாந்தாய் எப்படிப்பட்டவளாக இருப்பாள் என்பதை இப்போதுதான் புரிந்து கொண்டேன்!''

கோகுலன் இப்போதெல்லாம் அடிக்கடி இம்மாதிரிப் பேசி வந்தான். அத்துடன் வீட்டில் பலவிதமான தகராறுகளும் பூசல்களும் எழுந்து தொல்லை கொடுத்ததாலும் பவானியின் இனிய சுபாவம் கூடச் சற்று மாறி, மன அமைதியை இழந்துவிட்டிருந்தாள். இருந்த போதிலும், வீட்டில் உறவினர்களும் விருந்தினர்களும் நிறைய உடன் இருந்ததால் அவள் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு சுருக்கமாகக் கேட்டாள் :''ஏன் அப்பா! என்ன ஆயிற்று?''

கோகுலன் சீறி விழுந்தான் : ''என்ன ஆக வேண்டும்? நீங்கள் என்ன செய்துவிட முடியும்? விநோதன் என் மீது வழக்குப் போட்டு என் குடியைக் கெடுத்துவிட முடியாது. அதை இப்போதே சொல்லி வைக்கிறேன். நிமாயிராய்! பத்திபாடா நிமாயிராய் — அவரைச் சாமான்யமாக நினைத்து விடாதீர்கள். அவர் லேசில் விட்டு விடுகிறவரல்ல! இதை நன்றாகத் தெரிந்து கொள்ளுங்கள்!'' என்றான்.

பவானி பொங்கி எழுந்த கோபத்தை மறந்து ஆச்சரியத்துடன் ''விநோதன் வழக்குத் தொடரப்போகிறான் என்று உன்னிடம் யார் சொன்னார்கள்?'' என்று கேட்டாள்.

எல்லோரும் சொல்கிறார்கள். விநோதன் என்மீது வழக்குப் போடப் போகிறான் என்பது எல்லோருக்கும் தெரிந்திருக்கிறது.

''அப்படியா? எனக்குத்தெரியவில்லையே!''

''அப்படியா? தெரியுமா, தெரியாதா என்பதை நாங்கள் பார்த்துக் கொள்கிறோம்.''

இதைக் கூறிவிட்டுக் கோபத்துடன் கோகுலன் அங்கிருந்து புறப்பட்டவன் மீண்டும் திரும்பி நின்றான். திடீரென்று அவன் வாயினின்றும் நிமாயி பாபு சொன்ன வார்த்தைகள் வெளிவந்து விட்டன. ''உன் போன்ற விரோதிகளை இந்த வீட்டில் வைத்துக் கொண்டிருக்கவே கூடாது'' என்றான்.

ஆனால் இதைக் கூறியதுமே கோபம் நிறைந்த அவனுடைய ருத்ர உருவம் பயத்தினால் நிலைகுலைந்து சாய்ந்தது. வேடன் கை வில்லின் நாண் இறுக்கப்பட்டவுடன் மிருகம் பயந்து நடுங்கி திசை தெரியாது ஓடுமே அந்த மாதிரி கோகுலன் தன் தாயின் முன்னின்று பயந்து நடுங்கி ஓடினான். சொல்லத்



தகாத கடுஞ்சொல்லைக் கூறிவிட்டோம் என்பதை அவன் மனம் உணர்ந்துவிட்டது. அதனால் அன்று பகல், அன்று இரவு அவன் எங்கே இருக்கிறான் என்பதே தெரியவில்லை. அவன் குரல் கூட எங்கும் கேட்கவில்லை. வந்திருந்த உறவினர்கள் சாப்பிடும் நேரத்தில் கூட அவனை அங்குக் காணவில்லை. பவானி இதைப் பற்றிக் கேட்ட போது, ''பெரிய பாபு ஏதோ பெரிய விவகாரம் ஒன்றை முடிக்கப் போயிருக்கிறார். எப்போது திரும்புவேன் என்று யாரிடமும் எதுவும் கூறிவிட்டுப் போகவில்லை'' என்று கூறினார்கள். உடனே நிமாயி பாபு எஜமானன் பதவியை ஏற்றுக் கொண்டு வந்திருந்தவர்களை உபசரிக்கலானார். அதில் சற்றும் குறைவின்றிக் கவனித்துக் கொண்டார். வந்திருந்த விருந்தினர்களுடன் விநோதனும் அமர்ந்து பேசாமல் சாப்பிட்டு விட்டு எழுந்தான்.

புயல் அடிக்கும் முன் இயற்கை கலகலப்பின்றி அசையாது நெட்டுயர்த்தி நிற்பது போல், விருந்தினர் கூட்டம் நிறைந்திருந்தும் அந்த வீட்டில் விருப்பமற்ற ஓர் அமைதி நிலவியது. அசுப காரியம் நடக்கும் வீட்டில் இந்த அமைதி மேலும் ஒருவித பயங்கரமான சூழ்நிலையைப் படர விட்டிருந்தது. ஒருவருக்கும் இதன் காரணம் விளங்கவில்லை. இனம் புரியாத ஒரு தயக்கத்துடன் பணி செய்பவர்கள் இங்குமங்கும் சுற்றிக் கொண்டிருந்தனர். சிரார்த்த காரியத்துக்கு வந்தவர்கள் ஒவ்வொருவராக விடை பெற்றனர். கோகுலனின் அத்தை தன் குழந்தைகளை அழைத்துக் கொண்டு பர்த்வான் திரும்பிச் சென்றாள்.

விநோதன் வாசல் பக்கம் இருந்த தன் அறையிலேயே காலையிலிருந்து மாலை வரை அமர்ந்திருந்தான். ஒருவரிடமும் ஒன்றும் பேசுவதில்லை. பவானி ஒன்றும் புரியாமல் பிரமையிலிருந்து தன் அறையிலேயே அமர்ந்திருந்தாள். கோகுலன் எங்கே ஓடி ஒளிந்தான், அவன் எங்கே இருக்கிறான் என்பதைக் கண்டு பிடிக்க முடியவில்லை. நாலைந்து தினங்கள் இவ்வாறு கழிந்தன. பார்ப்பவர்களுக்கு இந்த வீட்டில் மனோரமாவையும் அவள் குழந்தைகளையும் தவிர வேறு ஒருவருமே இல்லை என்பது தோன்றியது.

## 9

நிமாயி ராய் கல்கத்தாவிலுள்ள தமது தொடர்புகளை முடிவு கட்டிக் கொண்டு வரச் சென்றிருந்தார். நியமதல்லேவாலா நிறுவனத்தை அதோ கதியாக விட்டு விட்டு மகளையும் மருமகனையும் காப்பாற்றிக் கரை சேர்க்க அன்று அதிகாலையிலேயே இளைய மகனுடன் திரும்பி வந்திருந்தார். அவன் எதற்காக வந்திருக்கிறான் என்பது ஒருவருக்கும் புரியவில்லை. ஆயினும் தன் சகோதரியையும் மைத்துனனையும் பார்ப்பதற்காக மட்டும் அவன் வரவில்லை என்பது விளங்கியது.

திறமைசாலியான தன் மாமனார் இல்லாததால் ஆதரவும் உற்சாகமும் இன்றி கோகுலன் அயர்ந்து கிடந்தான். மனோரமா மட்டும் ஆர்ப்பாட்டத்துடன் வீட்டைச் சுற்றிச் சுற்றி

வந்து கொண்டிருந்தாள். சாப்பாட்டுக்குப் பிறகு எல்லோரும் மனோரமாவின் அறைக்குள் வந்து அமர்ந்தனர். சிறிது நேரம் விவாதித்த பிறகு ஒருவாறு தீர்மானித்துக் கொண்டனர். ரஸிக சக்ரவர்த்தி முதல் பலியானார். அவரை வேலையினின்று நீக்கு முன் அவருடைய கணக்கு வழக்குகளைப் பார்க்க முற்பட்டனர். சக்ரவர்த்தி பாவம் ஏழை மனிதன். அப்போது அவருடைய மனமும் குழம்பி இருந்தது. ஆகையால் அவரால் இவர்கள் கேட்ட கேள்விகளுக்கெல்லாம் சரியான பதில் அளிக்க முடியவில்லை. கணக்குகளையும், சரிவர ஒப்புவிக்க முடியவில்லை. தந்தையும் மகனும் திரும்பத் திரும்ப அதட்டி கேள்விக்கு மேல் கேள்வி போட்டு அவரை வதைத்தனர். அவர்களுடைய சொற்களால் புண்பட்ட அந்த ஏழை மனிதன் அவர்கள் கூறியதை ஒப்புக் கொண்டு தன்னைத் தானே திருடன் என்று நிரூபித்துக் கொண்டார்.

முடிவாக நிமாயி பாபு சொன்னார்: ''நான் இல்லை. நீ எவ்வளவு ரூபாயைச் சாப்பிட்டு ஏப்பம் விட்டாயோ? இனி நீ தின்ன முடியாது. போய்ச் சேர். உம்மை வேலையினின்றும் நீக்கி விட்டேன்'' என்றார்.

சக்ரவர்த்தியின் இரு கண்களில் கண்ணீர் வழியலாயிற்று. அவர் சொன்னார் : ''பாபுஜி! நான் இன்று நேற்று ஊழியன் அல்ல. எஜமானுக்கு என்னைப் பற்றி நன்றாகத் தெரியும்!''

கோகுலன் மௌனமாகத் தலை குனிந்து கொண்டான். நிமாயி ராயின் மகன் உரக்கச் சத்தமிட்டுப் பேசினான்: ''ஏன் ஐயா! நீர் என்ன அப்பாவைக் கூட உங்கள் எஜமானைப் போல் கோயில் மாடு என்று நினைத்துக் கொண்டீரா? போதும். சும்மா வேஷம் போடாதீர்! போய்ச் சேரும்.''

அந்த வாலிபனின் மரியாதையற்ற கடுஞ் சொற்களைக் கேட்டு மனம் நொந்த சக்ரவர்த்தி தன் கண்ணீரைத் துடைத்துக் கொண்டார். சற்று நேரம் மௌனமாக நின்றார். பிறகு கோகுலனிடம் ''பெரிய பாபு, என்னுடைய நாலு மாதச் சம்பளம்?'' என்றார்.

கோகுலன் சட்டென்று பதில்சொன்னான்: ''ஆமாம்! ஆமாம்! சக்ரவர்த்தி. அது பாக்கி இருக்கிறது. அதைத் தவிர இன்னும் ஏதாவது...''

கோகுலன் வார்த்தையை முடிக்கு முன் நிமாயி தன் இடது கையை நீட்டி அவனைத் தடுத்துவிட்டு, கண்டிப்பான குரலில் நீ சற்றுப் பேசாமல் உட்காரு கோகுல்!'' என்று கூறி விட்டு சக்ரவர்த்தியிடம் ''அவர் அல்ல எஜமான். இப்போது நான் எஜமான். நான் சொல்வதுதான் நடக்கும். உனக்கு சம்பளம் எதுவும் கிடையாது. உன்னை நான் ஜெயிலுக்கனுப்பாமல் விடமாட்டேன். அதுவே உன் அப்பன் செய்த புண்ணியம்'' என்றார்.

சக்ரவர்த்தி மேற்கொண்டு ஒன்றும் பேசவில்லை. சென்று விட்டார். அது வரை ஒன்றும் பேச முடியாமல் மனோரமாவுக்கு வயிறு வெடித்துவிடும் போல் இருந்தது. சக்ரவர்த்தி சென்றதும் அவள் முகத்தைத் தூக்கிக் கொண்டு கணவனைப் பார்த்துச் சொன்னாள்: ''இனிமேல் நீங்கள் அப்பா 'விஷயத்தில் தலையிட்டால், ஒன்று நான் கழுத்தில் சுருக்கு மாட்டிக் கொண்டு சாவேன். இல்லை, எல்லோரையும் அழைத்துக் கொண்டு எங்க அப்பா வீட்டுக்குப் போய் விடுவேன்.''



கோகுலன் பதில் பேசவில்லை.

''சரி, அப்பா! அவன் போய்த் தொலைந்தான். நீ நமது நந்தலாலை ஏன் கடையில் பொறுப்பில் போடக் கூடாது?'' என்றாள்.

நிமாயி சொன்னார்: ''இரு அம்மா! அதற்காகத்தானே அவனை அழைத்துக் கொண்டு வந்திருக்கிறேன். நான் இங்கே அதிக நாள் தங்க முடியாது. அதனால்தான் அம்மா நந்தலாலுக்குச் சகல விவரங்களையும் சொல்லி அவனைத் தயார்ப்படுத்தி இங்கே வைத்து விட்டு போகலாம் என்று யோசிக்கிறேன். எப்படி இருந்தாலும் அவன் என் பிள்ளை அல்லவா?''

''அப்படியே செய்யுங்கள் அப்பா! அதனால்தான் நான்....''

திடீரென்று மனோரமா தன் தலை முக்காட்டை இழுத்து விட்டுக் கொண்டு மௌனமானாள். ரஸிக சக்ரவர்த்தி அறைக்கு முன்னால் வந்து நின்று கொண்டிருந்தார். ''பாபுஜி! அம்மா வந்திருக்கிறார்கள்.''

திடீரென்று தாய் வந்திருக்கிறாள் என்பதைக் கேட்டு கோகுலன் வெலவெலத்துப் போனான். ஏழெட்டு தினங்களாக அவன் அவளைச் சந்திக்கவே இல்லை. பவானி கதவின் மறைவில் நின்று கொண்டு, சுபாவமான குரலில் ''கோகுல்!'' என்று அழைத்தாள்.

'' என்ன அம்மா?'' என்றான் கோகுல்.

பவானி மறைவில் நின்றபடியே முன் போல் சுபாவமான குரலில் விளக்கமாகச் சொன்னாள் : ''இந்த மாதிரி பைத்தியக்காரத்தனமெல்லாம் உன்னைச் செய்யச் சொல்பவர்கள் யார்? சக்ரவர்த்தி நெடுநாளைய ஊழியர். அவருடைய வாழ்நாள் வரை அவரை இங்கு வேலைக்கு நியமித்திருக்கிறார் உன் தந்தை. சாவியையும் கணக்குப் புத்தகங்களையும் கொடுத்து அவரை கடைக்கு அனுப்பு!''

அந்த அறையில் இடி விழுந்திருந்தால் கூட இவ்வளவு பயங்கரமான ஆச்சரியம் ஏற்பட்டிருக்காது! பவானி சிறிது நேரம் சும்மா இருந்தாள். பிறகு ''மற்றொரு விஷயம்! சம்பந்தி அவர்கள் தயை கூர்ந்து இங்கே வந்திருக்கிறார் என்றால், மற்ற உறவினர்களைப் போல் ஆதரவுடன் இரண்டொரு தினங்கள் இருந்து எல்லாவற்றையும் பார்க்கட்டும், கேட்கட்டும். ஆனால் நமது கடையில் திருட்டுப் போகிறதா இல்லியா என்பதைப் பற்றி எல்லாம் அவர் கவலைப்பட வேண்டியதில்லை. சக்ரவர்த்தி! நீங்கள் தாமதம் செய்யாதீர்கள். கடைக்குச் செல்லுங்கள். வெளி மனிதர் யாரும் வந்து என் கடையில் உட்கார்ந்து கணக்கைப் புரட்டிப் பார்ப்பதை நான் விரும்பவில்லை. கோகுல்! சாவியை அவரிடம் கொடு! அவர் போகட்டும்'' என்று கூறிவிட்டு அவள் யாருடைய பதிலையும் எதிர்பார்க்காமல் வந்ததைப் போலவே வேகமாகச் சென்று விட்டாள். அவள் செல்லும் காலடியோசை அறைக்குள் கேட்டது. திகைப்பு மாறியதும் நிமாயி ஒரு வரட்டுச் சிரிப்புடன், ''சரிதான்.

அண்டை வீட்டுக்காரன் நெய்யே என் பெண்டாட்டி கையே'' என்றானாம். இந்த அம்மாள் உத்தரவு போடுவதைப் பார்த்தாயாடா அப்பா கோகுல்?'' என்றார்.

ஆனால், கோகுலன் பதில் பேசவில்லை. நிமாயியின் மகன் பதில் சொன்னான் : ''அப்பா இதெல்லாம் தெரிந்த விஷயம்தானே! நீயே இங்கே இருந்தால் ஒருவரும் திருட முடியாது. பேஷ் நல்ல உத்தரவு ஐயா இது!''

நிமாயி தன் மகன் கூறியதை ஆமோதித்து ''ஆமாம்! அது உண்மைதான்'' என்றார்.

இதற்குள் நிமாயி பாபுவின் பார்வை சக்ரவர்த்தியின் பக்கம் திரும்பியது. அவரைக் கண்டதும் ஆத்திரம் பொங்க முகத்தைக் கோணிக் கொண்டு, ''ஏன் அப்பா! ஏன் நின்று கொண்டிருக்கிறாய். போய்த் தொலையேன். நம்பிக்கைத் துரோகி! உன்னை ஜெயிலுக்கு அனுப்பாமல் விட்டேனே அது தவறு. நிற்காதே என் எதிரில். போகட்டும் பிராமணன் ஒழிந்து போகட்டும் என்று இருந்தேன். ஏதோ செய்வதைச் செய்துவிட்டாய். இன்னும் ஐந்தை பத்தோ வாங்கிக் கொண்டு போய்ச் சேர். இன்னுமா நின்று கொண்டிருக்கிறாய்? சரி! சரி! உன்னைப் பெரிய வீட்டுக்கு அனுப்பி வைக்க வேண்டியதுதான்'' என்றார்.

கணவனின் முகபாவத்தைப் பார்த்து மனோரமாவுக்குப் பேச்சுத் துணிவு வரவில்லை. கோகுலன் தலை குனிந்து நின்றவன் அப்போதும் அப்படியே கற்சிலைபோல் நின்றிருந்தான். சக்ரவர்த்தி அவர்கள் பேசியதற்கு எதற்கும் பதில் கூறாமல் தன் எஜமானனைப் பார்த்து வணக்கத்துடன் ''பெரிய பாபு! நான் கணக்குப் புஸ்தகத்தை எடுத்துக் கொண்டு போகிறேன். பெட்டிச் சாவியைக் கொடுங்கள்'' என்றார்.



கோகுலன் ஒன்றும் பேசவில்லை. இடுப்பில் செருகி இருந்த சாவிக் கொத்தை எடுத்து சக்ரவர்த்தியின் முன் எறிந்தான். அவர் சாவிக் கொத்தை எடுத்துக் கொண்டு கணக்குப் புஸ்தகங்களைக் கையில் இடுக்கிக் கொண்டு, வந்த சிரிப்பை வெளிக்காட்டாமல் அங்கிருந்து புறப்பட்டார். அவர் இம்மாதிரி சென்றதன் கருத்து வெளிப்படையானதுதான். அதாவது நிமாயி பாபுவின் முகத்தில் யாரோ கரியைத் தடவினார்கள் என்பதே.

இதன் பிறகு அந்த மந்திராலோசனைக் கூடத்தில் நிலவிய காட்சி உண்மையிலேயே வர்ணிக்க இயலாதென்றே கூற வேண்டும். எதிர்பாராத விதமாக தன் தந்தைக்கும் சகோதரனுக்கும் ஏற்பட்டு விட்ட அவமானத்தைக் கண்டு மனோரமா இடிந்து பேச்சு மூச்சற்றுப் போனாள். தன் கணவனை மனம் போனபடிப் பேசி அவமானம் செய்தாள். தன்னால் முடிந்த அளவு ஆத்திரத்தைக் கொட்டி நீலித் தனம் செய்தாள். பிறகு அவனிடம் கெஞ்சினாள். காலைப் பிடித்துக் கொண்டாள். முடிவில் வாய் விட்டு ஒப்பாரி வைத்து அழவும் செய்தாள். இவ்வளவு செய்தும் தன் தந்தைக்கு சாதகமாக ஒரு வார்த்தை கூட அவன் வாயினின்றும் வரவழைக்க முடியாமல் போகவே, பேசாமல் சேலைத்தலைப்பினால் முகத்தை மூடிக் கொண்டு சவம்போல் படுத்துவிட்டாள். வெட்கத்தினாலும், துக்கத்தினாலும் கோகுலன் உள்ளம் குமுறியது. அவன் அழுகை பொங்கும் குரலில் ''அம்மா என்னிடம் விரோதித்துக் கொண்டு இப்படி உத்தரவிடுவாள் என்று எனக்கெப்படித் தெரியும்?'' என்றான்.

நிமாயி பெருமூச்சு விட்டுக் கொண்டு, ''சரி! போ நல்லதாயிற்று. உயிர் தப்பியது; பெரும் தொல்லையிலிருந்து தப்பினோம். ஆனால் இங்கே பார் மனோரமா! உன்னிடம் ஒன்று மட்டும் சொல்லி வைக்கிறேன். என்றைக் காவது ஒரு நாள் நீ உன் குழந்தைக் குட்டிகளுடன் தெருவில் பிச்சை எடுக்க நேரிடும். அது நிச்சயம். அப்போது, அப்பா நம்மைத் திரும்பிக் கூடப் பார்க்கவில்லையே என்று என் மீது குறை கூறாதே. ஒன்றை மட்டும் தெரிந்து வைத்துக் கொள். மகளானாலும் சரி, மருமகனானாலும் சரி, இந்த நிமாயி ஒரு தரம் சொல்லி விட்டால் பிறகு திரும்பி வரும் பேர்வழியல்ல!''

இதைக் கூறிவிட்டு நிமாயி தன் மருமகன் பக்கம் கூர்மையான பார்வையை வீசினார். ஆனால் அவருடைய இந்தக்கோபப்பார்வையை அவரது மகனைத் தவிர வேறு யாரும் கவனிக்கவில்லை. அப்போது நிமாயி தன் குரலை இன்னும் கடுமையாக்கிக் கொண்டு சொன்னார் : ''இது வரை நான் கோபித்துக் கொள்ளவில்லை. ஒரு தரம் கோபம் வந்துவிட்டால் பிறகு இந் நிமாயி ஒருவருக்கும் கட்டுப்பட மாட்டான். பிறகு மும்மூர்த்திகள் வந்தாலும் சரி என்னைத் தடுக்க முடியாது. இப்போது நீங்கள் இருவரும் தனிமையில் நன்றாக யோசித்து முடிவு செய்யுங்கள். அடே நந்தலால்! மணி இரண்டரை ஆகிறது அல்லவா! நான் மூணரை மணி வண்டிக்குப் புறப்படப் போகிறேன். நமது சாமான்களை எடுத்துக் கட்டி வை. உனக்குத் தான் தெரியுமே, இந்த உலகமே புரண்டாலும் உன் தந்தையின் பேச்சு மாறாது என்பது!''

இவ்வாறு கூறிவிட்டு நிமாயி ராய் கர்வத்துடன் தன் மகனின் கைகளைப் பற்றிக் கொண்டு—தன் மகளுக்கும், மருமகளுக்கும் ஆலோசனை செய்ய ஒரு மணி நேரம் அவகாசம் அளித்து விட்டு—அங்கிருந்து சென்றார்.

## 10

நிமாயி ராயின் ஆசையில் மண் விழுந்தது. அவருடைய திட்டங்கள்யாவும் தவிடு பொடியாகிவிட்டன. அதனால் அவர் கடும் கோபம் கொண்டார். வெளிப்படையாக மிரட்டலானார். ''என் வேலையை விடச் சொல்லி நீங்கள் இங்கே அழைத்து வந்தீர்கள். அதனால் ஏற்பட்ட நஷ்டத்தை நீங்கள் ஈடு செய்ய வேண்டும்'' என்றார். இதன் மத்தியில் உபாத்தியாயர் பானர்ஜியை தன் பக்கம் சாதகமாக இழுத்துக் கொண்டார். அவர் கோகுலனிடம் வந்து சொன்னார் : ''கோகுல்! நீ ஒரு முட்டாள். குருட்டுப் பயல். உன்னுடைய நன்மை தீமையைப் பற்றி உனக்குத் தெரியவில்லை. நிமாயி பாபுவை நீ சரிவரப் புரிந்து கொள்ளவில்லை. நீ இந்த மாதிரி அவரை அவமானம் செய்தால், அவர் சென்று வினோதனுடன் சேர்ந்து கொள்வார். உன்னை படாதபாடு படுத்திவிடுவார்!''

இதைக் கேட்ட கோகுலன் வருத்தத்துடன் சொன்னான்: ''மாஸ்டர் ஸாஹப்! நீங்களே சொல்லுங்கள். நான் என்ன செய்ய முடியும். இவர்கள் இந்த வீட்டில் இருக்க அம்மா சற்றும் சம்மதிக்கவில்லையே. அத்துடன் நிமாயி ராய் கடைக்குள் நுழையக் கூடாது என்று சக்ரவர்த்திக்கு உத்தரவிட்டிருக்கிறாள்.''

மாஸ்டர் கேட்டார்: ''அதிருக்கட்டும் கோகுல். நீ இதைச் சொல். இந்த வியாபாரம், இந்தச் சொத்துக்கள் யாவும் உன்னுடையவையா? இல்லை உன் தாயாருடையவையா? இன்னொரு விஷயம் தெரியுமா? இப்போது உன் தாய் உன் விரோதியுடன் போய்ச் சேர்ந்துவிட்டாள்.''

மாஸ்டர் பேசிய வார்த்தைகளைக் கேட்டு கோகுலன் தலையை அசைத்ததும், அவருக்கு மகிழ்ச்சி ஏற்பட்டுவிட்டது. அவர் ஆரம்பித்து விட்டார்: ''அப்படியானால், நீ இந்த மாதிரி பைத்தியக்காரத்தனம் செய்யாதே. நீ உன் பணம் காசு, வியாபாரம், யாவற்றையும் உன் மாமனார் ராயிடம் ஒப்படைத்து விட்டுப் பேசாமல் அமர்ந்து வேடிக்கை பார்த்துக் கொண்டிரு. நான் சொல்வதை விட்டுத் தள்ளு. இந்த மாதிரி ஒரு திறமை வாய்ந்த மனிதனை இந்த வட்டாரத்தில் நீ தேடினாலும் காண முடியாது.''



''அது வாஸ்தவம் மாஸ்டர்! எனக்கும் நன்றாகத் தெரியும். ஆனால் அப்பா இறக்கும் போது உன் தாயைக் கேட்காமல், நீ எந்தக் காரியமும் செய்யக் கூடாது என்று சொல்லி விட்டுப் போயிருக்கிறாரே!'' என்றான் கோகுலன்.

பானர்ஜி முகத்தைச் சிடுத்துக் கொண்டு, ''அம்மாவைக் கேட்காமல் ஒரு காரியமும் செய்யக் கூடாது என்று அப்பா சொல்லிவிட்டு போனார். ஆனால் உன் தாயாரே உனக்குச் சத்ருவாக மாறுவாள் என்பது உன் தந்தைக்குத் தெரியுமா? உன் அம்மாவின் பேச்சைக் கேட்டு, நடந்து உன் சொத்துக்கள் பூராவும் இழக்க விரும்புகிறாயா? சொல்லு!'' என்றார்.

இந்த மாதிரிப் பிரச்சனைகளுக்கெல்லாம் கோகுலன் பதில் சொல்ல முடியுமா? அவன் தலைகுனிந்து பேசாமல் உட்கார்ந்திருந்தான். நிமாயி ராய் மறைவில் நின்று இதை எல்லாம் கேட்டுக் கொண்டிருந்தார். இப்போது அவர் முன்னால் வந்து நின்றார். இந்த இரண்டு மகா நதிகளின் முன் கோகுலன் படுதோல்வி கண்டு, புறமுதுகிட்டு ஓடிக் கடலில் வீழ்ந்தான். அவன் தலைகுனிந்து பதில் பேசாமல் இருப்பதைக் கண்ட இந்த வாதாபி வில்வலர்கள் தங்களுக்குள் மகிழ்வெய்தியவர்களாய் அவனுக்கு ஏற்பட்ட நன்மதியை பாராட்டலானார்கள்.

பானர்ஜி வீட்டுக்குப் புறப்பட ஆயத்தமானதும், தன் விருப்பம் நிறைவேறிய நிமாயி ராய் அவர் காலடியில் விழுந்து சாஷ்டாங்கமாக நமஸ்காரம், செய்து அவர் பாதத் தூளியை எடுத்துத் தலைமீது போட்டுக் கொண்டார். பானர்ஜியும் அன்புடன் கோகுலனை முதுகில் தட்டிக் கொடுத்து, ''கோகுல்! நான் உன்னை மனப் பூர்வமாக ஆசிர்வதிக்கிறேன். இன்று எப்படி நீ உன் சகல பொறுப்புக்களையும் எங்களிடம் ஒப்படைத்தாயோ, அவ்வாறே நாங்களும் உன் மீது தூளிக் காற்று கூட வீசாமல் பார்த்துக் கொள்வோம். என்ன ராய் அவர்களே, நான் சொல்வது சரிதானே!'' என்றார்.

ராய் பாபுவும் மகிழ்ச்சியால் புளகித்துப் போய் அடக்கத்துடன் நாக் குழற உங்கள் ஆசிர்வாதத்தால், நான் என்ன செய்யப் போகிறேன் என்பதை இங்குள்ளவர்கள் பார்ப்பார்கள். விரோதிகளை இனி இந்த வீட்டில் ஒரு கணமும் இருக்க விட மாட்டேன். இதை இப்போதே உங்களிடம் சொல்லி விடுகிறேன். அது யாராக வேண்டுமானாலும் இருக்கட்டும். என் மருமகனின் தாயானாலும் சரி, சகோதரனாக இருந்தாலும் சரி, இனி தயங்கமாட்டேன். அந்த சக்ரவர்த்திப் பயலை வீட்டை விட்டு விரட்டி விட்டுத்தான், தண்ணீர் குடிப்பேன். அடே, யாரடா அங்கே? போய் அந்தச்சக்ரவர்த்தியைக் கடையிலிருந்து சீக்கிரம் அழைத்துக் கொண்டு வா!'' என உத்தரவிட்டு, இப்போதே தனக்கு மாபெரும் வெற்றி கிட்டி விட்டது போல் கர்ஜித்தார்.

ஆனால் கோகுலன் சங்கையும் வெட்கமும் அடைந்தவனாய், ''வேண்டாம்! வேண்டாம்! அவரை இப்போது அழைக்க வேண்டிய அவசியமில்லை'' என்றான்.

பானர்ஜி தன் இரு கரங்களையும் இரு பக்கம் நீட்டிக் கொண்டு, ''இல்லை கோகுல்! இல்லை! இப்போது நீ முகதாட்சண்யம் பார்த்தால் நடக்காது. அவரை நாங்கள் வைத்துக் கொள்ள முடியாது. அது எவ்விதத்திலும் முடியாத காரியம். அவனுக்கு மண்டைக் கர்வம் ஏறிவிட்டது. எங்களுக்கு அவனைப் பிடிக்கவில்லை என்று நான் சொல்லிவிடுகிறேன்'' என்றார்.

இதற்குப் பதில் கோகுலன் முன்போலவே வணக்கமான குரலில், ''அம்மா, அவர் இருக்க வேண்டுமென்று விரும்புகிறாள். அவளால் நியமிக்கப்பட்டவரை வெளியே அனுப்ப ஒருவராலும் முடியாது. அப்பா எனக்கு அவ்வளவு அதிகாரம் கொடுத்துவிட்டுப் போகவில்லை'' என்றான்.

இதைக் கூறிவிட்டு கோகுலன் அவர்களைப் பார்க்காமல் தலைகுனிந்துகொண்டான். அவனுடைய இந்த ஏமாற்றமான பதிலையும், திடமான குரலையும் கேட்டு இருவரும் ஆச்சரியத்தில் திகைத்துப் போனார்கள். சற்று நேரம் பொறுத்துப் பானர்ஜி கேட்டார்: ''அப்படியானால் அவன் இருக்கத்தான் போகிறானா?''

''ஆமாம்! அவர் மீது நடவடிக்கை எடுக்க எவ்வித அதிகாரமும் இல்லை'' என்றான் கோகுலன். பானர்ஜி பயந்து கொண்டே ''அப்படியானால் உன் மாமனார் ராய் அவர்களின் கதி என்ன ஆவது?'' என்று கேட்டார்.

''அவர் ஊருக்குப் போய்ச் சேரட்டும். அவர்கள் இங்கே இருப்பதை அம்மா சற்றும் விரும்பவில்லை. வேலை போய்விட்டதனால் அவருக்கு ஏற்பட்ட நஷ்டத்தை, அம்மாவிடம் கேட்டுக் கொண்டு அவருக்கு அனுப்பி வைத்து விடுகிறேன்'' என்று கூறிவிட்டு அவர்களுடைய பதிலை எதிர்பார்க்காமல் கோகுலன் அங்கிருந்து அகன்றான்.

இவ்வளவு தூரம் அவமானப்பட்ட பிறகு நிமாயி ராய் இனி ஒரு கணமும் இங்கே இருக்க மாட்டார் என்றே எல்லோரும் நினைத்தனர். ஆனுல் அப்படியொன்றும் நடப்பதாகத்தெரிய வில்லை.

நிமாயி ராயின் கெட்ட எண்ணத்தி ஞல் கோகுலன் ஒவ்வொரு நாளும் துன்பமும், தொல்லையும் அடைந்தான். அவ்வாறே பவானியும் ஒவ்வொரு நிமிஷமும் பயமும் திகிலும் அடைந்துத் தவித்தாள். மருமகளும், அவளுடைய தந்தையும் ஏவி விடும் சொல் அம்புகள் உட்காரும்போதும்,நிற்கும்போதும், சாப்பிடும்போதும் அவள் செவிகளைத் துளைத்து, உள்ளத்தைப் புண்படுத்தின.

பவானியினுல் பொறுக்க முடியவில்லை. அவள் தன் மருமகளை அழைத்து ''ஏன் அம்மா! நான் இந்த வீட்டில் இருப்பதைக் கோகுலன் விரும்பவில்லையா?'' என்று கேட்டு விட்டாள்.

மருமகள் வேண்டுமென்றே பதில் சொல் லாமல் இருந்தாள். அவள் தலை குனிந்து கால் நகத்தால் தரையைக் கீறிக் கொண்டிருந் தாள். சற்று சும்மா இருந்து விட்டு பவானி மீண்டும் சொன்னுள் : ''கோகுலன் அப்படி நினைத்தானுனல் என்னிடம் வந்து நேர்மை யாக இதைச் சொல்லி விடலாமே? உன் தந் தையையும், சகோதரனையும் கொண்டு என்னை இராப் பகல் இப்படி அவமானப்படுத்த வேண்டாமே!''

இவைகளைப் பற்றிக் கோகுலனுக்கு ஒன்றுமே தெரியாது என்பதை அவள் நினைக்க வில்லை. தவிர இந்தச் சதிக் கூட்டம் இவை களை எல்லாம் அவன் காதுக்கு எட்டாமல் செய்து, சந்தடி இன்றி தன் விஷ நாக்கை நீட்டிக் கடித்துக் கொண்டிருந்தது. மருமகள் பழைய மருமகள் இல்லை. ஆகையால் அவள் இப்போது பதில் சொன்னுள் : ''யார் யாரை அவமானம் செய்தார்கள் என்பது இந்த உலகம் பூராவும் தெரியும். நான் என் பொருளைத் திருடன் கையினின்றும் காப்பாற்றி என் தந்தை, சகோதரனிடம் ஒப்படைத்தால் அதைக் கண்டு உங்கள் வயிறு ஏன் எரிய வேண்டும்? ஒருவருக்காக மற்றொருவரை பாழாக்கிவிடுவது சரியா?''

பவானி தன்னை அடக்கிக் கொண்டு மிக அமைதியாக ''ஏண்டி அம்மா! அப்படி நான் யாரைப் பாழாக்கிவிட்டேன்?'' என்று கேட் டாள்.

மனேரமா சொன்னுள் : ''யாரைப் பாழாக்கினீர்களோ அவர்கள் வசைபாடுகிறுர் கள். இதற்கு அவர் என்ன செய்ய முடியும்? இல்லை நான் தான் என்ன செய்ய முடியும்? தன் வினைத் தன்னையே சுடுகிறது. அதற்காகக் கோபித்துக் கொண்டால் ஒன்றும் நடக்காது?''

பவானி ஒன்றும் தோன்றுமல், சிறிது நேரம் அங்கேயே நின்றுள். பிறகு மெள்ளத் தன் அறைக்குச் சென்று படுத்துவிட்டாள். கணவன் இருந்தபோது இருந்த கோகுலனையும் மருமகள் மனேரமாவையும் நினைத்துப்பார்த்த போது, பல நாட்களுக்குப் பிறகு அவள் கண்கள் கண்ணீரை உதிர்த்தன. அன்று அவளால் இதை நினைக்காமல் இருக்க முடிய வில்லை. ''நான் ஒரு முட்டாள். நானே என் தலையில் மட்டுமல்ல—என் மகன் தலையி லும் மண்ணை வாரிப் போட்டுக் கொண்டேன். நான்தானே என் கணவனிடம் வற்புறுத்தி மன்றுடி சொத்துக்கள் யாவற்றையும் கோகு லன் பெயருக்கு எழுதி வைக்கச் சொன்னேன். அப்படிச் செய்யாமலிருந்திருந்தால், இன்று என் நிலைமை இப்படி ஆகியிருக்காது. விநோ தன் எவ்வளவு தான் உதவாக்கரையாக இருந் தாலும், அவன் என்னை இந்த மாதிரி அவமா னப்படுத்தி வருத்தி இருக்க முடியாது.''

* * * *

விநோதன் தன் பிழைப்புக்கு ஏதோ வழி தேடிக் கொண்டிருந்தான். இது ஒருவருக்கும் தெரியாது. அவனுக்குக் கோர்ட்டில் ஒரு உத் யோகம் கிடைத்தது. ஊரில் தெரு முனையில் தனக்கு வசிக்க ஒரு இடத்தை வாடகைக்கு ஏற்பாடு செய்து கொண்டான். அன்று மாலை அவன் வீட்டுக்கு வந்து நாளைக் காலையில் நான் என் புதிய வீட்டுக்குப் போகிறேன் என்பதை அறிவித்தான்.

பவானி ஆவலுடன் எழுந்து உட்கார்ந்து சொன்னுள் : ''விநோதன்! என்னையும் உன் னுடன் அழைத்துச் சென்று விடு. இனி என் னுல் இவர்கள் பண்ணும் அவமானத்தைச் சகிக்க முடியாது. நீ என்னை எப்படி வைத்துக் கொண்டாலும் சரி, நான் மகிழ்ச்சியாக இருப் பேன். எப்படியாவது என்னை இந்த வீட்டி லிருந்து விடுதலை செய்து விடு''. இதைக் கூறிவிட்டு அவள் கோ வென்று கதறி அழுது விட்டாள்.

பிறகு ஒவ்வொன்றுக சகல விவரங்களை யும் கேட்டறிந்தான் விநோதன். வெளியே புறப்பட்டு வரும்போது, வழியில் கோகுலனைச் சந்தித்தான். அவன் கடை வேலைகளைமுடித்துக் கொண்டு வீட்டுக்கு வந்து கொண்டிருந்தான். வேறு சந்தர்ப்பமாக இருந்திருந்தால், விநோ தன் தூரத்தில் அவனைக் கண்டதுமே விலகி, மறுபக்கம் சென்றிருப்பான். இன்று அங்கேயே நின்று விட்டான். கோகுலன் அருகே வந்த தும், ''நாளைக் காலையில் நான் அம்மாவை அழைத்துக் கொண்டு என்னுடைய புதிய வீட் டுக்குச் செல்கிறேன்'' என்றுன்.

கோகுலனுக்கு தூக்கி வாரிப் போட்டது. ''புதிய வீடா? என்னிடம் கேட்காமல், கொள்ளாமல் வீடு பார்த்து விட்டாயா?'' என்று கேட்டான்.

''ஆமாம்! . . .''

''அப்படியானுல் படிப்பை விட்டுவிட் டாய் என்று சொல்லு!''

''ஆமாம!''



இந்தச் செய்தி, கோகுலன் உள்ளத்தில் எத்தகைய வேதனையை மூட்டியது என்பதை மாலை இருளில் விநோதனுல் கண்டுகொள்ள முடியவில்லை. கோகுலன் சிறு வயதிலிருந்தே தன் தம்பி 'எம்.ஏ.' பாஸ் செய்ய வேண்டும் என்று கனவு கண்டு கொண்டிருந்தான். தனக்குத் தெரிந்தவர்கள் வீட்டுப் பிள்ளை யாராவது பரீட்சையில் பாஸ் செய்தால், கோகுலன் மகிழ்வுடன் அவர்களைப் பாராட்டி விட்டு, தன் சகோதரனும் பாஸ் செய்ய

வேண்டுமே என்ற கவலையைத் தெரிவிப்பான். இவனைப் பற்றி அறிந்தவர்கள் மனதிற்குள் சிரித்துக் கொள்வார்கள். மற்றும் சிலரிடம் தன் தம்பி விநோதன் வாங்கிய மெடலைக் காட்டிப் பெருமைப்படுவான்.

அத்தகைய 'எம்.ஏ.' படிப்பை நிறுத்தி விட்டான் என்பதைக் கேட்டதும் கோகுலன் உள்ளத்தில் பழுக்கக் காய்ந்த மழு பாய்ந்ததைப் போல் இருந்தது. துடிதுடித்தான். ஆயினும், அன்று ஒருவாறு தன்னைச் சமாளித்துக் கொண்டு, ''சரி, இருக்கட்டும். புது வீட்டுக்கு அம்மாவை அழைத்துக் கொண்டு போய் வைத்துக் கொண்டு சோறு போட்டு காப்பாற்றுவாயா?'' என்று கேட்டான்.

''ஏதோ, முடிந்த வரை செய்வேன்,'' என்று கூறிவிட்டு விநோதன் சென்றுவிட்டான். அவனும் தன் தாயைப் போல் மிதமாகப் பேசுவான். அவன் தன் அண்ணனிடம், தான் வீட்டுக்குச் சென்று இந்தத் தகவலை தாயிடம் சொல்லிவிட்டு வந்திருக்கிறேன் என்பதைக் கூறவில்லை.

அவன் வீட்டுக்குள் நுழைந்ததுமே, மனு அம்மா அவனிடம் வந்து ''பெரிய ஐயா ! அம்மா உங்களை அழைக்கிறாள் என்று சொன்னாள். அந்த மாலை நேரத்தில் தன் தாய் சோர்ந்து உயிரற்றவள் போல் படுக்கையில் படுத்திருந்தாள். கோகுலனைக் கண்டதும் பவானி எழுந்து உட்கார்ந்து, ''கோகுல்! நாளை காலையில் நான் இந்த வீட்டை விட்டுப் போகிறேன்'' என்றாள்.

விநோதனிடம் சற்று முன் இதைக் கேட்டுக் கோகுலன் மனதிற்குள் குமுறிக் கொண்டிருந்தான். ஆகவே, உடனே அவன் ''நாங்கள் உன் கால்களைக் கட்டிப் போட்டு வைத்திருக்கவில்லையே. உனக்கு எங்கு விருப்பமோ! போ! எப்படியாவது போனால் சரி! உயிர் தப்பும்!'' என்றான். இதைக் கூறிவிட்டு முகத்தைக் கடுகடுவென்று வைத்துக் கொண்டு அங்கிருந்து போய்விட்டான்.

மறுநாள் காலையில் பவானி புறப்படுவதற்கு ஏற்பாடு செய்து கொண்டிருந்தாள். மனு அம்மா அருகில் அமர்ந்து அவளுக்கு ஒத்தாசை செய்து கொண்டிருந்தாள். கோகுலன் வெளியே நின்றபடி உரக்கச் சத்தமிட்டு, ''மனு அம்மா! போய் அம்மாவிடம் சொல்லு. அவள் இன்று போகமுடியாது'' என்றான்.

மனு சற்று ஆச்சரியத்துடன் ''ஏன் பெரிய பாபு? இன்றைக்கு என்ன?'' என்று கேட்டாள்.

கோகுலன் சொன்னான் : ''இன்று தசமி அல்லவா? குழந்தை குட்டிகள் இருக்கும் வீடு. இன்று போவது நன்மையல்ல. இன்று நான் அவளைப் போகவிட மாட்டேன் என்று அம்மாவிடம் சொல்லிவிடு. விருப்பமிருந்தால் நாளைக்குப் போகட்டும். நான் வண்டியைத் திருப்பி அனுப்பிவிட்டேன்.''



இதைச் சொல்லிவிட்டு கோகுலன் அவசரமாக அங்கிருந்து புறப்பட்ட போது மனோரமா அவனை கை ஜாடை காட்டி அழைத்து சற்றுக் கடுகடுப்புடன், ''போகிறேன் என்று கிளம்பியவளை தடுக்க வேண்டிய அவசியம் என்ன?'' என்று கேட்டாள்.

சில தினங்களாக மனைவியுடன் அவனுக்கு சௌஜன்யம் ஏற்பட்டிருந்தது. இப்போது அவள் மீது சீறி விழுந்தான். ''நான் தடுக்கிறேன். அது என் விருப்பம். அவள் வீட்டின் எஜமானி. இன்று அவள் வீட்டை விட்டுப் போனால், நாளை குழந்தைக் குட்டிகள் செத்துக் கிடந்தால் என்ன செய்வது?'' என்று கத்தினான். பிறகு வேகமாக வெளியே சென்று விட்டான். மனோரமாவுக்கு வியப்பும், கோபமும் பொங்கி எழுந்தது. அவள் வாயினின்றும் ''ஆமாம்! இவர் லட்சணம் இதுதானே!'' என்ற வார்த்தைகள் மட்டுமே வெளிப்பட்டன.

# 11

தசமிக்குப் பிறகு ஏகாதசி, துவாதசியும் கழிந்தது. அப்போதும் தாயை வீட்டினின்றும் அனுப்ப கோகுலனுக்கு நாள் கிடைக்கவில்லை. நான்காவது நாள் அன்று, வீட்டுப் புரோகிதர் நேரில் வந்து நல்ல நாள் ஒன்று பார்த்துச் சொன்னார். அப்போது கோகுலன் அவர் மீது கோபித்துக் கொண்டு, ''புரோகிதரே! நீங்கள் சாப்பிட்ட வீட்டுக்கு நாசம் தேடுகிறீர். நீங்கள் போய் வாருங்கள். வேறு வேலை ஏதாவது இருந்தால் பாருங்கள். நான் என் தாயை எங்கும் போக விடமாட்டேன்'' என்றான்.

அன்று வாங்கிய மட்டையடிக்குப் பிறகு மனோரமா மறுபடி எதுவும் பேசவில்லை. இன்று அவள் தந்தையை அனுப்பிவைத்தாள். நிமாயி ராய் வந்து ''கோகுல்! விஷயம் கொஞ்சம் கூட சரியல்லவே!'' என்றார்.

கோகுலன் பத்திரிகை படிக்க மாட்டான். ஆனால் அன்று அவன் பத்திரிகை படிக்க உட்கார்ந்து விட்டான். ''எந்த விஷயம்?'' என்று அவன் கேட்டான்.

''சம்பந்தி அம்மாள் தன் விருப்பத்தின் பேரில் மகன் வீட்டுக்குப் போகிறேன் என்றால் அதை நாம் தடுப்பது சரியல்ல'' என்றார் நிமாயிராய்.

கோகுலன் பத்திரிகை படித்துக்கொண்டே ''தெருவில் உள்ளவர்கள் இதைக் கேட்டால் என்ன சொல்வார்கள்? கெட்டபெயர்தான் வரும்'' என்றான்.

நிமாயி சற்று வியப்படைந்தவராய் ''இதில் கெட்ட பெயர் வர என்ன இருக்கிறது என்பதுதான் எனக்குப் புரியவில்லை'' என்றார்.

இவ்வளவு நாட்கள் வரை கோகுலன் தன் மாமனாரிடம் மரியாதையாகத்தான் பேசுவான். இன்று திடீரென்று அவர்மீது சீறி விழுந்தான். ''உங்களுக்குப் புரிய வேண்டிய அவசியம் ஒன்றும் இல்லை. உங்களிடம் வெளிப்படையாகக் கூறுகிறேன். என் தாயை நான் யாரிடமும் அனுப்ப மாட்டேன். யார் என்ன வேண்டுமானாலும் செய்து கொள்ளட்டும். அதைப் பற்றி நான் கவலைப்படவில்லை'' என்றான்.

கோகுலனின் இந்த வார்த்தை விநோதனின் செவிகளுக்கு எட்ட அதிக நேரமாகவில்லை.




தினந்தோறும் வண்டியைத் திருப்பி அனுப்பியதால் அவன் மன வருந்தமடைந்திருந்தான். இன்று அவன் கோகுலனிடம் ''அண்ணா! இன்று நான் அம்மாவை என்னுடன் அழைத்துக்கொண்டு போகிறேன். நீ வீணாக இதைத் தடை செய்யாதே'' என்றான்.

கோகுலன் செய்தித்தாளை இன்னும் கவனமாகப் படித்துக் கொண்டே ''இன்றைய தினம் போக முடியாது'' என்றான்.

''ஏன் முடியாது? நிச்சயம் முடியும்! நான் இப்போதே அழைத்துக்கொண்டு போகிறேன்''

வினோதனின் கோபக் குரலைக் கேட்டு கோகுலன் கையிலிருந்த செய்தித்தாளை ஒரு பக்கம் வீசி எறிந்து விட்டு, ''அழைத்துக் கொண்டு போகிறேன் என்று சொல்லிவிட்டால் நடந்துவிடுமா? அப்பா இறக்கும்போது அம்மாவை என்னுடன் இருக்க வேண்டும் என்று தான் கூறிச் சென்றிருக்கிறார். உன்னிடம் ஒப்படைக்கவில்லை. நான் அவளை அனுப்ப மாட்டேன்'' என்றான்.

''அண்ணா'. உண்மையில் அம்மாவின் பொறுப்பை நீ ஏற்றுக்கொண்டிருந்தால் அம்மா இரவு, பகல் இம்மாதிரி அவமானத்தையும் வெறுப்பையும் அனுபவிக்க நேரிட்டிராது. அம்மா! வெளியே வண்டி நின்றுகொண்டிருக்கிறது. நீ போய் ஏறிக் கொள்'' என்று கூறி வினோதன் திரும்பிப் பார்க்கும்போது பவானி அறையிலிருந்து புறப்பட்டு வெளியே வந்து கொண்டிருந்தாள். தாய் நெடுநேரமாக மறைவில் நின்று கொண்டிருக்கிறாள் என்பது கோகுலனுக்குத் தெரியாது. தாய் நேரே சென்று வண்டியில் ஏறி அமர்வதைக் கண்டதும் சிறிது நேரம் ஒன்றும் தோன்றாமல் நின்றான். பிறகு வேகமாக வண்டியருகே சென்று ''அம்மா! நான் இப்போதே சொல்லி வைக்கிறேன். நீ இந்தமாதிரி இங்கிருந்து சென்றால், பிறகு நமக்குள் எவ்வித சம்பந்தமும் இருக்காது'' என்றான்.

பவானி பதில் பேசவில்லை. வினோதன் வண்டியை ஓட்டச் சொன்னான். வண்டி புறப்பட்டதும் கோகுலன் அழுகை பொங்க தழுதழுத்த குரலில் ''அம்மா! அம்மா! நான் உன் பிள்ளை இல்லையா! என்னை நீ இம்மாதிரி விட்டு விட்டுப் போகாதே அம்மா! அம்மா! நீ என்னை எடுத்து வளர்க்கவில்லையா? நீ போகாதே அம்மா! போகாதே!'' என்று கதறி அழுதான். வண்டியின் கடகட சத்தத்தில் பவானியின் காதில் இது விழுந்ததோ என்னவோ, வினோதன் செவிமடுத்துக் கேட்டான்.

அவன் வண்டியிலிருந்து எட்டிப் பார்த்தான். கோகுலன் தனது மேல் வேட்டியின் தலைப்பினால் முகத்தை மூடிக்கொண்டு வேகமாகச் செல்வதைக் கண்டான்.

கோகுலன் உள்ளே வந்து விநோதன் அறைக்குள் சென்று கதவை உட்பக்கம் தாழிட்டுக் கொண்டு பேசாமல் படுத்துவிட்டான். மறைவில் நின்றுகொண்டு இவை



யாவற்றையும் நிமாயி ராய் பார்த்துக் கொண்டிருந்தார். அவருக்குச் சற்று பயம் ஏற்பட்டது. ஆனால் சிறிது நேரத்திற்கெல்லாம் கோகுலன் அறையினின்றும் வெளியே வந்து குளித்து விட்டு சாப்பிட்டுக் கடைக்குச் சென்று விட்டான். அப்போது கோகுலன் முகபாவத்தைக் கண்டு பயப்படக்கூடிய குறிகள் ஒன்றும் இல்லாததால் நிமாயி பாபுவுக்கு பயம் நீங்கி தைரியம் பிறந்தது. நிம்மதியாக அவர் தன் காரியத்தைக் கவனிக்கச் சென்றார். பாம்பு எப்படித் தன் இரையைக் கொஞ்சம் கொஞ்சமாக விழுங்குகிறதோ அம்மாதிரி நிமாயி ராய் பெருமகிழ்ச்சியுடன் தன் மருமகனை ஜீரணிக்க மெள்ள மெள்ள முயன்று வந்தார்.

நிலைமையும் அவருக்கு அனுகூலமாக இருந்தது. தந்தையின் மரணத்திற்குப் பிறகு கோகுலன் பொறுமை இழந்து சிடுசிடுப்புடன் காணப்பட்டான். சாதாரண விஷயங்களுக்குக் கூட அவனுக்குச் சட்டென்று கோபம் வந்து விடும். ஆனால் பவானி வீட்டை விட்டுப்போன தினத்திலிருந்து அவன் முற்றிலும் மாறிவிட்டான். இப்போது அவன் யாரிடமும் எதற்கும் கோபிப்பதும் இல்லை. பிறருடன் எதைப்பற்றியும் அதிகமாக விவாதிப்பதும் இல்லை. இதைக்

கண்டு நிமாயி ராய் சந்தோஷமடைந்த போதி லும் அவருடைய மகள் மனோரமா சற்றும் மகிழ்ச்சியுறவில்லை. கோகுலனை அவள் நன்றாக அறிந்து கொண்டிருந்தாள். கணவன் சாப் பாட்டு விஷயத்தில் இப்போது எவ்விதத் தக ராறும் செய்வதில்லை. போட்டதைச் சாப் பிட்டு விட்டுப் பேசாமல் போய்விடுகிறான். இதைக் கண்டு மனோரமா மனத்திற்குள் மிகவும் பயந்தாள். சிறுவயதிலிருந்தே சாப் பாட்டு விஷயத்தில் கோகுலன் சிறந்த ரசிகன். வாய்க்கு ருசியாகச் சாப்பிட்டுப் பழகியவன். தான் சாப்பிடுவதிலும் பிறரை அழைத்துச் சாப்பாடு செய்விப்பதிலும் அவனுக்கு மிகுந்த விருப்பம் உண்டு. ஞாயிற்றுக் கிழமைகளில் நண்பர்கள் உறவினர்களை அழைத்து விருந்து வைப்பான். அந்த ஞாயிற்றுக் கிழமையன்று அவன் யாரையும் அழைக்காததைக் கண்டு மனோரமா அவனிடம் காரணம் கேட்டாள்.

கோகுலன் மிகுந்த வருத்தத்துடன் ''அம்மாவோடு எல்லாம் போயிற்று. சமையல் செய்து போட யார் இருக்கிறார்கள்? என்றான்.

மனோரமா பெருமையுடன் ''சமையல் செய்வதற்கு உங்கள் அம்மாவுக்கு மட்டும் தான் தெரியுமா? எங்களுக்கெல்லாம் தெரி யாதா?'' என்று கேட்டாள்.

''தெரியுமானால், உன் அப்பாவுக்கும் தம்பிக்கும் செய்து போடு. எனக்கு அது தேவை இல்லை.''

மனோரமாவின் தாய் காளிகட்டம் சென்றுவிட்டு வரும் வழியில் இங்கே ஒருநாள் வந்திருந்தாள். இங்கே கோகுலனின் மாற் றுந்தாய் கோபித்துக் கொண்டு போய்விட் டாள் என்பது தெரிந்ததும், மகளின் குடும்ப நிர்வாகத்தை ஏற்றுக் கொள்ள வேண்டியது அவசியம் என்று கருதி நாலைந்து நாள் தங்கி னாள். மளமளவென்று வீட்டு நிர்வாகம் சீர் அடைந்தது. வீட்டு வேலைகள் நியமப்படி சரிவர நடைபெற்றன. குடும்பத்தின் லகானை அவளே பிடித்து ஓட்டினாள். இவ்வாறு நாட்கள் கழிந்தன.

தெருவிலுள்ளவர்கள் ஆரம்பத்தில் சிறிது நாட்களுக்கு இதைப்பற்றிக் குறைபேசி னார்கள். பிறகு இந்தக் கலியுகத்தில் இப்படித் தான் நடக்கும் என்று பழியை யுகத்தின் மீது போட்டுவிட்டு நாலு நாட்களில் அடங்கி விட்டனர்.

மனு அம்மா வீட்டுக்குப் போகும் வழி யில்தான் இருந்தது, விநோதனின் புதிய வீடு. அவள் அடிக்கடி வந்து பவானியைப் பார்த்துப் பேசிவிட்டுப் போவாள். அவள் மூலமாகப் புதிய குடும்பத்தின் நிலவரத்தை கோகுலன் அறிந்துவந்தான். ஆனால் அது பற்றி அவன் ஒன்றும் பேசவில்லை.

அன்று பவானி புறப்பட்டு வரும்போது கோகுலன் அழுகை பொங்கும் குரலில் 'இனி நமக்குள் எவ்வித சம்பந்தமும் இருக்காது' என்று சொன்னான். அப்போது பவானி அதை அவ்வளவாகப் பொருட்படுத்தவில்லை. ஆனால் ஒரு மாதமாகியும் கோகுலன் தன் தாயைப் பற்றி என்ன ஆனாள் என்றுகூட விசாரிக்காமல் இருப்பதைக் கண்டு பவானி மனத்திற்குள் சற்று திகிலடைந்தாள். இவ்வளவு சண்டை,



பூசல் நடந்துவிட்ட போதிலும் கோகுலன் தன்னைக் கைவிட்டுவிடுவான், தன் தம்பியை யும் முற்றிலும் மறந்துவிடுவான் என்று பவானி யால் நம்ப முடியவில்லை. அன்று மனுஅம்மா வாயிலாக கோகுலன் வீட்டில் அவன் மாமனார் மாமியார் இருவரும் நிரந்தரமாகத் தங்கி இருக்கிறார்கள் என்பதைக் கேள்விப்பட்ட போது அவள் மனம் துணுக்குற்றது.

* * * *

புதிய வீட்டுக்கு வந்து நாலைந்து தினங்கள் வரையில் விநோதன் ஒழுங்காக இருந்தான். அதன் பிறகு அவன் தன் பழைய உருவத்தை எடுத்துக் கொண்டான். அவன் தன் தாயைக் கவனிப்பதில்லை. இரவில் வீட்டிலே தங்க மாட்டான். காலையில் அவன் வீட்டுக்கு வரும் போது பவானி துக்கத்தினாலும் லச்சையினா லும் அவன் பக்கம் திரும்பிக்கூடப் பார்க்க மாட்டாள்.

விநோதன் ஏதோ வேலை பார்ப்பதாகச் சொன்னான். ஆனால் எங்கே வேலை, என்ன சம்பளம் என்ற விவரம் எதையும் கூறவில்லை. ஆகவே பவானி ஒருவகையில் திருப்தி அடைந் தாள். என் மகனுக்குச் சொத்து கிடைக்காமல் வஞ்சித்துவிட்டதில் தவறு ஒன்றுமில்லை. அது நியாயமானதுதான் என்று எண்ணினாள். தன் னுடைய மாமன் மாமியின் பேச்சைக் கேட்டு கோகுலன் தங்களுக்கு எவ்வளவு தீங்கிழைத்த போதிலும் தன் கணவன் கஷ்டப்பட்டு நிலை நிறுத்திய கடை வியாபாரத்தை அவன் சரி வர நிர்வகித்து வருவான், அதைச் சீர்குலைய விடமாட்டான். என்ற நம்பிக்கை அவளுக்கு நிம்மதியை அளித்தது. காலஞ்சென்ற கண வனை நினைத்து இந்தக் கவலையிலும் மன அமைதி கண்டாள். இவ்வாறு நாட்கள் கழிந் தன. அன்று வைகாசி மாதப்பிறப்பு. பிரதி வருஷமும் அந்த நாளில் அவள் நோன்பு இருந்து தடபுடலாக (பிராமண) சமாராதனை செய்வது வழக்கம். இந்தத் தடவை அவள் கையில் காசில்லை. இரண்டொரு தடவை பேச்சோடு பேச்சாக விநோதனிடம் இதைக் கூறினாள். ஆனால் அவன் இதைக் காதில் வாங்கிக் கொள்ளவே இல்லை. ஆகவே இந்த வருடம் அந்த நோன்பைக் கைவிடுவது என்று தீர்மானித்தாள்.

அன்று அதிகாலையில் வாசலில் இருந்து யாரோ உரக்கச் சத்தமிட்டு தன்னை அழைப் பதைக் கேட்டாள். மனுஅம்மா சென்று வாசற்கதவைத் திறந்தாள். பார்த்தால் கோகு லன் மிகுந்த பரபரப்புடன் உள்ளே வந்து கொண்டிருந்தான். அவனுடன் பணியாட்கள் பலர் வந்தனர். மாவு, மிட்டாய் வகைகள், பழவகைகள் இன்னும் விரதத்திற்குத் தேவை யான பொருட்கள் யாவும் கூடைகளில் வந்து இறங்கின. உள்ளே வந்ததுமே அவன் சொன் னான்: ''தெருவிலுள்ள பிராமணர்களை எல் லாம் அழைத்திருக்கிறேன். அந்தக் குரங்கை நம்பி இந்தக் காரியத்தை விட முடியுமா? அம்மா எங்கே? இன்னும் தூக்கத்திலிருந்து எழுந்திருக்கவில்லையா? சரி நான் போகிறேன். இவ்விடத்தில் வேலைகளைக் கவனிக்க ஆட்களை அனுப்புகிறேன். சமையல்காரர்கள் வந்து கொண்டிருப்பார்கள்.

''அம்மாவைப் போலத்தானே பிள்ளையும் இருப்பான். யாருக்கு என்ன கவலை? எல்லா வற்றையும் பற்றிக் கவலைப்படத்தான் நான்

(27-ம் பக்கம் பார்க்கவும்)

# படமும் செய்தியும்



சென்னை ராஜாஜி அரங்கில் 15—5—1977 அன்று நடைபெற்ற அம்பேத்கார் மன்றங்களின் இணைப்பு மாநாட்டில் டாக்டர் அம்பேத்கார் திருஉருவப் படத்தை மேதகு தமிழ்நாடு ஆளுநர் திரு பிரபுதாஸ் பட்வாரி அவர்கள் திறந்து வைத்தார்.

தமிழ்நாடு ஆளுநர் பிரபுதாஸ் பட்வாரி அவர்கள், 15—5—1977 அன்று திருவல்லிக்கேணியில் உள்ள ஜும்மா மசூதியில் (பெரிய மசூதி) நடைபெற்ற நபிகள் நாயகம் பிறந்த நாள் விழாவில் கலந்து கொண்டு உரையாற்றினர்.







அண்மையில் நடைபெறவிருக்கும் தமிழ் நாடு சட்டப் பேரவைத் தேர்தலில் அரசியல் கட்சிகள் பின்பற்ற வேண்டிய ஒழுங்கு முறை விதிகளைப் பற்றி விவாதிப்பதற்காக, தமிழ்நாடு ஆளுநர் அவர்கள், 20.5.'77 அன்று, தலைமைச் செயலகத்தில் அனைத்துக் கட்சிகள் கூட்டத்தைக் கூட்டி விவாதித்தார்.



தமிழ்நாடு ஆளுநர் திரு. பிரபுதாஸ் பட்வாரி அவர்கள் 29.5.'77 அன்று நடைபெற்ற ஓசூர் பஞ்சாயத்து யூனியன் வேளாண்மைக் கிடங்குத் திறப்பு விழாவில் சிறந்த பஞ்சாயத்து யூனியன் என்பதற்காக அரக்கோணம் பஞ்சாயத்து யூனியனுக்கு வானொலிப் பெட்டி வழங்கினார்.



தமிழ்நாடு ஆளுநர் திரு. பிரபுதாஸ் பட்வாரி அவர்கள் 29.5.'77 அன்று நடைபெற்ற ஓசூர் பஞ்சாயத்து யூனியன் வேளாண்மைக் கிடங்குத் திறப்புவிழாவில் நிலமில்லாதவர் களுக்கு நிலப்பட்டாக்கள் வழங்கினார்.



தமிழ்நாடு ஆளுநர் திரு. பிரபுதாஸ் பட்வாரி அவர்கள் 29.5.'77 அன்று ஓசூர் பஞ்சாயத்து யூனியனில் நடைபெற்ற வேளாண்மைக் கிடங்குத் திறப்பு விழாவில், தொழிலாளர்களுக்குத் தையல் இயந்திரம் சவரக் கருவிகள் முதலியன வழங்கினார்.








தமிழ்நாடு ஆளுநர் திரு. பிரபுதாஸ் பட்வாரி அவர்கள் 29.5.'77 அன்று வேலூர் பெண்ட்லாண்ட் மருத்துவ மனையில் தீவிர இருதய நோய்ச் சிகிச்சைப் பிரிவுக்குக் கடைக்கால் நாட்டினர்.

செஞ்சி, அரசினர் மருத்துவமனையில் முன்னாள் போர் வீரர்களுக்காகக் கட்டப்பட்டுள்ள 12 படுக்கைகள் கொண்ட வார்டினைத் தமிழ்நாடு ஆளுநரின் ஆலோசகர் திரு . வி. கார்த்திகேயன், அவர்கள் 29.5.'77 அன்று திறந்து வைத்தார்.






(22-ம் பக்கத் தொடர்ச்சி)

இருக்கிறேனே? சரி, மனு அம்மா! நீ அம்மாவிடம் சொல்லிவிடு, நான் இன்னும் ஒரு மணி நேரத்தில் திரும்பி வருகிறேன்'' என்று சொல்லிவிட்டு, பரபரப்புடன் வந்ததுபோல் சென்றுவிட்டான்.

பவானி அதிகாலையிலேயே எழுந்து விட்டாள். மறைவில் நின்றபடி அவன் பேசியதைக் கேட்டுக் கொண்டிருந்தாள், கோகுலன் சென்றதும் அவள் கண்களினின்றும் கண்ணீர் தாரை தாரையாக வழிந்தது.

அன்று ஞாயிற்றுக்கிழமை. சனிக்கிழமை, இரவை ஆனந்தமாகக் கழித்துவிட்டு, விடிந்து நெடுநேரத்திற்குப் பிறகு விநோதன் வீட்டுக்கு வந்தான். இங்கே நிலவிய காட்சியைக் கண்டு பிரமித்துப் போய்விட்டான். மனு அம்மாவின் வாயிலாக சகல விவரங்களையும் கேட்டுக் கொண்டு தாயின் செவிகளில்படும்படி ''அண்ணுவுக்கு தகவல் அனுப்பாமல் அம்மா என்னிடம் சொல்லிக் கொண்டிருக்கிருள். இதனுல் எனக்குத்தானே அவமானம்'' என்ருன்.

பவானி யாவற்றையும் அறிவாள். ஆயினும் இதற்கு அவள் பதில் பேசவில்லை. கோகுலன் திரும்பி வந்தான். விநோதனைப் பார்த்தும் பார்க்காததுபோல் இருந்துவிட்டான். நடக்க வேண்டிய காரியங்களைக் கவனிப்பதில் முனைந்திருந்தான். பிராமணர்களுக்கு விமரிசையாக போஜனம் செய்வித்தான். தாயின் விரதம் செவ்வனே முடிவடைந்ததும், அவன் ஒருவரிடமும் ஒன்றும் சொல்லிக் கொள்ளாமல் அங்கிருந்து நழுவ ஆயத்தமானுன். அப்போது பானர்ஜி அவனை எல்லோருக்கும் நடுவே அழைத்து, ''கோகுல் இங்கே இப்படி வா! சற்று உட்காரு'' என்ருர்.

கோகுலன் அன்று அவரையும் அழைத்திருந்தான். ஆகையால் அவனுடைய சோற்றைத் தின்றுவிட்டு, அன்ருெருநாள் தான் அடைந்த அவமானத்திற்குப் பழி வாங்கத் திட்டம் வகுத்துவிட்டார். மஜும்தார் வீட்டுச் சோற்றை அவர் நெடுநாட்களாகத் தின்பவர். ஆகவே அன்று நிமாயி ராயைவிட, தானே அதிக அவமானம் அடைந்ததாக எண்ணினுர். அவர் எல்லோர் முன்னிலையிலும் விநோதனைப் பார்த்துக் கண்களைச் சிமிட்டிக் கொண்டே ''ஏண்டாப்பா! உன் அண்ணன் இன்று செய்த தந்திரத்தின் கருத்து உனக்குப் புரிந்ததா?'' என்று கேட்டார்.

பேச்சுக்கள் எழும் முறையைக் கண்டு விநோதன் சங்கையடைந்தான்.

விநோதன் சுருக்கமாக ''புரியவில்லையே, என்ன?'' என்ருன்.

பானர்ஜி லேசான கபடச் சிரிப்புடன், ''வழக்கில் நீ ஜெயித்துவிடுவாய் என்று எனக்குத் தெரியும். நீ பி.ஏ., எம்.ஏ., பாஸ் செய்திருக்கிருய். ஆனுல் அம்மாவை எவ்வகையிலாவது தன் வசம் வைத்திருக்கவேண்டும் என்பதே இன்றைய நாடகத்தின் கருத்து என்பதை நீ தெரிந்து கொள்ளவில்லை. ஏனென்ருல் வழக்கின் வெற்றி தோல்வி அவளைப் பொறுத்திருக்கிறது!'' என்ருர்.

கோகுலனுக்கு முகம் சுண்டிவிட்டது. ''இல்லை மாஸ்டர்! ஒருநாளும் நான் அப்படி நினைக்கவில்லை'' என்று கூறிவிட்டு அவன் வேகமாக அவ்விடம் விட்டகன்ருன்.



பானர்ஜி உரக்கச் சத்தமிட்டு ''விநோதா! இங்கே பார்! கோகுலனை இனி இங்கே நுழைய விடாதே. அதன் உன்னை நாசமாக்கி விடுவான்'' என்ருர்.

விநோதன் சங்கையடைந்து தலைகுனிந்து அமர்ந்திருந்தான். தன் அண்ணன் குணம் அவனுக்குத் தெரியாததல்ல. மனத்தில் வேறு உத்தேசத்தை வைத்துக் கொண்டு அண்ணன் ஒரு போதும் இம்மாதிரிக் காரியம் செய்ய மாட்டான் என்பது அவனுக்குத் தெரியும். பானர்ஜியின் வார்த்தைகளை அவன் பூராவும் நம்பவில்லை. ஆனுல் பலர் முன்னிலையில் தன் சகோதரனை அவர் அவமானப்படுத்தியது அவன் மனத்தைப் புண்படுத்தியது.

வந்திருந்தவர்கள் எல்லோரும் சென்ற பிறகு விநோதன் உள்ளே சென்று பார்த்தான். தாய் தன் அறையில் கதவை மூடிக் கொண்டு படுத்திருந்தாள். பானர்ஜி பேசியதை அம்மாவும் கேட்டிருக்கிருள் என்பது யாரையும் கேட்காமலே அவனுக்கு விளங்கியது.

கடை வேலைகளை முடித்துக்கொண்டு கோகுலன் சாயுங்காலம் வீட்டுக்கு வந்து பார்த்தபோது அங்கேயும் ஒரு நாடகம் நடந்துகொண்டிருந்தது. நிமாயி ராய் தலையைத் தொங்கவிட்டுக் கொண்டு கட்டிலில் அமர்ந்திருந்தார். கீழே தரையில் அமர்ந்திருந்த அவரது மகள் மனேரமா ஹேமாவையும் தன்னுடன் அணைத்துக் கொண்டு தந்தையின் வாடிய முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

அறையில் காலடி வைத்ததுமே நிமாயி சொன்னுர், ''ஒன்றும் தெரியாதவன்போல் உன் தாயின் மூலம் எங்களை அவமானம் செய்துவிட்டாய். இதற்குப் பரிகாரம் என்ன?''

ஏற்கனவே கோகுலனின் மனம் புண்பட்டிருந்தது. பகல் பூராவும் உழைத்ததால் மிகவும் களைத்துப் போயிருந்தான். ஆகையால் குற்றச் சாட்டைக் கேட்டதுமே அவன் உடல் பற்றி எரிந்தது. மனேரமாவும் மூக்கை உறிஞ்சிக் கொண்டு அழுதபடி ''இனி ஒருமுறை நீங்கள் அங்கே சென்ருல் நான் கழுத்தில் சுருக்கு மாட்டிக் கொண்டு உயிரை விட்டுவிடுவேன்!'' என்ருள்.

மகளின் வார்த்தையினுல் உற்சாகமடைந்த மாமனுர் ராய், மிகுந்த தைரியத்துடன் ''அந்த பெண்பிள்ளை என்ன சாமான்யப் பட்டவளா?'' வெடி குண்டு வெடிப்பதுபோல் வெடித்தெழுந்தான் கோகுலன். ''போதும் வாயை மூடுங்கள்''! இனி என் தாயைப்பற்றி இந்த மாதிரி ஏதாவது பேசினுல் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளி விடுவேன். ஜாக்கிரதை'' என்ருன்.

இதற்குமேல் அவன் அங்கே நிற்கவேயில்லை. புயல்போல் வெளியேறிவிட்டான். நிமாயி ராய் மனேரமா இருவர் தலையிலும் இடிவிழுந்ததைப்போல் இருந்தது. ஒருவர் முகத்தை ஒருவர் பார்க்கலானுர்கள். என்ன காரியம் செய்துவிட்டான் கோகுலன்? பூஜிக்

கத்தக்க தன் மாமனுரை இவ்வளவு மோச மாக அவமானப்படுத்தி விட்டானே!

# 12

விநோதனுக்கு நண்பர்கள் சிலர் சேர்ந்த னர். அந்தக் கூட்டம் அவனை அண்ணன் மீது வழக்குத் தொடரும்படி உற்சாகப்படுத்தி வந்தது. காரணம் அவன் தோற்றுவிட்டால் அவர்களுக்கு அதில் நஷ்டம் ஒன்றும் இல்லை. ஜெயித்து விட்டால் பிறகு அவர்கள் பாடு கொண்டாட்டம் தான். நெடுநாளைக்கு அவர்கள் சௌகரியமாக வரவு-செலவு செய்ய லாம். முடிவில் வழக்குத் தொடர்வது என்று நண்பர் குழாம் தீர்மானித்தது. ஏனென்ருல் விநோதன் சார்பாக சமரசம் பேசச் சென்ற நடுவர்களிடம் கோகுலன் சொல்லி அனுப்பி விட்டான். ''நான் அந்த உதவாக்கரைச் சோம் பேறிப் பயலுக்கு ஒரு தம்பிடிகூடத் தரமாட் டேன். அவனுல் ஆனதைப் பார்த்துக் கொள் ளட்டும்'' என்று சொன்னுன்.

வழக்குப் போடுவதென்று நண்பர்கள் முடிவு செய்தார்கள். இவ்வளவு பெரிய சொத்தின் மீது வழக்குத் தொடரப் பெரிய தொகை வேண்டுமே! அதனுல் நடவடிக்கை தாமதப்பட்டது.

தன் அண்ணன் கோகுலன் மீது விநோத னுக்கு எவ்வளவு கோபம் இருந்தபோதிலும் அந்த வைகாசி மாதப்பிறப்பு அன்று முதல் அவன் உள்ளம் தழுதழுத்துக் கொண்டிருந் தது. அன்று பலர் முன்னிலையில் அவமானப் பட்டுத் தன் அண்ணன் சென்றபோது அவன் முகத் தோற்றத்தை விநோதன் நன்ருகக் கவ னித்தான். அவமானத்தால் வாடித் தொங் கிய அந்த முகம் விநோதன் இதயத்தில் நன் ருகப் பதிந்துவிட்டது. அதை அவனுல் மறக்கவே முடியவில்லை. அது அநியாயம்! தவறு,பெரிய அநீதி இழைக்கப்பட்டுவிட்டது. பொய்யான ஓர் அபவாதத்தை உன் அண்ணன் மீது சுமத்தி அவனை நீ விரட்டிவிட்டாய் என்று யாரோ அவன் செவிகளில் திரும்பத் திரும்பக் கூறுவதுபோல் இருந்தது. இனி தவறிப் போய் கூட இந்த வீட்டுக்குள் அண்ணு அடி எடுத்து வைக்க மாட்டான், என்பதை விநோதன் நன்கு உணர்ந்தான்.



இங்குள்ள படித்த இளைஞர்கள் பலர் விநோதனுக்கு நண்பர்களாக இருந்தனர். விநோதனிடம் அவர்களுக்கு மிகுந்த அனு தாபம் ஏற்பட்டிருந்தது. அவர்கள் எல்லோரு மாகச் சேர்ந்து பானர்ஜியை அழைத்துக் கொண்டு வந்து விநோதன் விவகாரத்தை சாங்கோபாங்கமாகவிவாதித்தார்கள்.முடிவில் கோகுலனை வார்த்தையில் கட்டுப்படுத்தாமல் ஒன்றும் நடவாது என்று தீர்மானித்தனர். கோகுலன் ஒன்றும் அறியாதவன், ஒரு முட் டாள். அவனிடம் பேச்சுக் கொடுத்து அவ னிடமிருந்து நாலு பேர் முன்னிலையில் அவனை வார்த்தையில் சிக்க வைக்க வேண்டும் அதை வைத்துக் கொண்டு அதன் மீது சாட்சிகளைத் தயார் செய்து வழக்கைத் தொடர வேண்டும் என்று முடிவுகட்டினர்.

அடுத்த ஞாயிற்றுக் கிழமையன்று நாலைந்து பெரிய மனிதர்களை அழைத்துக் கொண்டு கோகுலன் வீட்டுக்குச் செல்வது, அங்கேயே இந்த விவகாரத்தைப் பேசி அவனைச் சிக்க வைப்பது என்று தீர்மானிக்கப்பட்டது. இந்த சந்தர்ப்பத்தில் அங்கு வந்திருந்தவர்கள் கோகுலனைப்பற்றிப் பற்பல விதமாகக் கேலி செய்தனர். ஒருவன் கோகுலனைப்போல் பேசி நடித்துக் காட்டினுன். மற்ருெருவன் அடுத்த ஞாயிற்றுக் கிழமை அன்று அங்கு யார் யார் எப்படி எப்படிப் பேசுவார்கள் என்பதை ஒத் திகை செய்து காட்டினுன். இவ்வளவுக்கும் விநோதன் ஒன்றும் பேசவில்லை. மௌனமாக அமர்ந்திருந்தான். நண்பர்கள் தங்கள் பேச்சு சுவாரஸ்யத்தில் விநோதன் உற்சாகமிழந்து அமர்ந்திருப்பதைக் கவனிக்கவே இல்லை.

* * * * *

அன்று விநோதன் வெளியே போகவில்லை சாப்பாட்டை முடித்துக் கொண்டு தன் அறை யில் அமர்ந்திருந்தான். பகல் ஒருமணி இருக் கும்; அப்போது திடீரென்று கோகுலன் அங்கே வந்துவிட்டான்.

''மனு அம்மா! என்ன? சாப்பாடு ஆயிற்ருு?' என்று கேட்டான்.

''இல்லை, பெரிய பாபு! இனிமேல்தான்'' என்ருள் மனு.

''இன்னுமா சாப்பிடவில்லை?'' என்று கேட்டுவிட்டு கோகுலன் தனக்குப் போட்ட தடுக்கை கையில் எடுத்துக் கொண்டு போய் சமையலறை வாசற்படியின் மீது போட்டுக் கொண்டு உட்கார்ந்திருந்தான். பிறகு ''மனு அம்மா, குடிப்பதற்கு ஒரு டம்ளர் தண்ணீர் கொண்டு வா. வசூலுக்குக் கிளம்பினேன். இந்தக் கடும் வெய்யிலில் நடந்து நடந்து உயிரே போய்விட்டது. சரி, அம்மா எங்கே?'' என்று கேட்டான்.

பவானி சமையலறையில்தான் இருந் தாள். ஆனுல் அன்றைய சம்பவத்தை எண்ணி அவன் முன் வர வெட்கினுள். விநோதன் வீட்டில் இருக்கமாட்டான், வேலைக்குச் சென்றிருப்பான் என்று நினைத் திருந்தான் கோகுலன். ஆகையால் அவன் பேச ஆரம்பித்தான்!

''மனு அம்மா! எல்லாம் பொய்! சுத்தப் பொய். இந்தக் கலியுகத்தில் தர்மம், சத்தியம் என்று ஏதாவது இருக்கிறதா? அப்பா இறக் கும்போது அம்மாவை என் கையில் ஒப்ப டைத்து 'இந்தாடா கோகுல்! இவளை உன் கையில் ஒப்படைத்து விட்டுப் போகிறேன்' என்று சொல்லிவிட்டுப் போனுர். நான் வெள்ளை மனம் படைத்தவன். சாது இல்லை என்ருல் அம்மாவை விநோதன் பலவந்தமாக இங்கு அழைத்து வர விட்டிருப்பேனு? அவன் என் தம்பிதானே! ஆனுல் நான் இவள் மகன் அல்லவா? நான் நினைத்தால் அம்மாவை இங் கிருந்து பலவந்தமாக அழைத்துப் போக முடி யாதா? மனு அம்மா! உனக்குத் தெரியும்! அப்பாவின் உயில் இதுதான். ஏதோ பேனு வினுல் நாலுவரி எழுதி விட்டால் அது உயி லாகிவிடுமா?'' என்ருன்.

மனு அம்மா கண் ஜாடையினுல் விநோ தன் வீட்டில் இருக்கிருன் என்பதைத் தெரி வித்தாள். உடனே கோகுலன் தண்ணீரைப் பூராவும் குடிக்காமல் தம்ளரை வைத்து

விட்டுக் காலில் செருப்பை மாட்டிக் கொண்டு மளமளவென்று சென்றுவிட்டான்.

இரவு ஒன்பது, பத்துமணி இருக்கும். ரஸிக சக்கரவர்த்தி திடீரென்று வந்து கேட்டார். ''அம்மா! பெரிய பாபு இன்னும் வீட்டுக்கு வந்து சேரவில்லை. இங்கே வந்து அவர் சாப்பிட்டு விட்டுப் போனாரா? எப்போது போனார்?''

பவானி திடுக்கிட்டுப் போய்' ''அவன் இங்கே சாப்பிடவேயில்லை. வசூலுக்கு வந்தானாம். ஒருதம்ளர் தண்ணீர் மட்டும் குடித்து விட்டுச் சென்றான்'' என்றாள்.

சக்ரவர்த்தி சொன்னார் : ''இதைக் கேளுங்கள். இன்று பெரிய பாபுவுக்குப் பிறந்த நாள். அவர் வீட்டில் சண்டை போட்டுக் கொண்டு வந்து விட்டார். வரும்போது இன்று உங்கள் சோறு வேண்டாம். அம்மா விடம் போய் பிரஸாதம் வாங்கிச் சாப்பிடப் போகிறேன் என்று சொல்லிவிட்டுவந்தாராம். நீங்கள் சொல்வதைக் கேட்டால், இன்று பூராவும் அவர் ஒன்றுமே சாப்பிடவில்லை என்று தெரிகிறது.''

இதைக் கேட்டதும் பவானிக்கு உள்ளம் வெடித்துவிடும்போல் இருந்தது. விநோதன் அடுத்த அறையில் தான் இருந்தான்; சக்கரவர்த்தியின் குரலைக் கேட்டதும் அருகே வந்து உட்கார்ந்தான். பிறகு வேடிக்கையாக, ''சொல்லுங்கள்! சக்ரவர்த்தியாரே நிமாயி ராயின் ராஜ்யத்தில் உங்கள் உத்தியோகம் எப்படி நடைபெறுகிறது?'' என்றான்.

சக்ரவர்த்தி வியப்படைந்து. ''நிமாயி ராயா? ராமராமா! என்று சொல்லுங்கள். அவர் கடைக்குள் நுழைய முடியுமா?'' என்றார்.

''அவர் தான் அண்ணாவை அடக்கி ஆட்சி செலுத்தி வருகிறார் என்றல்லவா நான் கேள்விப்பட்டேன்.''

சக்ரவர்த்தி பவானியின் பக்கம் ஜாடைக் காட்டி சிரித்துக் கொண்டே, ''சின்னபாபு ! இவர்கள் இருக்கும் வரை அப்படியெல்லாம் ஒன்றும் நடக்க முடியாது. என்னை நீக்கிவிட்டு தாங்களே கடை நிர்வாகத்தைப் பிடித்துக் கொள்ள வேண்டும் என்று தான் வந்தார்கள். ஆனால் அம்மாவின் ஒரே ஒரு உத்தரவு, அவர்களுடைய திட்டத்தைத் தவிடு பொடியாக்கி விட்டது. இப்போது ஏதோ அங்குமிங்கும் பிராய்ந்து நாலு காசு எடுத்துக் கொண்டால், அதுவே பெரிய காரியம். இங்கே கடையில் கை வைக்க முடியாது.''

இதன் பிறகு சக்ரவர்த்தி அன்றைய தினம் நடந்த சம்பவத்தை விவரமாக விளக்கிக் கூறலானார்: ''பெரியபாபு கள்ளம் கபடமற்ற மனிதர்; சூது வாது தெரியாதவர். அதனால் என்ன? தாய் தந்தையரிடம் அவருக்குள்ள பக்தி அசைக்க முடியாதது. அன்றைய தினம் அவர் அம்மாவின் உத்தரவை ரத்து செய்ய எனக்கு அதிகாரமில்லை என்று சொன்ன போது எவ்வளவு அழுகை, அங்கலாய்ப்பு, சண்டை, பூசல், மண்டை உடைந்தது? அவர் எதையும் காதில் போட்டுக் கொள்ளவில்லை. அவர் திரும்பத் திரும்ப ''இது என் தந்தையின் உத்தரவு. இது என் தாயின் உத்தரவு என்று சொல்லிக் கொண்டிருந்தாரே தவிர சற்றும் விட்டுக் கொடுக்கவில்லையே. சின்ன பாபு! முன்பு கடை நிர்வாகம் எவ்வாறு என் கையில் இருந்ததோ, அப்படியேதான் இப்போதும் இருக்கிறது!



விநோதனின் கண்களில் கண்ணீர் வந்து விட்டது. சக்ரவர்த்தி மேலே கூறலானார். ''சின்னபாபு! இந்த மாதிரி அண்ணன் யாருக்கும் கிடைக்கமாட்டான். அவர் பேச்சில் எப்போதும் விநோதன்தான். அவர் பேச்சுக்குப் பேச்சு இதைத்தான் சொல்லிக் கொண்டிருப்பார். எங்கள் விநோதனைப்போல் படித்துப் பாஸ் செய்தவர்கள் யார் இருக்கிறார்கள்? என் விநோதன் படித்த அளவு இந்த வட்டாரத்தில் எவன் படித்திருக்கிறான்? விநோதனைப் போல் ஒரு சகோதரன் யாருக்குக் கிடைக்கும்? பலர் வந்து உங்களைப் பற்றி அவரிடம் ஏதேதோ அவதூறு கூறுவார்கள். ஆனால் அவர் என்னிடம் வந்து, சிரித்துக் கொண்டே சக்ரவர்த்தி! இந்தப் பயல்களுக்கெல்லாம் என் தம்பியைக் கண்டால் பொறாமை. இந்த அயோக்கிய பசங்களுக்கு இரவு பகல் இது தான் வேலை. இந்த பிச்சைக்காரப் பயல்கள் சொல்வதை நான் நம்புவதற்கு என்னை முட்டாள் என்று நினைத்து விட்டான்கள் போலிருக்கிறது?'' என்பார்.

சற்று நிறுத்தி விட்டு சக்ரவர்த்தி மேலும் தொடர்ந்தார்: ''அன்றொரு நாள் காசியிலிருந்து ஒரு பண்டிதன் வந்தான். அவன் பூசைப்போட்டு தன் மந்திர சக்தியால் சின்ன பாபுவின் மனத்தை மாற்றி விடுகிறேன் என்று கூறி, நூற்று எட்டு தங்க துளசி பத்ரம் வேண்டுமென்று அதற்காக ஐநூறு ரூபாயை பெரிய பாபுவிடமிருந்து வாங்கிக்கொண்டு போய்விட்டான். நான் எவ்வளவோ சொன்னேன், தடுத்தேன். அவர் சற்றும் கேட்கவில்லை. நமது விநோதன் எப்படியாவது சரியாகட்டும். அவனுக்கு நல்ல புத்தி வரட்டும். அவன் 'எம்.ஏ.'பாஸ் பண்ணட்டும். இதற்காக என் பணம் ஐநூறு போனால் போகட்டும். பரவாயில்லை'' என்று சொல்லி விட்டார்.

விநோதன் தன் கண்களைத் துடைத்துக் கொண்டு அழுகை பொங்கும் குரலில் '' ''ஆமாம்! சக்ரவர்த்தி. நான்கூட கேள்விப் பட்டேன். என் பெயரைச் சொல்லி பலர் அண்ணாவை ஏமாற்றி இருக்கிறார்கள்'' என்றான்.

சக்ரவர்த்தி குரலைச் சற்றுத் தாழ்த்திக் கொண்டு ''இதே ஜயலால் பானர்ஜி, கொஞ்சமான பணமா வாங்கி இருப்பார்? இந்த உபத்திரவங்களுக்கெல்லாம் மூலவேர் அந்த அயோக்கியன்தான்''என்று கூறிவிட்டு பெரிய எஜமான் இறந்தபோது விநோதனைத் தேடி அழைத்து வருவதாகக்கூறி பானர்ஜி பணம் வாங்கிக் கொண்டதையும் கூறினார்.

இவை எல்லாவற்றையும் கேட்டு விட்டு, பவானி வாய் திறந்து ஒன்றும் பேசவில்லை. அவர் கண்கள் தாரைதாரையாகக் கண்ணீரைச் சொரிந்தன.

சக்ரவர்த்தி விடை பெற்றுச் சென்றதும் விநோதன் படுத்துத் தூங்கலானான். ஆனால் இரவு முழுதும் அவனுக்குத் தூக்கமே வரவில்லை. சக்ரவர்த்தியின் வாயிலாக அவன்

கேட்டறிந்த செய்திகளைப் பற்றி இரவு பூராவும் சிந்திக்கலானான். வழக்கத்திற்கு மாறான இந்தக் காரியம் எவ்வாறு நடைபெற்றது? தந்தை ஏன் எனக்குச் சொத்துக் கொடுக்காமல் வஞ்சித்தார். அண்ணா ஏன் எனக்கு எதுவும் தர மறுக்கிறான்? இதன் காரணம் என்ன? இதைப் பற்றியே அவன் மனம் சிந்திக்கலாயிற்று.

* * *

## 13

விநோதனின் நண்பர்கள் பெருமுயற்சி செய்து தங்களுடன் பற்பல பெரிய மனிதர்களையும் அழைத்துக் கொண்டு ஞாயிற்றுக் கிழமையன்று காலையிலேயே கோகுலன் அறையில் வந்து கூடினர். கோகுலன் கடைக்குச் செல்ல புறப்பட்டுக் கொண்டிருந்தான். திடீரென்று பல பெரிய மனிதர்கள் வருவதைக் கண்டு சற்று திகைத்தான். விசேஷமாக டெபுடி சூப்ரண்டையும், முன்சீப் கிரீஷ்பாபுவையும் கண்டு, அவர்களை எங்கே உட்கார வைப்பது, எவ்வாறு உபசரிப்பது என்று புரியாமல் தவித்தான். விநோதனின் முகம் வாட்டமடைந்தது. அவன் பேசாமல் ஓர் மூலையில் உட்கார்ந்து விட்டான். அவன் முகத்தைப் பார்க்கும்போது இவர்கள் எல்லோருமாகச் சேர்ந்து அவனைப் பலி கொடுக்க இங்கே பிடித்துக் கொண்டு வந்திருப்பதைப் போல் தோன்றியது.



பானர்ஜி தயாராக வந்திருந்தார். ஆகவே,அவர்தான் விவகாரத்தை ஆரம்பித்து வைத்தார். பார்த்துக் கொண்டிருக்கும் போதே கோகுலனின் முகமும், கண்களும் சிவந்து விட்டது. அவன் சொன்னான் ''சரிதான்! இதற்காகத்தான் நீங்கள் எல்லோரும் கும்பலாக வந்திருக்கிறீர்களோ? நான் அந்த அயோக்கியப் பயலுக்கு ஒரு பைசா கூடக் கொடுக்க மாட்டேன். அவன் குடிக்கிறான்''.

இதைக் கேட்டு ஒருவரும் பதில் பேசவில்லை! பானர்ஜி மட்டும் நிமிர்ந்து, சிரித்து விட்டு, ''சரி! ஒப்புக் கொள்வோம். அவன் குடிக்கிறான் ஆனால் அதைத் தடுப்பதற்கு நீ யார்? அதிருக்கட்டும். உன் தந்தை இறந்த போது, பித்தலாட்டம் பண்ணி, பொய் உயில் எழுதி வாங்கினாய். இல்லை என்று உன்னால் நிரூபிக்க முடியுமா?'' என்று கேட்டார்.

கோகுலன் கோபத்தினால் பொங்கி எழுந்தான்'' நானா பித்தலாட்டம் செய்தேன்? நான் மோசக்காரனா? எந்தக் கழுதை மகன் சொல்கிறான்?'' என்றான்.

கிரீஷ்பாபு வயதானவர். அவர் அமைதியான குரலில், '' கோகுல்பாபு! நீங்கள் இந்த மாதிரி ஆத்திரப்படாதீர்கள். சற்று சாந்தமாகப் பதில் சொல்லுங்கள்'' என்றார்.

பானர்ஜி இந்தக் குடும்பத்துடன் நீண்டகால தொடர்புள்ளவர். அவருக்குச் சகல விஷயங்களும் தெரியும். அவர் கண்களைச் சிமிட்டிக் கொண்டே, ''நீ இப்படி எல்லாம் பேசினால், உன் தாயாரைக் கோர்ட்டுக்கு இழுத்துப் பெட்டிமேல் ஏற்றும்படி நேரிடும்'' என்றார்.

அவர் திட்டமிட்டபடியே தான் நடந்தது.

கோகுலன் கட்டுக்கடங்காத கோபத்தினால் வெறி கொண்டவன் போல் ஆனான். ''என்ன சொன்னாய்? என் தாயைக் கோர்ட்டுக்கு இழுப்பாயா? என் தாயையா பெட்டி மீது ஏற்றுவாய்? அடே பாதகா! இந்தா எடுத்துக் கொள்! என் சொத்தை எல்லாம் எடுத்துக் கொள்! எனக்கு ஒன்றும் வேண்டாம். நான் கோர்ட்டுக்குப் போகவில்லை. என் தாயை அழைத்துக் கொண்டு காசிக்குப் போய் விடுகிறேன்'' என்றான்.

நிமாயிராயும் அங்கு இருந்தார். அவர் கண்களை உருட்டிக் கொண்டே, ''கோகுல், கொஞ்சம் பொறு! கொஞ்சம் பொறு! நீ என்ன பேசிக் கொண்டிருக்கிறாய்?'' என்றார்.

ஆனால் கோகுலன் தன் மாமனாரின் பேச்சைக் காதிலேயே வாங்கிக் கொள்ளவில்லை. அவன் எல்லார் முன்னிலையிலும் தனது வலது காலை நீட்டி, முன் போலவே ஆத்திரத்துடன் உரக்கச் சத்தமிட்டு, விநோதனைக் குறிவைத்து, "வாடா! உருப்படாப் பயலேவா! இங்கே என் பாதங்களை நீட்டி இருக்கிறேன். இதைத்தொட்டுச் சத்தியம் செய்யடா! உன் அண்ணன் பொய்யன்! மோசக்காரன் என்று சத்தியம் செய்துவிடு. பிறகு இந்தச் சொத்துக்கள் பூராவையும் எடுத்துக் கொள். அப்படி நான் கொடுக்கத் தவறினால், நான் வைகுந்த மஜும்தாருக்கு பிறந்த மகனல்ல! வாடா! புல்லுருவிப் பயலே! வா! சத்தியம் செய்!'' என்று சபதம் கூறி கர்ஜித்தான்.

நிமாயி திகிலடித்துப் போய் ''அடடா! கோகுல்! இதென்ன காரியம்? அவன் கோர்ட்டுக்குப் போகட்டுமே! கோர்ட்டில் என்ன முடிவு ஆகிறதோ பார்த்துக் கொள்ளலாம். இம்மாதிரி இங்கே, சத்தியம் செய்து நிரூபிக்க வேண்டிய அவசியமில்லை. வா! வா! உள்ளே வா!'' என்று கூறி கோகுலனின் ஒரு கையைப் பற்றி அவனை உள்ளே இழுத்துச் செல்லலானார்.

ஆனால் விநோதன் தலை நிமிர்ந்துகூடப் பார்க்கவில்லை. அவன் ஏதோ ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கி பிரமைத்தட்டியவன் போல் அமர்ந்திருந்தான்.

கோகுலன் பலவந்தமாகத் தன்கையை விடுவித்துக் கொண்டு, ''முடியாது! இந்த இடத்தை விட்டு ஓர் அடிகூட எடுத்து வைக்க மாட்டேன். நீங்கள் சும்மா இருங்கள்!''என்றான்.

சற்றுப்பொறுத்து, கோகுலன் வானத்தை நோக்கியபடி கூறலானான்: ''அப்பா கேட்டுக் கொண்டிருக்கிறார். அவர் இறக்கும்போது சொல்லிவிட்டுச் சென்றார்! கோகுல்! இரு சகோதரருடைய சொத்து இது. விநோதன் நல்ல வழிக்கு வந்து விட்டானானால், அவன் பங்கை அவனுக்குக் கொடுத்துவிடு என்று சொன்னார். அப்பா சொர்க்கத்தில் இருந்து பார்த்துக் கொண்டுதான் இருக்கிறார். நான் அவருடைய சொத்துக்களைப் பூதம் போல் காவல் காத்து வருகிறேன். நான் இரவு பகல் ஈஸ்வரனை பிரார்த்தனை செய்து கொண்டிருக்கிறேன். என் தம்பிக்கு நல்ல புத்தி வரட்டும்! அவன் வீடு திரும்பட்டும். அவன் சொத்தை அவனிடம் கொடுத்துவிடலாம். அந்த நல்ல



தினம் விரைவில் வராதா? கடவுளே! என்று வேண்டிக் கொண்டிருக்கிறேன். இவன் சொல்லுகிறான், நான் அயோக்கியனும்! மோசக்காரனும்! வாடா! உருப்படாப்பயலே! வா, இங்கே வந்து என் காலைத் தொட்டு, இவர்களுக்கு முன்னால் சத்தியம் பண்ணடா, நான் அயோக்கியன்! மோசக்காரன் என்று சத்தியம் செய்.''

விநோதனுடைய ஆதரவாளர்கள் நாற்புறமும் அவனைச் சூழ்ந்து கொண்டு, அவனைக் கிளப்பினர். ஆனால் அவன் எழுந்திருக்கவே இல்லை. பானர்ஜி எழுந்து நின்றார். விநோதன் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டே ''விநோதன்! சொல்லிவிடு! காலைத் தொட்டுக் கூறிவிடு. இதில் நீ பயப்பட என்ன இருக்கிறது. சொல்லு! இந்த மாதிரி சந்தர்ப்பம் உனக்கு இனி ஒருநாளும் கிடைக்காது! எழுந்திரு! எழுந்து வந்து சொல்லிவிடு!'' என்றார்.

விநோதன் எழுந்து நின்றான். பிறகு சொன்னான் ''ஆமாம்! இம்மாதிரிச் சந்தர்ப்பம்



இனி என ஆயுளில் ஒரு நாளும் கிடைக்காது'' என்றான். பிறகு இன்னும் இரண்டடி முன்னால் வந்து, ''அண்ணா! உன் பாதங்களைத் தொட்டுக் கூறுகிறேன். நான் உன்னை அறிந்து கொண்டேன்! அண்ணா! உன் பாதங்களைத் தொட்டு, நீ அயோக்யன், மோசக்காரன் என்று சொன்னால், எனது வலதுகை அக்கணமே இற்று விழுந்து விடும். அந்த வார்த்தையைச் சொன்ன எனது நா அறுந்து விடும். அவ்வாறு நான் ஒரு நாளும் சொல்லமாட்டேன். அண்ணா! ஒரு நாளும் சொல்லமாட்டேன். ஆனால் இன்று சபதம் செய்து கூறுகிறேன். இனி நான் மது அருந்த மாட்டேன். அதைத் தொடவும் மாட்டேன். அண்ணா! உன்னை இவ்வளவு நாள் அறிந்து கொள்ளவில்லையே அண்ணா! என் தெய்வமே! என் உடன் பிறப்பே! என்னை ஆசீர்வதி அண்ணா! இன்று முதல் நான் திருந்தி, என்னை உன் தம்பி என்று சொல்லிக் கொள்ள தகுதி பெறும்படி எனக்கு ஆசி வழங்குவாய் அண்ணா! உன்னுடைய கௌரவத்தை வானுயரச் செய்து, உன் பாதங்களின் நிழலில், உன் தம்பி என்று சொல்லிக் கொண்டு, என் வாழ் நாளைக் கழிப்பேன். இதை விடப் பெரிய பாக்யம் எனக்கு உலகில் வேறு எதுவுமே இல்லை.'' இதைக் கூறிவிட்டு விநோதன் அண்ணனின் இருபாதங்களிலும் முகத்தைப் புதைத்துக் கொண்டான்.

கோகுலனின் உடம்பு கிடுகிடு வென்று நடுங்கியது. கண்களில் ஆறுய்ப் பெருகியது. கோகுலன் நாக்குழற, ''விநோதா! என் தம்பியடா நீ! என் கண்ணே! விநோதா! விநோதா!'' என்று கூறி அவனை வாரி மார்புடன் அணைத்துக் கொண்டான்.

(முற்றும்.)



# தஞ்சைக்கேற்ற சிறு தொழில்கள்



தஞ்சை மாவட்ட விவசாயிகளுக்கும் விவசாயத் தொழிலாளர்களுக்கும் ஆண்டு முழுவதும் போதிய அளவு வேலை வாய்ப்பு இருப்பதில்லை. முக்கிய பயிரான நெல், ஜூன் முதல் பிப்ரவரி வரை பயிரிடப்படுகிறது. குழாய்க் கிணறுகளும் இதர நீர் இறைக்கும் வசதிகளும் இன்னும் போதிய அளவு இல்லை யாதலால் பயிர் செய்யும் காலஅளவை அதிகப் படுத்த முடியவில்லை. இது தவிர மற்ற புன்செய்ப் பயிர்களான தென்னை, வாழை, பயறு வகைகள் அதிக வேலை வாய்ப்பினைத் தருவதாக இல்லை. ஆகவேதான் விவசாயி களும் விவசாயத் தொழிலாளர்களும் வருடத் தில் ஒரு பெரும் பகுதியை வேலையும், வருவா யுமின்றிக் கழிக்க வேண்டியிருக்கிறது.

விவசாயிகளும்; குடும்ப மகளிரும் வேலை வாய்ப்பும் அதன் மூலம் உபரி வருமானமும் பெற உழவுத் தொழிலைச் சார்ந்த பல்வேறு சிறு தொழில்கள் செய்ய முன் வர வேண்டும். தமிழக அரசும் இச்சிறு தொழில்களை அதிக அளவில் பெருக்கும் எண்ணத்துடன், ''சிறு தொழில்கள் வளர்ச்சிக் கழகம்'' ஒன்றைத் தோற்றுவித்து உதவி புரிகிறது. இச் சிறு தொழில்களை ஆதரிக்கும் பெருநோக்குடன் தொழில் துறையினரும், கூட்டுறவுத் துறையி னரும் தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளும் கடனுதவி வழங்க முன் வந்துள்ளன.

சிறு தொழில்கள் அதிகமாகப் பெருகினால் விவசாயத் தொழிலாளர்களுக்கு ஆண்டு முழு வதும் வேலை வாய்ப்பு கிடைக்கிறது. விவசாய விளைபொருட்களை நல்ல முறையில் பயன்படுத் துவதாலும் வீணாகும் பொருட்கள் நல்ல பல உபயோகமுள்ள பொருட்களாக மாற்றப்படுவ தாலும் விவசாயிகள், பெரிதும் இலாபமடை வார்கள். இதனால் தீவிரமாக விவசாயத்தில் ஈடுபடவும் முன் வருவார்கள். புதிய பயிரினங் களான மரவள்ளி, சூரிய காந்தி, மக்காச் சோளம், மல்லிகை, முல்லை போன்றவை அதிக அளவில் பயிரிடவும் வாய்ப்புகள் உருவாகும். விவசாய விளைபொருட்களிலிருந்து 'ஸ்டார்ச்', ஜவ்வரிசி, சேமியா, ரவா, பாப்கார்ன், மல்லிகைப் பூ, அத்தர், ராகி மால்ட், பழ ரசங்கள், 'ஜாம்', 'ஜெல்லி', 'மார்மலேட்', அட்டை, காகிதம், 'குஷன்பேட்', தேங்காய் துறுவல், நிலக்கடலைப் பால், வெண்ணெய் முதலிய விலை உயர்ந்த பொருட்களைத் தயா ரிக்கும் தொழிற்கூடங்கள் பெருகும். விவசா யம் தீவிரமாவதன் மூலம் மகசூலும் பெரு கும். அது தொழில்களுக்குப் போதிய மூலப் பொருட்களைக் கொடுப்பதாக அமையும். குடும்ப மகளிரின் காலம் பயனுள்ள முறையில் கழிக்கப்படும். குடும்பத்தின் வருவாய் பெருகும். வாழ்க்கைத் திறன் மிகையாகும். இது, தாய்த் தொழிலான விவசாயத்தையும், உப தொழில்களையும் மேம்பாடடையச் செய் யும். இவற்றிற்கான வாய்ப்புகள் தஞ்சையில் உள்ளன எனத் துணிந்து கூறலாம். ஆகவே தஞ்சைக்கேற்ற சிறு தொழில்களைப் பற்றி ஆராய்வோம்.

**மரவள்ளிக் கிழங்கு :**

மரவள்ளிக் கிழங்கிலிருந்து, மாவுப் பொருள், ஸ்டார்ச், ஜவ்வரிசி, சேமியா, ரவை, வறுவல், கிழங்கு மாவு போன்ற பல பொருட்களைத் தயாரிக்க முடியும்.

**மரவள்ளிக் கிழங்கிலிருந்து ஸ்டார்ச் :**

மரவள்ளிக் கிழங்கில் 20 முதல் 25 சத வீதம் மாவுப் பொருள் உள்ளது. கிழங்கி லிருந்து மாவைத் தனியாகப் பிரித்தெடுக்க லாம். நமது நாட்டின் இம்மாவுத் தேவை சுமார் 3.75 இலட்சம் டன்களாகும். ஸ்டார்ச், ஜவுளி ஆலைகள் மற்றும் குளுகோஸ் மேலும் ஆடம்பரப் பொருட்களைத் தயாரிக்கும் தொழில்களுக்குத் தேவைப்படுகிறது. தொழிற் கூடங்கள் நிறுவி நடத்த மிகவும் தேவையான நீர்வசதி நம் மாவட்டத்தில் போதிய அளவு இருக்கிறது என்பது கவனிக்கத் தக்கது.

மாவுப் பொருள் தயாரிக்கும் முறையைப் பார்ப்போம்.

அறுவடை செய்த கிழங்குகளை நன்கு சுத்தமாகக் கழுவி தோல்நீக்க வேண்டும். பிறகு மறுபடியும் நீரில் கழுவி கிழங்குகளை அறைக்கும் இயந்திரத்தில் தண்ணீர் விட்டு அறைக்க வேண்டும். கிழங்கு மாவு நன்கு அறைபட்டவுடன் தேவையான சல்லடையில் நார்ப் பொருள்களை வடிகட்டி விடவேண்டும். வடிகட்டிய பின் கிழங்குப் பாலை தொட்டி களில் விட வேண்டும். தொட்டியின் அடியில் தங்கிய மாவுப் பொருளைத் தனியாக எடுத்து மூன்று நான்குமுறை நீரில் கழுவிக் காயவைக்க வேண்டும். நன்றாகக் காய்ந்த பின், கட்டிகளை உடைத்து பாலிதீன் பைகளில் அடைத்துவிட லாம். கடைசியாக மாவில் 5 சதத்திற்கு மேல் ஈரம் இருக்கக் கூடாது. இதுவே விற் பனைக்கான மாவுப் பொருளாகும்.

**தேவையான இயந்திரங்கள் :**

1. கிழங்கு அறைக்கும் இயந்திரங்கள்: 2 (அறைக்கும் திறன் மணிக்கு 2 டன்).

2. கவுண்டர் ஷாப்ட் : 1 செனட்.

3. சல்லடைகள் : 6

4. பம்ப் செட் : 6.

5. 40 எச். பி. மோட்டார் : 1

6. 5 எச். பி. மோட்டார் : 1.

7. பைப் பிட்டிங்ஸ் : 1

8. தராசு : 1 (300 கிலோ நிறுக்கும் திறன் உடையது).

9. கட்டிகளை உடைக்கும் இயந்திரம் :1

**தேவையான கட்டட வசதிகள் :**

1. இயந்திரக்கூடம், தயாரிக்கும் கூடம் —100 சதுர மீட்டர்.

2. அலுவலகம், மூலப்பொருட்கள் வைக்கும் அறைகள்—150 ச.மீ.

3. தோல் உரிக்கும் கூடம், சுகாதார இடம் முதலியன—200 ச.மீ.

4. கழுவும் தொட்டிகள்—3 எண் ணிக்கை 4 மீ X 3 மீ. X 2 மீ.

5. கிழங்குப்பால் வந்து சேரும் தொட் டிகள்—5 எண்ணிக்கை—(4X1X1)

6. கிழங்குப்பால் தங்கும் தொட்டி — 2 எண்ணிக்கை—(30X3X1)

7. மாவு படியும் தொட்டிகள் 6 எண் ணிக்கை—(6X6X1).

**தேவையான மூலப் பொருள்கள் :**

மாதம் 25 நாட்கள் இத்தொழிலை நடத் துவதாகவும், இவ்வாறு ஓர் ஆண்டில் 9 மாதம் தொழில் நடத்துவதாகவும் கொண் டால் தேவையான மூலப் பொருட்களும் உற்பத்தியும், சராசரி வருமானமும் பின் வருமாறு :

ஒரு நாளுக்குத் தேவையான கிழங்கு — 16 டன்.

ஆண்டுத் தேவை (25X9X16=3,600) டன்.

ஒரு ஏக்கரில் கிடைக்கும் சராசரி மகசூல் 15 டன்.

ஒரு தொழிற்கூடம் இயங்கத் தேவை யான நிலப்பரப்பு : $\frac{3,600}{15} = 240$ ஏக்கர்

தஞ்சையில் மரவள்ளிக் கிழங்கு பயிரிடும் முறையைப் பரவலாகச் செய்வதன் மூலம் 9-10 மாத காலம் இத்தொழிலை நடத்த இயலும்.

நாள் ஒன்றுக்கு 16 டன் கிழங்கை மாவுப் பொருளாகத் தயார் செய்யும் ஒரு தொழிற் கூடம் சுமார் 240—300 ஏக்கரில் விளையும் கிழங்கைத் தன் மூலப் பொருளாக ஏற்க முடியும். ஒரு நாளில் உற்பத்தியாகும் மாவுப் பொருளின் அளவு சுமார் 4 டன் எனலாம். இதற்கு நல்ல விலையும் விற்பனை வசதியும் உள்ளன.



**தொழிற்கூடத்தின் உத்தேச மதிப்பீடு :**

1. நிலம், கட்டடம் போன்ற நிரந்தரச் செலவு — ரூ. 231 இலட்சம்.

2. மூலப்பொருள், தொழிலாளர் சம்ப ளம், மற்ற செலவுகள்—ரூ. 1,35,450.

மொத்தம்—ரூ. 3,61,450.

**வரவு செலவு விவரம் :**

1. மாவுப் பொருள்—900 டன்.

2. காய்ந்த கிழங்குக் கழிவுகள்—500 டன்.

3. கிழங்குத் தோல் மற்றும் பல கழிவு கள்—எருவாக.

4. ஓராண்டில் கிடைக்கக் கூடிய உத் தேச இலாபம் — 1 இலட்சம் ரூபாய்.

**ஜவ்வரிசி :**

தரமான ஜவ்வரிசி மரவள்ளிக் கிழங்கி லிருந்து தயாரிக்க முடியும்.

**தயாரிக்கும் முறை :**

மரவள்ளிக் கிழங்கை நன்கு கழுவி, தோல் உரித்து மாவாக இயந்திரத்தில் அறைத்து நார் பொருட்களை வடிகட்டி, கிழங்குப் பாலை வடிய வைத்து, அடியில் தங்கும் மாவுப் பொருளைக் காய வைக்க வேண்டும். அப்படிக் காய வைத்த மாவுப் பொருள் 30 சதவிகித ஈரப் பதத்தில் இருக்கும்பொழுது எடுத்து, இயந்திரச் சல்லடைகளில் சலித்து, உருண்டைகளாக மாற்ற வேண்டும். அவ்வாறு செய்ய, குலுக்கும் இயந்திரம் பயன்படுகிறது. இவை மரத்தாலானவை. அடிப்புறம் உலோகத்தாலானவை. உலோகத் தகட்டின் மீது ஒரு துணி விரிப்புப்போடப்பட்டிருக்கும். மரத் தொட்டி அசைந்தாடும் பொழுது ஈரப்பதத்திலிருந்து மாவுப் பொருள் உருண்டைகளாக மாறுகின்றன. அவ்வப்போது கட்டிகளை உடைக்க ஓர் ஆள் இருந்தால் போதுமானது. இவ்வாறு உருண்டைகளாக மாற்றிய பின், ரக வாரியாகப் பிரித்துச் சற்று வறுத்துக் காய வைக்க வேண்டும்.

வறுத்துக் காய வைத்த ஜவ்வரிசிகள் கட்டிகளாக மாற இடமுண்டு. அவ்வாறு மாறாமலிருக்க பாலிஷ் செய்து தேவையான அளவு பைகளில் அடைத்து விடலாம். எடுத்துக் கொண்ட மரவள்ளிக் கிழங்கின் மொத்த எடையில் சுமார் 25 முதல் 30 சதவீத எடையளவிற்கு ஜவ்வரிசி தயாரிக்கலாம். ஒரு சாதாரணத் தொழிற்கூடத்தில் நாள் ஒன்றிற்கு 2 டன் கிழங்கிலிருந்து ஜவ்வரிசி செய்ய முடியும். ஆறு மாத காலத்தில் மாதத்தில் 25 நாட்கள் வீதம் ஒரு தொழிற் கூடம் செயல் படவும் அதன் மூலம் சுமார் 75 டன் ஜவ்வரிசி உற்பத்தி செய்யவும் வாய்ப்புகள் உள்ளன.

**தேவையான வசதிகள் :**

தொழிற்சாலைக்கான நிலப்பரப்பு—0.5 ஏக்கர்.

நிரந்தரச் செலவுகள்—ரூ. 15,500

மூலப்பொருள்கள் போன்ற இதர செலவுகள்—ரூ. 54,702.

சராசரி மாத இலாபம்—ரூ. 400.

இது போலவே மரவள்ளிக்கிழங்கிலிருந்து வறுவல், சேமியா, டெக்ஸ்டிரீன், குளுக்கோஸ் திரவம், ரவை போன்ற பொருள்களையும் தயாரிக்க முடியும். இவற்றிற்கான வாய்ப்புகளும் தஞ்சையில் இல்லாமலில்லை.

## சிறு தானியங்களைச் சார்ந்த சிறு தொழில்கள்

மக்காச் சோளம், கேழ்வரகு போன்ற தானியங்களைக் கொண்டு ஸ்டார்ச், டெக்ஸ்டிரீன், குளுக்கோஸ் திரவம், பாப் கார்ன், ராகி மால்ட் முதலியன தயாரிக்கலாம்.

'பாப் கார்ன்' என்பது தற்பொழுது எல்லாராலும் விரும்பி உட்கொள்ளப்படும் சிற்றுண்டியாகும். இது மக்காச் சோளத்திலிருந்து தயாரிக்கப்படுகிறது. பாப் கார்ன் இயந்திரத்தின் விலை சுமார் ரூ. 10,000. டெக்ஸ்டிரீன் தயாரிக்க ரூ. 30,000 முதலீடு தேவைப்படும். தற்போது 'குளுக்கோஸ்' பல மாத்திரை வடிவில் தயாரிக்கப்பட்டு, மக்களால் விரும்பிச் சாப்பிடப்படுகிறது. இவற்றிற்கான மார்க்கெட் மேலும் உயர வாய்ப்பு உள்ளது.

ராகி (கேழ்வரகு)யிலிருந்து மால்ட் எனப்படும் சத்தான மாவுப்பொருளைத் தயாரிக்கலாம். இது சிறுவர் முதல் பெரியவர் வரை எல்லாருக்கும் ஏற்ற உணவாகும். தற்போது சத்துணவு வகைகள் பல விற்பனையாகின்றன. அவை பெரும்பாலும் கேழ்வரகு, நிலக்கடலை மாவு, பயறு வகைகளின் மாவு, சர்க்கரை, தாது உப்புகள், உயிர்ச் சத்துக்கள் கலந்த கலவையாகும். கேழ்வரகிற்குப் பதிலாகக் கம்பு, மக்காச் சோளம் மேலும் சோளம் முதலியவைகளையும் பயன்படுத்தலாம்.

**சத்துணவு தயாரிக்கும் முறை :**

கேழ்வரகு நன்றாக சுத்தப்படுத்தப்பட்டு பின்பு முளைக்க வைக்கப்பட வேண்டும். அதை வெயிலில் காய வைத்து, முளைகளைத் தேய்த்து எடுத்து விட வேண்டும். பிறகு விதைகளை நன்கு பொடியாக்கிச் சலித்து வைத்துக் கொள்ள வேண்டும்.

நிலக்கடலைப் பருப்புகளிலிருந்து முளைகளையும், சிவப்புத் தோலையும், நீக்கி, சுத்தப் படுத்த வேண்டும். பின்னர் கடலையை ஆட்டி அதிலுள்ள உபரி எண்ணெய்யை எடுத்து விட வேண்டும். தேவைப்படும் பொருள் அதன் பிண்ணாக்குதான். அதை நன்கு பொடியாக்கி, சலித்து எடுத்து வைக்க வேண்டும்.

பாசிப் பயறு, கொண்டைக் கடலை, துவரம் பருப்பு போன்ற பயறு தானியங்களை வறுத்துச் சுத்தம் செய்து கொள்ள வேண்டும். முளை, மேல் தோல் முதலியவற்றை நீக்கிச் சுத்தம் செய்ய வேண்டும். தானியத்தை நன்கு பொடியாக்கிச் சல்லடையில் சலித்து எடுத்து வைக்க வேண்டும். வெண்ணெய் எடுத்த பாலும் தேவைப்படுகிறது. சர்க்கரை, கோகோ, தாது உப்புகள், உயிர்ச்சத்துக்கள் முதலியவற்றைத் தகுந்த அளவில் கலந்து வைத்துக்கொள்ள வேண்டும். தாது உப்புக்களைக் கெடாமல் பிடித்து வைத்துக் கொள்ளும் சக்தியுடைய எண்ணெய்ப் பொருள் ஒன்றை ஆதாரமாகச் சேர்க்க வேண்டும்.

மேற்கூறிய பொருள்களைக் கீழ்க்கண்ட அளவில் சேர்த்தால் சத்துணவு ஆகிவிடும் :

| | |
|---|---|
| ராகி மாவு | 25 பங்கு |
| எண்ணெய் நீக்கப்பட்ட கடலை மாவு | 30 பங்கு |
| கொழுப்பு நீக்கிய பால் | 10 பங்கு |
| சர்க்கரை | 20 பங்கு |
| பருப்பு மாவு | 12 பங்கு |

| | |
|---|---|
| கோக்கோ அல்லது எண்ணெய்ப் பொருள் | 2 பங்கு |
| தாது உப்புக்கள், உயிர்ச் சத்துக்கள் | 1 பங்கு |
| மொத்தம் | 100 பங்கு |

தஞ்சை மாவட்டத்தில் ஒரு தொழிற்சாலை அளவில் இதை ஆரம்பிக்கலாம். தக்க வாய்ப்புகள் உள்ளன என்பது திண்ணம்.

ஒரு நாள் உற்பத்தி 500 கிலோ என்று கொண்டால் தேவைப்படும் வேலை நாட்கள் 300—ஆண்டு உற்பத்தி 150 டன்களாகும்.

**தேவையான வசதிகள் :**

நிலப்பரப்பு—0.5 ஏக்கர்.

கட்டடம், இயந்திரங்களுக்கானமுதலீடு: ரூ. 45,000.

அலுவலர்களுக்கான செலவு : ரூ.30,000

மூலப்பொருட்கள், ரசாயன பொருட்கள் ரூ. 2,04.000.

சராசரி ஆண்டு இலாபம் : ரூ. 50,000.

தொழில் வாய்ப்பு: 30—40குடும்பங்கள்.



## வாழை சம்பந்தப்பட்ட தொழில்கள்

1. வாழை மாவு
2. வாழை ரசம்
3. வாழைப்பழ அத்தி முதலியவை

சுலபமாகத் தயாரிக்கலாம். வாழை மாவு ஐஸ் கிரீம் மேலும் பிஸ்கெட் முதலியன தயாரிக்க உதவுகிறது. தமிழகத்தின் தேவைக்கு தற்போது பம்பாயிலிருந்து இது வரவழைக்கப்படுகிறது. வாழைப் பழ ரசம் மைசூரில் தயாரிக்கப்பட்டு மிகவும் பிரபலமாகியுள்ளது.

**வாழைப்பழ அத்தி (பனனா பிக்):**

வாழைப் பழத்தில் 20 சதம் சர்க்கரைப் பொருளும், உயிர்ச் சத்துக்கள் ஏ, பி, சி போன்றவையும் மற்றும் பல தாது உப்புகளும் உள்ளன. வாழைப்பழ அத்தி என்பது காய வைத்த வாழைப்பழத்தின் வெட்டப்பட்ட பாகத்தின் பெயராகும். இது சுவைப்பதற்கு மிகவும் இனிமையாகவும், சத்து நிறைந்ததாகவும் உள்ளதால் பலர் விரும்பி ஏற்பர்.

**தயாரிக்கும் முறை :**

நன்கு முதிர்ந்த தரமான பழங்களின் தோலை உரித்து நீளவாக்கில் இரண்டாக எவர் சில்வர் கத்தியால் வெட்டிக் கொள்ளவேண்டும். பின்பு அறுத்த பழங்களை ஒரு சதம் ‘சோடியம் கார்பனேட்’ கரைசலில் 15 நிமிடம் வைத்திருக்க வேண்டும். பிறகு 0.05 சதவீத சிட்ரிக் அமிலத்தில் கழுவி பிறகு மீண்டும் நீரில் கழுவி கட்டுகளில் பரப்பி கந்தக ஆவி படும்படி உலரச் செய்ய வேண்டும். கந்தக ஆவியின் அளவு ஆயிரம் கன அடி கொள்ளளவு உள்ள பெட்டியின் உள் தட்டுகளில் 8 பவுண்டு கந்தகத்தை எரிக்க வேண்டும். இவ்வாறு செய்வதால் வாழைப்பழ அத்தியின் நிறமும் கெடுவதில்லை. மேலும் ருசியும் அதிகரிக்கிறது. இதனால் பூஞ்சாளம் பிடிக்காமல் பொருள் கெடாமல் பாதுகாக்கப்படுகிறது. மேலும் உயிர்ச் சத்துக்களும் இழக்காமல் நிறுத்தப்படுகின்றன.

கந்தக ஆவியில் ஒரு மணி நேரம் வைத்திருந்த பின்பு சுமார் 20 மணி நேரம் வெயிலில் உலர்த்த வேண்டும். பின்பு வாழைப்பழ அத்தி கையில் ஒட்டாத நிலைக்கு வந்தவுடன் தேவையான பாத்திரங்களில் சேகரித்துக் கொள்ளலாம். ஈரப் பசை தக்க அளவு வந்தவுடன் சேமிக்கலாம்.

**தேவையான கருவிகள் :**

1. ஈரம் நீக்கும் கருவி
2. கந்தகப் பெட்டி—1
3. கழுவும் தொட்டிகள்
4. தட்டுகள்—10
5. சீல் வைக்கும் கருவி
6. எடைக் கருவி
7. அடைக்கும் பொருட்கள்.

உற்பத்தித் திறன் — ஒரு நாளில் 500 கிலோ.

## தென்னையைச் சார்ந்த தொழில்கள்

தஞ்சை மாவட்டத்தில் தென்னைச் சாகுபடி அதிகம். தென்னையிலிருந்து நாம் பெறுகின்ற காய்களை விற்று வருமானம் அடைகிறோம். ஓலைகளை கீற்றுகளாகப் பின்னி விற்பனை செய்கிறோம். உரியா மட்டை பெரும்பாலும் வீணாக்கப்படுகின்றன. தேங்காய்த் துறுவல் வெளிநாட்டினரால் பெரிதும் விரும்பப்படுகின்றது. கேக்குகள், பாக்குப் பொடி முதலியவைகளுடன் இது கலக்கப்பட்டு உள்நாட்டிலும் விற்பனையாகிறது. அதற்கான தொழிற்கூடத் தேவையைப் பார்ப்போம்.

துருவும் இயந்திரம் மற்றும் உலர வைக்கும் இயந்திரம்—ரூ. 50,000 மதிப்புள்ளது.

நாள் ஒன்றுக்கு 2,000 தேங்காய்களைத் துருவலாம். ஒரு கிலோ துருவலின் மதிப்பு ரூ. 40 ஆகும். பம்பாயிலிருந்து அதிக அளவில் இது தற்போது வெளிநாடுகளுக்கு அனுப்பப்படுகிறது. எனவே நமது மாவட்டத்திலும் இதே போன்று ஒரு தொழிற்கூடத்தை சுலபத்தில் அமைக்கலாம்.

தேங்காய் மட்டையிலிருந்து நார், கயிறு முதலியன தயாரிக்கலாம். தேங்காய் ஓட்டிலிருந்து (கொட்டாங்குச்சி) கெட்டியான பித்தான், போர்டு முதலியன தயாரிக்கலாம். தேங்காய் உரிக்கும்போது விழும் பொடித் தூளிலிருந்து இலேசான, கனம் குறைந்த பல பல மேட்ரஸ்கள் செய்யலாம். இவற்றிற்கான மார்கெட் மிகவும் நன்றாக இருக்கின்றது.

## நிலக்கடலையைச் சார்ந்த தொழில்கள்

நிலக்கடலையிலிருந்து மிட்டாய் தயாரிக்கலாம். கடலையை வறுத்து பிளாஸ்டிக் பையிலிட்டு விற்றால் பெரிய ஹோட்டல்களிலும் விற்பனையாகிறது. கடலையிலிருந்து வெண்ணெய், பால் முதலியன தயாரிக்கலாம். நிலக்கடலையை மாவாக்கி, சத்துணவுகளாகிய புராடினியூல் பேரக்ஸ் போன்ற குழந்தைகளுக்கான சத்துணவும், பொருட்களும் தயாரிக்கலாம். இவற்றிற்குத் தற்போது வெளிநாட்டு விற்பனையும் அதிகமாக உள்ளது.

## அரிசியைச் சார்ந்த தொழில்கள்

அரிசியில் தவிட்டிலிருந்து எண்ணெய் திருவாரூரில் எடுக்கப்படுகிறது. இந்த எண்ணெய் வனஸ்பதி, சோப்பு முதலியவை தயாரிப்பதற்குப் பயன்படுத்தப்படுகிறது.

நெல் உமியை எரித்து 'ஊக்குவிக்கப்பட்ட கரி'யாகத் தயாரிக்கலாம். இதன் மதிப்பு கிலோவுக்கு ரூ. 4 ஆகும்.

## பழங்கள், காய்கறிகள் முதலியவற்றைச் சார்ந்த தொழில்கள் :

பழங்கள் காய்கறிகளைப் பயன்படுத்தி ஊறுகாய், சட்னி, அப்பளம், வற்றல், ஜாம், ஜெல்லி, பழரசம், முந்திரி, வறுவல் முதலியன தயாரிக்கலாம். மா, எலுமிச்சை, பலா, முந்திரி இம் மாவட்டத்தில் அதிகம் பயிரிடப்படுவதால் மேற்கண்ட பொருட்களைத் தயாரிப்பதன் மூலம் விளைபொருட்களின் மதிப்பை உயர்த்தலாம்.

பழ வகைகளிலிருந்து தயாரிக்கும் பொருட்களுக்குண்டான தொழிற்சாலைகளுக்கு வசதிகள் பற்றி ஆராய்வோம்.



1 தேவைப்படும்நிலப்பரப்பளவு—0.5 ஏக்கர்.

2 கட்டிடங்கள்—2,000 செ.மீ.

3 இயந்திரங்கள், உபகரணங்கள் :

1. அடுப்பு
2. எவர்சில்வர் கெட்டில்
3. ரிப்போர்ட் 2 நெம்பர்
4. செயின் டைப் புகைபோக்கி
5. சீல் வைக்கும் இயந்திரம்
6. எடைக் கருவி
7. கூழாக்கும் கருவி
8. சாறு பிழியும் கருவி
9. பாட்டில் நிரப்பும் கருவி
10. பாத்திரங்கள், மரத்தட்டுகள், தொட்டில்கள் முதலியன

தேவையான மூலப்பொருட்கள் :

பழங்கள், காய்கறிகள், சர்க்கரை, வாசனைப் பொருட்கள், ரசாயனப் பொருட்கள், டின் பாத்திரங்கள், லேபிள், அடைக்கும் பொருட்கள் முதலியன. சாதாரண இயந்திரம் மூலம் சராசரியாக நாள் ஒன்றுக்கு 250 கிலோ உற்பத்தி செய்யலாம். இதற்கான உள்நாட்டு வெளிநாட்டு மார்க்கெட் காத்திருக்கிறது.



# மலர்களிலிருந்து கிடைக்கும் தொழில்

மல்லிகை அத்தர் : மல்லி, முல்லை, ஜாதி மல்லி ரகங்களிலிருந்து வாசனைத் திரவியம் தயாரிப்பது மிகவும் லாபம் தரும் தொழில். வாசனை எண்ணெய்யை மலர்களிலிருந்து பிரித்து எடுக்கப் புதிய இயந்திரம் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தினரால் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. இந்த இயந்திரத்தின் தற்போதைய விலை ரூ. 6,000 ஆகும். மின்சாரத்தால் இயங்கவல்லது. ஒரு ஆப்பரேட்டர் உதவி கொண்டு இயக்கிவிடலாம். காலை 9 மணிக்குள் பறிக்கப்பட்ட மலர்ந்த புஷ்பங்கள் இயந்திரத்தில் போடப்பட்டு ஹெக்ஸேன் (Hexanc) என்ற திரவத்தின் மூலம் கரைக்கப்படுகின்றன. இயந்திரத்தின் வேறு பல பாகங்கள் மூலம் வாசனை திரவியம் சென்று கடைசியாக (Jasmine Concrete) 'ஜேஸ்மின் கான்கிரீட்' என்ற மெழுகு போன்ற வாசனைப் பொருளாகவெளியாகிறது.

ஆயிரம் கிலோ மலர்களிலிருந்து சுமார் 3 கிலோ வரை வாசனைப் பொருள் தயாரிக்கலாம். வெளிநாட்டிலும் உள் நாட்டிலும் இதற்கு நல்ல மார்க்கெட் உள்ளது. ஒரு கிலோ ஜேஸ்மின் கான்கிரீட் தயாரிக்க ரூபாய் 4,500 செலவாகும். இதைச் சுமார் ரூபாய் 11,000க்கு விற்கலாம். இந்த இயந்திரத்தினை தினத்திற்கு ஆறு மணி நேரம் வீதம் இயக்கத் தேவைப்படும் மலர்களை சுமார் 3—4 ஏக்கரிலிருந்து பெறலாம். மல்லி, முல்லை மலர்கள் வருடத்தில் பத்து மாதங்களுக்குக் கிடைக்குமாதலால் அவற்றிற்கான இயந்திரத்தை பயன்படுத்திப் பிற மாதங்களில் ரோஜாவிலிருந்தும், லில்லி மலர்களிலிருந்தும் வாசனை எண்ணெய்யைப் பிரிப்பதற்கு உபயோகப்படுத்தலாம். இதுவும் தஞ்சைக்கு ஏற்றதே.

## முடிவுரை :

தஞ்சை மாவட்டத்தில் உள்ளஒவ்வொரு கிராமத்திலும் நிலவி வரும் சீதோஷ்ண நிலைமை, மண், விவசாயம் இவற்றிற்கேற்ப பயிரிடத் தகுந்த புதுப் பயிரினங்களை ஆய்வு செய்து அவற்றைப் புகுத்தி அதன் மூலம் ஓரிரு சிறு தொழிலையும் ஆரம்பிக்கலாம். அவ்வாறு சிறு தொழில்களை ஆரம்பிப்பதால் வருடம் முழுவதும் வேலைவாய்ப்பு ஆண் பெண் இருபாலருக்கும் ஏற்படுகிறது. இதனுல் விவசாயத் தொழிலாளர்களின் கூலிப் பிரச்சினை பெருமளவில் குறையும். மகளிர், மேலும் வளர்ந்த குழந்தைகள் முதலானேரும் சிறு தொழில்களில் ஈடுபடுவதால் வீட்டு வருமானம் கணிசமான அளவில் உயரும். வாழ்க்கைத் தரம் உயருவது திண்ணம்.

இச் சிறுதொழில்கள் அமைக்க இடவசதி, மற்றும் மின்சார வசதி, முதலியனவற்றைப் பொறுத்துத் தொழில்கள் ஆரம்பிப்பது பற்றி சிறுதொழில் வளர்ச்சிக் கழகம் உடனிருந்து ஆலோசனை வழங்கத் தயாராக உள்ளது. எனவே இத்தொழில்களை ஆரம்பிக்க ஒரு சிலர் மட்டும் தனி ஸ்தாபனமாகவோ அல்லது கூட்டுறவுக் கழகம் என்ற அளவிலோ ஆரம்பிக்கத்தொழில் துறையினரும் கூட்டுறவுத் துறையினரும் உதவிகள் புரிய முன்வந்துள்ளனர்.

இத்தொழில்கள் பற்றி மேலும் விரிவான விவரங்கள் பெற விரும்புவோர் ஆடுதுறை உழவர் பயிற்சி நிலையத்திற்கோ அல்லது துணை இயக்குநர், தொழில் துறை, தஞ்சை என்ற முகவரிக்கோ எழுதி விவரம் பெறலாம் என்று கூறிக்கொள்கிறேன். வாய்ப்புகளும் வசதிகளும் நிரம்பவுள்ள தஞ்சை மாவட்டம் தொழில் துறையிலும், முன்னேறி பிற மாவட்டங்களுக்கு முன் மாதிரியாக மாற வேண்டுமென எண்ணுகிறேன். அறிவும் ஆற்றலும் நிரம்பியுள்ள தஞ்சை மக்கள் இதைப் புரிந்து கொண்டு உடன் செயல்படுவார்கள் என்பது திண்ணம்.

*நன்றி* : **உழவர் பயிற்சி நிலையம், ஆடுதுறை.**



# மாவட்டங்களின் மாறிவரும் தோற்றம்!

## தஞ்சை மாவட்டம்

தஞ்சாவூர் மாவட்டத்தின் பாசன வசதியை மேம்படுத்தும் நோக்குடன் டெல்டாப் பகுதியைச் சீரமைப்பதற்காக எடுத்துக் கொண்டுள்ள சீரமைப்புத் திட்டத்திற்கு, இவ்வாண்டும், சென்ற ஆண்டினைப் போல் 7 கோடி ரூபாய் செலவிடப்படும். இச் சீரமைப்புத் திட்டத்தில் பழைய காவிரி டெல்டா பகுதியில் உள்ள 'ஏ' பிரிவு கால்வாய்கள் சீரமைக்கப்படும். சரியான வடிகால்வசதி கடைமடைப் பகுதிகளில் அமைத்துத் தரப்படும்.

தேவையான இடங்களில் புதிய ரெகுலேட்டர்கள்' கட்டப்படும். காவிரியில் பாசன வசதிக்கு விடப்படும் தண்ணீரை மிகச் சிக்கனமாகவும், அதே சமயம் தண்ணீர் அதிக அளவு பயன்படும் முறையிலும் அமைக்க இந்தச் சீரமைப்புத் திட்டம் மேற்கொள்ளப் பட்டுள்ளது. 70 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ள திட்டம் இது. மார்ச் 31-ஆம் தேதி முடிய 11 கோடியே 37 இலட்சம் ரூபாய் இத்திட்டத்திற்காகச் செலவிடப்பட்டுள்ளது.

இம்மாவட்டத்தில் பொதுப் பணித்துறையினர், பாசன வசதிகளில் விவசாயிகள் கொண்டுள்ள குறைகளைத் தெரிந்துகொள்ள புதிய ஏற்பாடு ஒன்றினைத் தற்போது செய்து முடித்துள்ளனர். மாவட்ட ஆட்சித் தலைவர் உட்பட, மாவட்ட முக்கிய அலுவலர்களுடன் பொதுப்பணித்துறை அலுவலர்கள் பல்வேறு இடங்களில் விவசாயிகளை வரவழைத்து பேச்சு நடத்தினர். இச்சந்திப்பின் விளைவாக பாசன வசதிகள் சம்பந்தப்பட்ட சில உடனடிப் பிரச்சினைகளைத் தீர்க்க, இத்துறை முன்வந்துள்ளது.

இம்மாவட்டத்தில் உள்ள 1,408 'ஏ' பிரிவு கால்வாய்கள் அனைத்தும் அடுத்த ஆண்டு முடிவிற்குள் முழுவதும் மராமத்து செய்யப்பட்டு, சீரமைக்கப்பட்டு விடும். இதுவரை 868 கால்வாய்கள் சீரமைக்கப்பட்டுள்ளன. 343 கால்வாய்கள் தற்போது சீரமைக்கப்பட்டு வருகின்றன. மீதமுள்ள கால்வாய்களின் சீரமைப்பு வேலைகள் இவ்வாண்டு மேற்கொள்ளப்படும்.

பருவ மழைக் காலத்தில், ஒவ்வொரு ஆண்டும் இம்மாவட்டத்தின் கடைமடைப் பகுதிகளில் சுமார் 40 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் தண்ணீர் தேங்குவதால் சேதமடைவது வழக்கம். வசதியான வடிகால் வசதிகள் இல்லாமல் இருப்பதே இதற்குக் காரணம். எனவே, இவ்வாண்டு 20 வடிகால் திட்டங்கள் 88 இலட்சம் ரூபாய் செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

24 இலட்சம் ரூபாய் செலவில், 8 புதிய 'ரெகுலேட்டர்கள்' பல்வேறு இடங்களில் அமைக்கப்பட்டு வருகின்றன. பாசனத்திற்கு விடப்படும் தண்ணீரைச் சீராகவும், குறிப்பிட்ட அளவு கிடைக்கச் செய்யவும் இவை பயன்படும். தவிர பல்வேறு இடங்களில் இருந்து வரும் பழைய ரெகுலேட்டர்களும் மாற்றியமைக்கப்பட்டு வருகின்றன.

விவசாயிகள் பாசனத்திற்குக் கிடைக்கும் தண்ணீரைச் சிக்கனமாக உபயோகிக்கும் வழிகளை நன்கு தெரிந்து கொள்ள, தீவிர சாகுபடித்திட்ட இயக்குநர் சில ஏற்பாடுகளைத் தற்போது மேற்கொண்டுள்ளார். வேளாண்மைத் துறையினரால் கபிஸ்தலம், கல்லூர் ஆகிய இடங்களில் தண்ணீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துவது என்பதை விளக்கிக் காட்டுவதற்காக மாதிரிப் பண்ணைகள் நடத்தப்பட்டு வருகின்றன. இம் மாதிரிப் பண்ணைகளை இம்மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் இருந்தும் விவசாயிகள் பார்வையிட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இதன்படி, தற்போது நாள்தோறும் பகுதி பகுதியாக விவசாயிகள் இக்கிராமங்களுக்கு அழைத்து வரப்படுகிறார்கள். இவர்கள், மாதிரிப் பண்ணை விவசாயிகளுடன் பேசி, நடைமுறையில் இத்திட்டம் எவ்வாறு உள்ளது என்பதை அறிகின்றனர். இவ்வாண்டு 133 கிராமங்களில் இம் மாதிரித் திட்டத்தை விரிவுபடுத்த தீவிர சாகுபடித் திட்ட இயக்குநர் திட்டமிட்டுள்ளார்.

இம்மாவட்டத்தின் மேற்கு டெல்டா பகுதியில் குடி தண்ணீர் வசதி சரியாக இருக்கின்றபோதிலும், பிற பகுதிகளில் கோடையின் காரணமாகத் தட்டுப்பாடு தோன்றியுள்ளது. மாவட்ட ஆட்சித் தலைவர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்துடன் தொடர்பு கொண்டு, குடிதண்ணீர்த் தட்டுப்பாட்டினை நீக்க முயற்சிகள் மேற்கொண்டுள்ளார்.

இம்மாவட்டத்தில் 1976-77-ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டுள்ள கிராம வளர்ச்சிப் பணிகளில் சிறப்பான பணிகள் பல முடிவடைந்துள்ளன. கிராமச் சாலைகளைப் பிரதான சாலைகளுடன் இணைக்கும் திட்டத்தில் 105 கிலோ மீட்டர் முடிக்கத் திட்டமிட்டுச் செயல்படுத்தப்பட்டுள்ளது.



90 கிராமங்களில் குடிநீர் வசதி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. 29 ஆரம்பக் கல்வி நிலையங்களுக்குக் கட்டடம் கட்டித் தரத் திட்டமிட்டத்தில் இதுவரை 11 நிலையங்களுக்கு கட்டடம் கட்டித் தரப்பட்டுள்ளது. மீதமுள்ள 18 நிலையங்களுக்கான கட்டட வேலைகள் நடைபெற்று வருகின்றன.

## தென்னார்க்காடு மாவட்டம்

தென்னார்க்காடு மாவட்டத்தில் மேலும் ஒரு கூட்டுறவு சர்க்கரை ஆலை இவ்வாண்டு தொடங்கப்படும். இவ்வாலை உளுந்தூர்ப் பேட்டை வட்டம் திருவெண்ணெய் நல்லூர் பஞ்சாயத்து யூனியன் எல்லைக்குள் டிசம்பர் மாதத்திலிருந்து ஆரம்பிக்கப்

படும். தற்போது தென்னார்க்காடு மாவட்டத்தில் உள்ள நான்கு சர்க்கரை ஆலைகளில் மூன்று, தனியார் துறையிலும், ஒன்று கூட்டுறவுத் துறையிலும் உள்ளன.

அண்மையில் நடைபெற்ற கூட்டத்தில், தமிழ்நாடு சர்க்கரை கார்ப்பொரேஷன் நிர்வாக இயக்குநர் திரு லட்சுமிரதன் அவர்கள், தொடங்கவிருக்கும் சர்க்கரை ஆலையின் பங்குத் தொகை வசூலைத் தொடக்கி வைத்தார். 25 இலட்சம் ரூபாய் பங்குத் தொகையுடன் ஆலை தொடங்கும். தொழிற்சாலை அமைப்பது சம்பந்தமாக குறைந்தது ஒரு கோடி ரூபாய் தேவைப்படும் என்று அவர் கூறினார். பெரிய சிவலையில் ஏற்படவிருக்கும் சர்க்கரை ஆலைக்கு, குறைந்தது 6 கோடி ரூபாய் தேவைப்படும் என்றும் விவசாயிகளிடமிருந்து ஒரு கோடி ரூபாய் வரவேண்டுமென்றும், மாநில அரசு ஒரு கோடியே 50 இலட்சம் ரூபாய் கொடுக்கும் என்றும் தென்னார்க்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் அக்கூட்டத்தில் தெரிவித்தார். மிகுதித் தொகை தேசியமயமாக்கப்பட்ட வங்கியிலிருந்து கடனாகப் பெறப்படுமென்றும் அவர் குறிப்பிட்டார்.

இம்மாவட்டத்தில் வீராணம் ஏரிக்கு அடுத்தபடியாக உள்ள பெரிய ஏரி பெருமாள் ஏரி. இதனால் 7,000 ஏக்கர் நிலப் பரப்பு, பாசன வசதி பெறுகிறது. தற்சமயம் ஏரியில் நீர்மட்டம் குறைந்து வறண்டுவிட்டது. எனவே விவசாயிகள் காவிரி நண்ணீர் வீராணம் ஏரிக்குக் கிடைப்பதுபோல் நிரந்தரமாகப் பெருமாள் ஏரிக்கும் கிடைக்கும்படிச் செய்ய வேண்டுமென்று விடுத்த கோரிக்கைக்கிணங்க, மாவட்ட ஆட்சித் தலைவரின் ஆலோசனையின் பேரில், நெய்வேலியிலிருந்து வெளியேற்றப்படும் தண்ணீரை, செங்கால் ஓடை வழியாகப் பெருமாள் ஏரிக்கு விட ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

விருத்தாச்சலம் அரசினர் மருத்துவ மனையில் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவில் 28 படுக்கைகள் உள்ள புதிய கூடுதல் கட்டடம் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.

## செங்கற்பட்டு மாவட்டம்

செங்கற்பட்டு மாவட்டத்தில் இவ்வாண்டு நவரைப் பருவத்தில் சுமார் 2.5 இலட்சம் ஏக்கரில் நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. நல்ல மகசூல் எதிர்பார்க்கப்படுகிறது. 61 ஆயிரம் ஏக்கரில் புன்செய்ப் பயிரான கேழ்வரகு பயிரிடப்பட்டுள்ளது.

காஞ்சிபுரம் கூட்டுறவு மத்திய வங்கியின் மூலம் குறுகிய காலக் கடனாக 8 கோடியே, 47 இலட்சத்து 21 ஆயிரம் ரூபாயும், நீண்டகாலக்கடனாக 3 கோடியே, 39 இலட்சத்து 54 ஆயிரம் ரூபாயும் விவசாயிகளுக்கு அளிக்கப்பட்டுள்ளது. இவற்றைத் தவிர நகைகளின் பேரில் ஒரு கோடியே 3 இலட்சத்து 35 ஆயிரம் ரூபாய் கொடுக்கப்பட்டுள்ளது.

சிறுசேமிப்பில் இம்மாவட்டத்தின் இலக்கு ஒரு கோடியே, 25 இலட்சம் ரூபாய்தான். ஆனால் இதுவரை சுமார் ஒரு கோடியே 58 இலட்சம் ரூபாய் வசூலாகி உள்ளது என்றால், இம்மாவட்ட மக்கள் சிறுசேமிப்பில் எவ்வளவு அக்கறை வைத்துள்ளனர் என்பதை அறிய முடிகிறது.



சிறு விவசாயிகள் மேம்பாட்டுக் கழகத்தின் மூலமாக இதுவரை 19 ஆயிரம் விவசாயிகள் பயனடைந்துள்ளனர். மொத்தமுள்ள 27 பஞ்சாயத்து யூனியன்களில் 12 யூனியன்களை இக்கழகம் தேர்ந்தெடுத்து தேசிய உடைமையாக்கப்பட்ட வங்கிகள் மூலம் விவசாயிகளுக்கு சுமார் 80 இலட்சம் ரூபாய் கடனுதவி செய்துள்ளது. அதில் 21 இலட்சம் ரூபாய் மானியமாகும்.

கடந்த ஆண்டில் 7 இலவச கண் அறுவைச் சிகிச்சை முகாம்கள் நடத்தப்பட்டன. 1,600 பேருக்கு கண் அறுவைச் சிகிச்சை செய்யத் திட்டமிடப்பட்டு இதுவரை 1,635 பேருக்குக் கண் அறுவைச் சிகிச்சை செய்து, அவர்களுக்கு மூக்குக்கண்ணாடிகளும் இலவசமாக வழங்கப்பட்டன.

இணைப்புச் சாலைகளுக்காக கடந்த ஆண்டு 4 இலட்சத்து 67 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டு வேலைகள் நடைபெற்று வருகின்றன. அதைப்போல குடிதண்ணீர் வசதிக்காக 12 இலட்சத்து 78 ஆயிரம் ரூபாய் செலவில். ஒரு குடியிருப்புப் பகுதிக்கு 15 ஆயிரம் ரூபாய் வீதம். 87 குடியிருப்புப் பகுதிகளுக்குக் குடிதண்ணீர் வசதி ஏற்பாடு செய்துதர பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

36 பள்ளிக்கூடங்கள் கட்டித் தர ஒப்புதல் வழங்கப்பட்டு, அதற்காக 4 இலட்சத்து 81 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

புகழ் பெற்ற உல்லாசப் பயணிகள் இடமான மாமல்லபுரத்தில், தொழிற்சாலைகளில் வேலை செய்யும் தொழிலாளர்கள், தங்கள் வார விடுமுறையைக் கழிக்க ஓர் ஓய்வு இல்லம் கட்டத் திட்டமிடப்பட்டு அதற்கான இடம் ஆர்ஜிதம் செய்யப்பட்டுள்ளது.

## வட ஆர்க்காடு மாவட்டம்

பல துறையில் தொழில் பயிற்சி பெற்றவர்கள் தொழிற்சாலை ஆரம்பிக்க, தொழில் வர்த்தகத் துறை 10 இலட்சம் ரூபாய் வரை வட்டியில்லாக் கடன் வழங்கும்.

(ரெடிமேட்) சட்டைகள் இந்நாட்டிலிருந்து 200 கோடி ரூபாய் முதல் 300 கோடி ரூபாய் மதிப்புக்கு அமெரிக்கா, மற்றும் பல வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. துணிகளை வெட்டித் தைப்பதற்கான பயிற்சி அளிக்க அமெரிக்காவிலுள்ள நிறுவனம் ஒன்று முன் வந்துள்ளது. இம்மாவட்டத்தில் 400 தையல் தொழிலாளர்களுக்குப் பயிற்சி அளிக்க அந்த நிறுவனம் உதவி செய்யும் என்று வடஆர்க்காடு மாவட்டச் சிறுதொழில்சங்கத்தின் தலைவர் திரு சொக்கலிங்கம் அவர்கள் தெரிவித்துள்ளார்.

வேலையின்மையைப் போக்க, நலிந்த தொழிற்சாலைகளையும், மூடிவிடும் நிலையிலுள்ள தொழிற்சாலைகளையும் புதுப்பித்து உற்பத்தியைப் பெருக்க ஸ்டேட் பாங்க் கடன் வழங்கும்.



கணியம்பாடியில் உள்ள அரிசனக் காலனியைச் சேர்ந்த 66 குடும்பங்களுக்கு 360 கோழிக் குஞ்சுகளை கால்நடைத் துறை இலவசமாக வழங்கியது. அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேலை வாய்ப்பு, கல்வி மருத்துவ வசதி அளிக்கவும் திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நகரங்களிலும் கிராமங்களிலுமுள்ள நடுத்தரக்குடும்பங்களின் வருவாயைப் பெருக்க உதவும் கோழிப்பண்ணைகளை ஆரம்பிக்க ஸ்டேட் பாங்க் கடன் வழங்கும். இதனால் ஒரு குடும்பத்திற்கு 80 ரூபாய் மாத வருவாய் கிடைக்கும். வேலூர் நகரத்தின் குடிநீர் அபிவிருத்திக்காக மேல் மொனவூர் ஆற்றிலிருந்து தண்ணீர் கொண்டு வரும் திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன் மதிப்பீட்டுச் செலவு ஒரு கோடியே 29 இலட்சத்து 70 ஆயிரம் ரூபாய். இதில் மூன்றில் ஒரு பகுதியை 'எல்.ஐ.சி' நிறுவனம் கடனாக வழங்கும்.

2,400 அரிசனக் குடும்பங்களுக்கு 4,000 ஏக்கர் நிலமும் 3,500 அரிசனக் குடும்பங்களுக்கு வீட்டு மனைகளும் அரிசனமல்லாத 15 ஆயிரம் குடும்பங்களுக்கு வீட்டுமனைகளும் வழங்கப்பட்டுள்ளன.



நெல், கரும்பு, வாழை, தென்னை போன்ற பயிர்களுக்கு 12 கோடியே 36 இலட்ச ரூபாய் மத்தியக் கூட்டுறவு வங்கி விவசாயிகளுக்கு கடன் வழங்கியது. இதே போன்று சிறு விவசாயிகளுக்கு 6 கோடியே 44 இலட்ச ரூபாய் கடனாக வழங்கியது. பசு மாடுகள், ஆடுகள், பட்டுப் பூச்சிகள் வளர்க்க 54 இலட்ச ரூபாயை இந்த வங்கி, இம்மாவட்டத்தில் உள்ள 34 கிளை வங்கிகள் மூலம் கடனாக வழங்கியது.

இந்தியா—பாகிஸ்தான் யுத்தத்தின்போது கொல்லப்பட்ட 42 போர்வீரர்களின் குடும்பங்களுக்கு 42 ஆயிரம் ரூபாயை இலவசமாக முப்படை வாரியம் வழங்கியது என முப்படை வாரிய உதவி இயக்குநர் திரு இராஜவேலு அவர்கள் தெரிவித்தார்.

முன்னாள் போர் வீரர்களின் பெண்கள் திருமணத்திற்கு 16 ஆயிரம் ரூபாய் இலவசமாக வழங்கப்பட்டது. போரில் கணவனை இழந்த பதினைந்து விதவைகளுக்குத் தையல் மிஷின்களும், பசு, ஆடு, பண்ணைகள் நடத்த ஒவ்வொரு விதவைப் பெண்ணுக்கும் கடனாக ஆயிரம் ரூபாயும் வழங்கப்பட்டது.



# தருமபுரி மாவட்டம்

சமீபத்தில் ஒசூருக்கு வருகை புரிந்த மத்திய மின்துறை அமைச்சர் திரு பா. இராமச்சந்திரன் அவர்கள் ஒசூரில் 30 இலட்சத்து 42 ஆயிரம் ரூபாய் செலவில் நிறைவேற்றப்பட இருக்கும் குடிநீர்த்திட்டத்திற்கு அடிக்கல் நாட்டினார். இத்திட்டம் 1978-ஆம் ஆண்டிற்குள் நிறைவேற்றி முடிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஒசூருக்கு எட்டு கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள பேராண்டபள்ளி என்னுமிடத்தில் பொன்னி ஆற்றிலிருந்து ஒசூருக்குக் குடிநீர் கொண்டு வர இதன் மூலம் திட்டமிடப்பட்டுள்ளது. முதற்கண் 3,000 வீடுகளுக்குக் குழாய்கள் மூலம் குடிநீர் விநியோகிக்கப்படும். இந்த அடிக்கல் நாட்டு விழாவில் 247 பேர்களுக்கு வீட்டுமனைப்பட்டாக்களை அமைச்சர் திரு பா. ராமச்சந்திரன் அவர்கள் வழங்கினார். மேலும் 101 முதியோர்களுக்கு ஓய்வு ஊதியத்தொகை வழங்குவதற்கான உத்தரவையும் அவர் வழங்கினார். ஒசூர் அருகே மூதறிஞர் ராஜாஜி பிறந்த ஊரான தொரப்பள்ளி கிராமத்திற்கு அமைச்சர் திரு பா. ராமச்சந்திரன் அவர்கள் சென்று, மூதறிஞர் ராஜாஜி பிறந்த வீட்டைப் பார்வையிட்டார். அக்கிராமத்தில் புதிதாகக் கட்டப்பட்ட தெலுங்குப் பள்ளிக்கூடக் கட்டிடத்தையும், குடிநீர்த் தொட்டியையும் அவர் திறந்து வைத்தார்.

தர்மபுரியில் 150 படுக்கைகளுடன் 22 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள புதிய அரசினர் மருத்துவமனைக் கட்டிடத்தையும் அமைச்சர் திறந்து வைத்தார்.

பாலக்கோடு கூட்டுறவு சர்க்கரை ஆலை இம்மாதம் 3-ந் தேதியுடன் கரும்பு அறைவையை முடித்துக் கொண்டது. நவம்பர் முதல் தேதி முதல் அறைவை தொடங்கி கடந்த 6 மாதங்களில் இவ்வாலையில் இரண்டு இலட்சத்து 18 ஆயிரம் டன் கரும்பு அறைவை செய்யப்பட்டு, 2 இலட்சத்து 3 ஆயிரத்து 400 மூட்டை சர்க்கரை உற்பத்தி செய்யப்பட்டது. இந்த சர்க்கரை ஆலையில் உற்பத்தி தொடங்கிய கடந்த 6 ஆண்டுகளில், இந்த ஆண்டே மிக அதிக அளவு சர்க்கரை உற்பத்தி செய்யப்பட்டது என்பது குறிப்பிடத் தக்கதாகும். இந்த ஆண்டு இவ்வாலையில் விசேஷ யந்திரம் பொருத்தப்பட்டு, 'சுகர்பீட்' கிழங்கும் அறைவைசெய்யப்பட்டு சர்க்கரை உற்பத்தி செய்யப்பட்டது.

இவ்வாண்டு இந்த ஆலையில் நாட்கூலியாக இருந்த 100 தொழிலாளர்கள் நிரந்தரப் பணியாளர்களாக ஆக்கப்பட்டுள்ளனர்.



# மாட்டு வண்டிகள் நவீனப்படுத்தப்படும்!

நம் நாட்டிலுள்ள கிராமங்களில் பெரும் பாலானவற்றில் தகவல் தொடர்பில் பிரதான அங்கம் வகிப்பது மாட்டு வண்டிகளேயாகும். மோட்டார் மூலமான போக்குவரத்தில் கணிச மான முன்னேற்றங்கள் காணப்பட்டிருந்தா லும் வரும் ஆண்டுகளிலும் மாட்டு வண்டிகள் முக்கியமான இடத்தை வகிக்கும். தற்போது இந்தியாவில் சுமார் 1 கோடியே, 30 இலட்சம் மாட்டு வண்டிகள் இருப்பதாக மதிப்பிடப் பட்டுள்ளது. ஆகவே, கிராமீய மக்களின் சமூகப் பொருளாதார கட்டமைப்பில் மாட்டு வண்டிகள் சீரிய பங்குகொண்டுள்ளன என் பதில் எந்தவிதச் சந்தேகமும் இல்லை. எனவே, நாட்டிலுள்ள மாட்டு வண்டிகள் சம்பந்தப்பட்ட பிரச்னைகள் குறித்து ஆராயவும், மாட்டு வண்டிகளை மிகவும் குறுகிய காலத்திற்குள் நவீனப்படுத்துவதற்கான விரிவான திட்ட நடவடிக்கை ஒன்றை வகுப்பதற்கும் மத்திய கப்பல் போக்குவரத்து அமைச்சகத்தின்கீழ் செயற்குழு ஒன்றை மத்திய அரசு அமைத்துள்ளது.

பல்வேறு நிறுவனங்கள் மற்றும் தனிப் பட்டவர்களால் வெளியிடப்படும் வளர்ச்சிகள் குறித்து அவ்வப்போது பரிசீலிப்பது, எதிர்கால ஆராய்ச்சிக்கான நிதித் தேவைகள் குறித்து கவனிப்பது, நிதிகளுக்கு ஏற்பாடு செய்வது (எவ்வெப்போது தேவையோ அவ்வப்போது) புதிய வண்டிகளுக்கான வடிவமைப்புகள் கண்டுபிடித்தல், கடன்வசதிகள், சமூகப் பொருளாதார ஆய்வுகள், மாட்டு வண்டிப் போக்குவரத்தின் விளைவுகள், புதிய வடி வமைப்புகளை பிரசித்தமாக்குதல் ஆகிய பல் வேறு அம்சங்கள் குறித்து பரிசீலிப்பது, மேற் கொண்டு அபிவிருத்திக்கான கருத்துக்களை யும், யோசனைகளையும் வரவேற்பது ஆகியவை இந்த செயற்குழுவின் பொறுப்புக்களாகும்.

இந்த செயற்குழுவிற்குச் சாலைகள் அபி விருத்தித் தலைமை இயக்குநர் தலைவர் ஆவார். விஞ்ஞானம் மற்றும் தொழில் நுட்பத் துறை யைச் சேர்ந்த விஞ்ஞான தொழில்துறை ஆராய்ச்சிக் கவுன்சில், மத்திய விவசாய நீர்ப்பாசன அமைச்சகம், கிராமிய அபி விருத்தி, விவசாய ஆராய்ச்சிக்கான இந்திய கவுன்சில், கால்நடை பராமரிப்புத் துறை, திட்டக் கமிஷன், பெங்களூரில் உள்ள இந்திய நிர்வாகக்கழகம் ஆகியவற்றைச் சேர்ந்த 6 பேர் இந்தச் செயற்குழுவின் உறுப்பினர் களாகும்.

# யுனெஸ்கோவும் இந்தியாவும்

யுனெஸ்கோவுடன் ஒத்துழைப்பதற்கான இந்திய தேசியக் கமிஷனின் ஆதரவில் விஞ்ஞான பவனில் யுனெஸ்கோவின் தலைமை இயக்குநர் திரு. அமடோவ் மக்டார் எம். போ. நிகழ்த்திய உரையின் வாசகம் வருமாறு:

அழகான இந்த நாட்டுக்கு வருமாறு இந்திய அரசாங்கம் அன்புடன் என்னை அழைத்தமைக்காக நான் பெருமைப்படுகிறேன். இந்தியாவின் சிறந்த விஞ்ஞானிகள், கல்வியாளர்கள், பண்பாட்டுத் தலைவர்கள் ஆகியோர் அடங்கிய இந்தப் பெருமன்றத்தில் பேசுவது நான் பெற்றபேறு என்று கருதுகிறேன்.

இந்த விஞ்ஞான பவனம் கவர்ச்சி நிறைந்த ஒரு பெரு மண்டபம். இதில் நின்றுகொண்டு உரையாற்றும்போது இந்த நாட்டின் அறிஞர்களுக்கும் யுனெஸ்கோவுக்கும் இடையே எப்போதும் இருந்து வந்திருக்கின்ற நெருங்கிய நல்லுறவு என் மனத்தில் உதிக்கிறது. 1956-ல் ஆசியாவிலேயே முதல் தடவையாக யுனெஸ்கோவின் ஒன்பதாவது தொடர் கூட்டம் இங்கு நடைபெற்றபோது அதைச் சிறப்பாக நடத்துவதற்காகவே இந்திய அரசாங்கம் எழில் நிறைந்த மண்டபத்தை அமைத்தது. ஆகையால் இந்தியாவுக்கும் யுனெஸ்கோவுக்கும் இடையேயுள்ள நெருங்கிய பந்தத்துக்கும் பாசத்துக்கும் அடையாளமாக இந்தக் கட்டடம் விளங்குகிறது.

யுனெஸ்கோவுக்கு இந்திய அரசாங்கமும் இந்திய மக்களும் எப்போதும் காட்டி வந்திருக்கிற ஆதரவை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் மிகவும் பாராட்ட விரும்புகிறேன்.

சீமான்களே! சீமாட்டிகளே!

உலகத்துக்குப் பெரும் சேதம் விளைத்த உலக யுத்தத்திற்குப் பிறகு, ஐக்கிய நாடுகள் சபையின் அமைப்பில் சிறப்பு மிக்க ஸ்தாபனங்களில் ஒன்ருக 1946 நவம்பரில் யுனெஸ்கோ உருவாயிற்று. போர்கள் ஒழிந்து அமைதி ஏற்படவேண்டுமானுல் மக்களுடைய மனத்தில் சமாதானம் என்ற கருத்து நிலைக்க வேண்டும் என்ற குறிக்கோளுடன் இந்த யுனெஸ்கோ ஸ்தாபனம் அமைக்கப்பட்டது.

''போர்கள் என்பன மனிதனுடைய மனத்தில் ஆரம்பித்து உருவாவதால், மனிதர்களுடைய மனத்தையே சமாதானக் கண்ணோட்டத்தில் திருப்பிவிட வேண்டும்'' என்ற பொருள் பொதிந்த சொற்கள் யுனெஸ்கோ சாசனத்தின் முன்னுரையாக அமைந்திருக்கின்றன.

இந்த உயர்ந்த இலட்சியங்களை நிறைவேற்ற யுனெஸ்கோ பலவாறு பாடுபட்டு வருகிறது. மக்களும் நாடுகளும் ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ள உதவுகிறது. மனித உரிமைகளை அனைவரும் மதிக்கவேண்டும் என்பதை வற்புறுத்துகிறது, கல்வி, விஞ்ஞானம், பண்பாட்டுத் துறைகளில் சர்வதேச ஒத்துழைப்பின் மூலம் முன்னேற்றம் ஏற்படவும் அறிவு வளரவும் பாடுபடுகிறது. மனித உரிமைகள், சமாதானம் ஆகியவை குறித்து அறிஞர்களுடைய கருத்தைப் பிரதிபலிக்கும் உலக அமைப்பாக இந்த ஸ்தாபனம் இயங்கி வருகிறது.

யுனெஸ்கோ ஏற்பட்ட சமயத்தில்தான், நீண்ட நெடுங்காலம் அடிமை நாடாக இருந்து பிறகு இந்தியா சுதந்திரம் பெற்றது. யுனெஸ்கோவை நிறுவிய உறுப்பினர்களுள் ஒன்று என்ற முறையில் இந்தியா இந்த ஸ்தாபனத்தில் மிகவும் பங்குகொண்டு எல்லா மாநாடுகளிலும் கலந்து கொண்டிருக்கிறது. யுனெஸ்கோவின் தலைமைச் செயலகத்துக்கும் பல நாடுகளின் அரசாங்கங்களுக்கும் இந்தியா எத்தனையோ நிபுணர்களை வழங்கி இருக்கிறது.

யுனெஸ்கோவின் 30-வது ஆண்டு விழாவை முன்னிட்டு, ''யுனெஸ்கோவும் இந்தியாவும் 30 ஆண்டு ஒத்துழைப்பு'' என்ற பயனுள்ள வெளியீட்டை இந்திய அரசாங்கத்தின் கல்வி அமைச்சகம் சிறந்த முறையில் வெளியிட்டிருக்கிறது. யுனெஸ்கோவின் நோக்கங்களையும் வேலைத் திட்டங்களையும் அறிந்து கொள்வதிலும் பரப்புவதிலும் இந்தியா மிகவும் அக்கறை காட்டி வந்திருக்கிறது.

இந்த வகையில் மூன்று திட்டங்கள் எனக்குச் சிறப்பாகத் தோன்றுகின்றன. முதலாவது தில்லியிலுள்ள பொது நூலகம் எவ்விதக் கட்டணமும் வசூலிக்காமல் யாரும் எளிதில் பயனடையக் கூடிய முறையில் இந்தியாவின் வரலாற்றிலேயே முதல் தடவையாக இந்த நூலகம் அமைக்கப்பட்டிருக்கிறது.

இதுபோல 1956-ல் கல்கத்தாவில் யுனெஸ்கோ சமூக அறிவியல் ஆராய்ச்சிக்கூடம் ஒன்றை நிறுவியிருக்கிறது. அது இப்போது வளர்ச்சியடைந்து ஆசிய நாடுகளுக்கான ஆராய்ச்சிக்கூடமாக அமைந்து சமூக, பொருளாதார வளர்ச்சி பற்றிய பிரச்சினைகளை ஆராய்ந்து வருகிறது.

மூன்ருவதாக நான் குறிப்பிடத்தக்கது, கல்வித்துறையில் திட்டமிடுவதற்கும் நிர்வாகம் நடத்துவதற்கும் உரிய ஆசிய நிறுவனம். 1962-ல் புது தில்லியில் இந்திய அரசாங்கமும் யுனெஸ்கோவும் இதை அமைத்தன. ஆசியாவெங்குமுள்ள கல்வியாளர்கள் இதில் பயிற்சி பெறுகிருர்கள். உலகின் பல பகுதிகளிலிருந்தும் பயிற்சியாளர்கள் வருகிருர்கள்.

1960 வாக்கில் முதலாவது வளர்ச்சி பத்து ஆண்டு என்ற இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது. இந்தப் பத்தாண்டின் முடிவில் இரண்டாவது பத்தாண்டு 1970-தொடங்கியபோது இன்னும் ஏராளமான நாடுகளில் அறியாமையும், பசியும் பிணியும் இருப்பது தெரிய வந்தது.

இவற்றின் விளைவாகப் புதிய சர்வதேசப் பொருளாதார அமைப்பு ஏற்படவேண்டுமென்று 1974-ல் ஐக்கிய நாடுகளின் பொதுச்சபை முடிவு செய்தது. மனிதன் முன்னேற வேண்டும், சமாதானத்தை அடையவேண்டும் என்ற அடிப்படை நோக்கங்கள் நிறைவேற, பொருளாதார வளர்ச்சி மட்டும் போதாது. சமுதாயப் பண்பாட்டுத் துறைகளிலும் அக்கறை காட்ட வேண்டும் என்ற கொள்கை ஒப்புக் கொள்ளப்பட்டது. இவை குறித்து உலக அடிப்படையில் நடவடிக்கை எடுக்க நாம் கடமைப்பட்டிருக்கிறோம்.

அறிவைப் பரப்பவும் உயர்ந்த இலட்சியங்களும் மதிப்பீடுகளும் மனித உள்ளங்களிலே குடிகொண்டிருக்க உதவுவதும் நம்முடைய ஸ்தாபனத்தின் இலட்சியங்கள்.

எந்தத் துறையிலும் உலகம் முழுவதும் சேர்ந்து வளர்ச்சியடைய வேண்டும். மனித சமுதாயத்தில் ஒரு பகுதி முன்னேறி, மற்ற பகுதிகள் பின்தங்கி இருக்க இயலாது. மக்களுக்கிடையேயும் நாடுகளுக்கிடையேயும், நிலவும் ஏற்றத் தாழ்வுகள் நீங்கவேண்டும். சகோதரத்துவம், நியாயம், பரஸ்பர மரியாதை என்ற அடிப்படைகளைக் கொண்டு புதிய சமுதாயம் உருவாக வேண்டும்.

இந்த முயற்சி வெற்றி பெற யுனெஸ்கோ அதில் அங்கம் வகிக்கும் நாடுகளின் அரசாங்கங்களையும் அறிஞர் பெருமக்களையும் நம்பியிருக்கிறது. உங்களுடைய ஒத்துழைப்பைப் பெரிதும் எதிர்பார்க்கிறேன்.

உங்களையெல்லாம் சந்திக்கும் வாய்ப்பை வழங்கிய இந்திய அரசாங்கத்துக்கு மீண்டும் நன்றி தெரிவித்து மகாத்மா காந்தியடிகளின் மேற்கோள் ஒன்று கூறி என் உரையை முடிக்க விரும்புகிறேன்:

''உலகத்துடன் நட்புறவு கொண்டு உலக சமுதாயத்தை ஒரே குடும்பமாகக் கருதுவதே சிறந்த கொள்கை. உலகத்தாருடன் நட்புக் கொள்வதிலும் அவர்களிடம் அன்பு பாராட்டுவதும் என் கொள்கை. தீங்கு இழைக்கப்படும்போது அதை எதிர்ப்போம். அவ்வாறு எதிர்ப்பதால் நாம் உலக மக்களிடையே காட்டும் பரிவுக்கும் அன்புக்கும் இடையூறு ஏற்படாமல் பார்த்துக் கொள்வோம்.''

## சிறந்த கிராம சேவகர், கிராம சேவகி, கிராமம்!

மத்திய வேளாண்மை, பாசனவசதி அமைச்சகத்தின் கிராம அபிவிருத்தித் துறையினால் 1974-75 ஆம் ஆண்டின் சிறந்த கிராம சேவகர்களைத் தெரிந்தெடுப்பதற்கெனக் கடந்த ஆண்டு டிசம்பரில் நடத்தப்பட்ட தேசியமட்டத்திலான பரிசுப்போட்டியில் பஞ்சாபிலுள்ள பாடியாலா மாவட்டத்தைச் சேர்ந்த திரு சுகதேவ் முதல் பரிசு பெற்றுள்ளார். திரு சுகதேவ் சிங்கிற்கு 5 ஆயிரம் ரூபாய் ரொக்கப்பரிசு வழங்கப்படும். இப்போட்டியின் இரண்டாவது, மூன்றாவது பரிசுகளை (முறையே 3 ஆயிரம், 2 ஆயிரம் ரூபாய் மதிப்புடையவை) கர்நாடக மாநிலத்திலுள்ள கோலார் மாவட்டத்தைச் சேர்ந்த திருவேங்கட சேஷய்யாவும், மேற்கு வங்காளத்தைச் சேர்ந்த மிட்னாபூர் மாவட்டத்திலுள்ள திரு தீரேந்திர நாத் ராயும் பெற்றுள்ளனர்.

இதேபோலச் சிறந்த கிராம சேவகிகளைத் தெரிந்தெடுப்பதற்கென நடத்தப்பட்ட போட்டியில் தமிழ்நாட்டில் செங்கல்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்த குமாரி எம். மாணிக்கம் 5 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள முதல் பரிசைப் பெற்றுள்ளார். இரண்டாவது, மூன்றாவது பரிசுகளை பஞ்சாபிலுள்ள பாடியாலா மாவட்டத்தைச் சேர்ந்த திருமதி ரக்ஷா குமாரியும், ஹிமாசல பிரதேஷின் யுனா மாவட்டத்தைச் சேர்ந்த திருமதி சுக்தீப் காவுரும் பெற்றுள்ளனர்.

சிறந்த கிராமத்திற்கான முதல் பரிசு (7 ஆயிரம் ரூபாய்) தமிழ்நாட்டில் கோயமுத்தூர் மாவட்டத்தைச் சேர்ந்த *தொட்டிப்பாளையம்* கிராமத்திற்குக் கிடைத்துள்ளது. இரண்டாவது (5 ஆயிரம் ரூபாய்) பீஹாரின் சாஹ்ரசா மாவட்டத்தைச் சேர்ந்த ராம்பட்டி கிராமத்திற்குக் கிடைத்துள்ளது.

யூனியன் பிரதேசங்களின் மட்டத்தில் சிறந்த கிராம சேவகருக்கான முதல் பரிசு (1500 ரூபாய்) தில்லி மாவட்டத்தைச் சேர்ந்த திரு ராம் கிஷன் தெஹயாவுக்குக் கிடைத்துள்ளது. இரண்டாவது பரிசு (ஆயிரம் ரூபாய்) தாத்ரா, நாஹர் ஹவேலி மாவட்டத்தைச் சேர்ந்த திரு கே. ஏ. சௌத்ரிக்குக் கிடைத்துள்ளது. கோவா மாவட்டத்தைச் சேர்ந்த கொல்லேம் கிராமம், சிறந்த கிராமத்திற்கான பரிசை (3 ஆயிரம் ரூபாய்) வென்றுள்ளது.



# முந்திரிக்கு உரமிட்டு உற்பத்தியைப் பெருக்குங்கள்!

நம் நாட்டில் மகாராட்டிரம், மைசூர், கேரளம், ஒரிசா, கோவா, மேற்கு வங்காளம், அஸ்ஸாம், தமிழ்நாடு, ஆந்திரப் பிரதேடம் ஆகிய மாநிலங்களில் முந்திரி சாகுபடி செய்யப்படுகிறது. தமிழ்நாட்டில் சுமார் 43,121 எக்டேர் நிலத்தில் முந்திரி சாகுபடியாகிறது.

பொதுவாக முந்திரி சாகுபடியாளர்கள் முந்திரி மரங்களுக்கு உரம் இடுவதில்லை. முந்திரி மரங்களுக்குத் தக்க தருணத்தில் உரமிட்டால் மகசூலைப் பெருக்கலாம். மரத்திற்குத் தேவையான உரத்தை இரு பகுதிகளாகப் பிரித்து மே-ஜூன் மாதத்தில் ஒரு முறையும், செப்டம்பர்-அக்டோபர் மாதத்தில் மற்றொரு முறையும் கீழே கொடுத்துள்ளபடி இட வேண்டும். மரத்திலிருந்து 3 அடி முதல் 4.5 அடி தூரம் தள்ளி அரை அடியிலிருந்து முக்கால் அடி ஆழத்தில் உரமிட வேண்டும்

ஒரு மரத்திற்குத் தேவையான உர அளவு (கிராம்)

| | மே-ஜூன் (ஆடி) | | | செப்-அக். (புரட்டாசி) | | |
|---|---|---|---|---|---|---|
| | தழைச் சத்து | மணிச் சத்து | சாம்பல் சத்து | தழைச் சத்து | மணிச் சத்து | சாம்பல் சத்து |
| முதல் ஆண்டு | 100 | 80 | ... | 50 | 40 | ... |
| இரண்டாம் ஆண்டு | 50 | 40 | 30 | 50 | 40 | 30 |
| மூன்றும் ஆண்டு | 100 | 60 | 60 | 100 | 60 | 60 |
| நான்காம் ஆண்டிலிருந்து | .25 | 60 | 60 | 125 | 60 | 60 |









# எள் பயிரில் பூச்சிகளும் தடுப்பு முறையும்

எள் ஒரு முக்கிய எண்ணெய் வித்துப் பயிர். இது தமிழ்நாட்டில் சுமார் 4 இலட்சம் எக்டேரில் சாகுபடியாகிறது. குறிப்பாக திருச்சி, தென் ஆர்க்காடு, கோயமுத்தூர், மதுரை மாவட்டங்களில் எள் அதிகப் பரப்பில் பயிர் செய்யப்படுகின்றது. எள் பயிரைப் பல பூச்சிகள் தாக்குகின்றன. அதனால் 40 சதத்துக்கும் மேலாக மகசூல் பாதிக்கப்படுகிறது. இவற்றுள் இலைப் பிணைக்கும் புழுவும், காய்த்துளைப்பானும், காய் ஈயும், அசுவிணியும் மிக முக்கியமானவை.

இலைப் பிணைக்கும் புழு இலைகளையும் தண்டையும் சேர்த்துப் பிணைத்து உள்ளிருந்துகொண்டு பச்சையத்தைச் சுரண்டி உண்ணும். பின்பு பூ மொட்டுக்களில் நுழைந்து சேதமுண்டாக்கி, கடைசியாகக் காயினுள் செல்கிறது.

காய் ஈயின் 'மேகட்' புழுக்கள் பூவின் கருப்பையைச் சேதம் செய்கிறது. இதனால் காய்கள் உருமாறி விடுகின்றன.

அசுவிணி சில சமயங்களில் தோன்றி மிகவும் கருமையாகத் தாக்கக் கூடியது. இது பயிரிலிருந்து சாற்றை உறிஞ்சுவதால் இலைகள் சுருண்டும், இளந் துளிர்கள் வாடியும், காய்ந்தும் விடும். அசுவுணி தாக்கிய செடியில் கருமைநுறமான பூஞ்சாளம் படர்கின்றது.

இப்பூச்சிகளைக் கட்டுப்படுத்தத் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகப் பூச்சியியல் துறை, ஆய்வுகள் மேற்கொண்டது. 'தயோடான்' (1.43 லி[எக்டேர்) அல்லது 'லெபாசிட்' (500 மி.லி. எக்டேர்) மருந்தை மூன்றுமுறை தெளித்துப் பூச்சிகளைக் கட்டுப்படுத்தியதால் மகசூல் அதிகரித்தது கண்டறியப்பட்டது. பயிரின் முதல் மாதத்தில் ஒருமுறையும், அதன்பின் இரண்டு வார இடைவெளியில் இருமுறையும் இம்மருந்தைத் தெளிக்க வேண்டும்.



# நிலக்கடலையில் சிவப்புக் கம்பளிப் புழுவைத் தடுக்கும் முறைகள்!

தமிழ்நாட்டில் சுமார் 10 இலட்சம் எக்டேர் நிலப்பரப்பில் நிலக்கடலை பயிர் ஆகின்றது. அவற்றில் மானாவாரி நிலக்கடலைப் பயிரைச் சிவப்புக் கம்பளிப் புழுக்கள் மிகுதியாகத் தாக்குகின்றன. திருநெல்வேலி, நீலகிரி மாவட்டங்களைத் தவிர தமிழ்நாட்டில் மற்ற எல்லா மாவட்டங்களிலும் இவைகளால் ஏற்படும் சேதம் காணப்படுகிறது. இப்புழுக்கள் பழுப்பு நிறமாய், சிவப்பு முடியுடன் இருக்கும். இவை கூட்டம் கூட்டமாக நகர்ந்து செடிகளைத் தின்றுவிடும். இவற்றின் தடுப்பு முறைகளை அறிவது மிகவும் அவசியம்.

பல ஆயிரக்கணக்கான எக்டேர் நிலப்பரப்பில் சாகுபடியாகும் நிலக்கடலைப் பயிரை இப்புழுக்கள் ஒவ்வொரு ஆண்டும் அழிக்கின்றன. ஆண்டுதோறும் இருபருவங்களில் இவை பெருகுகின்றன. முதற்பருவம் ஜூன்-ஜூலை; இரண்டாம் பருவம் ஆகஸ்டு மாதம்; சோளம், பருத்தி, கம்பு, மக்காச்சோளம், கேழ்வரகு, ஆமணக்கு, துவரை போன்ற பயிர்களையும் இவை தாக்குகின்றன.

இளம் சிவப்புக் கம்பளிப் புழுக்கள் குறுகிய காலத்தில் பல விதப் பயிர்களையும் தின்று நாசம் செய்கின்றன. இலட்சக்கணக்கான கம்பளிப்புழுக்கள் ஒரு வயலிலுள்ள பயிரைத் தின்று அழித்தவுடன் அடுத்த வயலுக்குச் செல்லும். இடையே சாலை அல்லது இருப்புப்பாதை வந்தாலும் இவை கூட்டமாக அலையெனக் கடந்து செல்லும். பயிரின் இலைக்காம்பை மட்டும் தவிர்த்துவிட்டு, மற்றப் பகுதிகள் அனைத்தையும் இப்புழுக்கள் தின்றுவிடும்.

சிவப்புக் கம்பளிப் புழுவின் தாய்ப்பூச்சி, இலை, காய்ந்த குச்சிகள், களைகள் அல்லது மண் கட்டிகள் மீதும் 600 முதல் 800 முட்டைகள் வரை இடும். முட்டைகளில் இருந்து 4 நாட்களில் வெளிவரும் புழுக்கள், 10 நாட்களில் பழுப்புநிற உடலையும், சிவப்பு உரோமத்தையும் பெறுகின்றன. வெப்பமான பகல் நேரத்தில் இவை செடிகளின் நிழலில் தங்கும். மற்ற நேரங்களில் பயிரைத் தின்று நாசம் செய்யும். புழு, ஒரு மாதத்திற்குள் 2 அங்குல நீளம் வரை வளரும். வரப்பு, வேலியோரங்களில், மண்ணில் 6-8 அங்குலம் வரை சென்று கூட்டுப்புழுவாகும். அடுத்த பருவ காலம் வரை அவை அப்படியே இருந்து, மறுபடியும் மழைக்குப் பின், அந்துப்பூச்சிகளாக மாறும்.

இனப்பெருக்கக் காலத்தில் சிறு தூறலுக்குப் பின் இரவு நேரத்தில் இதன் அந்துப்பூச்சிகள் விளக்குகளை நோக்கிப் பறந்தோடி வரும். அந்துப்பூச்சிகள் தோன்றியதும் விளக்குப் பொறிகள் வைத்து, அவற்றைக் கவர்ந்து அழிக்கலாம். தாய்ப்பூச்சிகள் முட்டைகளைக் கூட்டமாக இடுவதால், முட்டைகளைச் சேகரித்துச் சுலபமாக அழிக்கலாம். இவ்வாறே புழுக்களையும் அதிகமாகக் காணும்போது அவற்றைச் சேகரித்துக் கொல்லலாம். சிறிய புழுக்களைக் கட்டுப்படுத்த 'பி.எச்.சி.' 10 சதத் தூள் எக்டேருக்கு 25 கிலோ வீதம் தூவலாம். வளர்ந்த புழுக்களைக் கட்டுப்படுத்த எக்டேருக்கு பாரத்தியான் 875 மில்லி லிட்டர் அல்லது எண்ட்ரின் 1.750 லிட்டர் அல்லது 'டைக்குளோர்வாஸ்' (நுவான்) 875 மில்லி லிட்டர், அல்லது டாக்சுபீன்' டி டி டி (ஹிலியோடாக்ஸ்) 4 லிட்டர் அல்லது 'ஹிலியோடாக்ஸ் டைமிதோவேட்' (ரோகார்) 4 லிட்டர் என்ற அளவில் தெளிக்க வேண்டும்.

மேலும் 'அம்ஸக்டா' நச்சு என்ற நோயால் தாக்கப்பட்ட புழுக்களைத் தண்ணீரில் கரைத்துச் செடிகளின் மீது தெளித்தால், அவற்றைத் தின்னும் புழுக்களும் அழியும். ஒரு ஏக்கருக்கு 50 தாக்கப்பட்ட புழுக்கள் தேவைப்படும்.

சென்ற ஆண்டு பொள்ளாச்சிப் பகுதியில் வளர்ச்சியடைந்த புழுக்களைக் கட்டுப்படுத்த களச் சோதனை ஒன்று நடத்தப்பட்டது. சிவப்புக் கம்பளிப் புழுக்கள் தோன்றும்போது எக்டேருக்கு மானோகுரோடஃபாஸ் (நுவக்ரான்) 950 மில்லி லிட்டர் அல்லது குளோர்பைரிஃபாஸ் (டர்ஸ்பான்) 1.875 லிட்டர் அல்லது 'லெப்டோஃபாஸ்' (ஃபாஸ்வெல்) 1.275 லிட்டர் அல்லது 'பென்தோவட்' (ஃபென்டால்) 750 மில்லி லிட்டர் அல்லது 'ஃபாஸலோன்' (ஜோலோன்) 1.125 லிட்டர் அல்லது 'பாக்ஸபீன்' (அனடாக்ஸ்) 2.5 லிட்டர் மருந்தைத் தெளித்துக் கட்டுப்படுத்தலாம் என்று இதனால் அறியப்பட்டது.

கைத்தெளிப்பானை உபயோகித்தால் எக்டேருக்கு 750 லிட்டர் நீரிலும் அல்லது விசைத் தெளிப்பானை உபயோகித்தால் 200 லிட்டர் நீரிலும் மருந்தைக் கலந்து தெளிக்க வேண்டும். புழுக்கள் தோன்றும் ஒவ்வொரு முறையும் இந்தப் பூச்சிக் கொல்லிகளைத் தெளித்தால் நிலக்கடலைப் பயிரைச் சிவப்புக் கம்பளிப்புழுவின் சேதத்திலிருந்து காப்பாற்றலாம்; உற்பத்தியையும் பெருக்கலாம்.

**தகவல் : எஸ். சதக்கத்துல்லா,**
**டாக்டர் ஏ. அப்துல் கரீம்**
**டாக்டர் எம். பாலசுப்ரமணியன்.**
**பூச்சியியல் துறை, கோவை-3.**

**வெளியீடு: தகவல் தொடர்பு நிலையம்,**
**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்,**
**கோவை-3.**

# 100 மணி நேரத் தமிழ் இணைப்புப் பயிற்சி....

தமிழ் மூலம் பள்ளியிலும் கல்லூரியிலும் பாடங்களைப் பயிலும்போது பள்ளியிறுதி வகுப்பு நிலையில் மாணவர்கள் அடையும் மொழித் திறனுக்கும் கல்லூரிப் புகுமுக வகுப்புத் தொடக்கத்தில் அவர்கள் பெற்றிருக்கவேண்டிய மொழித் திறனுக்கும் இடைப்பட்ட நிலையில் ஏதாவது இடைவெளி இருக்கிறதா, இல்லையா என்பதை அறிந்து கொள்வதற்காக இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனம் ஓர் ஆய்வை நிகழ்த்தியது. ஆய்வின் முடிவில் இடைவெளி இருக்கிறது என்பது கண்டு பிடிக்கப்பட்டது. இந்த இடைவெளியைப் போக்குவதற்காக இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனம் முதன் முதலில் கன்னட மொழியில் 100 மணி நேர இணைப்புப் பயிற்சி (Bridge Course) ஒன்றை கல்லூரிப் புகுமுகத் தகுதிக்கு ஏற்ப உருவாக்கியது. இந்தப் பயிற்சி 1970 71-ல் புகுமுக வகுப்பு மாணவர்களுக்கு நடத்தப்பட்டது. இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனம் உருவாக்கிய இந்த இணைப்புப் பயிற்சியின் அவசியத்தை உணர்ந்த 'இந்தியப் பல்கலைக் கழகங்களின் சங்கம்' எல்லா இந்திய மொழிகளிலும், இப் பயிற்சியை உருவாக்கலாம் என்ற பரிந்துரையை வழங்கியது. பின்னர் மலையாள மொழிக்கும் இது போன்ற ஓர் இணைப்புப் பயிற்சி உருவாக்கப்பட்டது. மலையாள இணைப்புப் பயிற்சியின் முடிவுகளும், கன்னட இணைப்புப் பயிற்சியின் முடிவுகளும் இது போன்ற ஓர் இணைப்புப் பயிற்சியின் தேவையை உணர்த்தின.

இப்போது உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் மற்றும் கல்லூரிக் கல்வி இயக்ககம் இவற்றின் உறுதுணையோடு இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனம் தமிழில் 100 மணி நேரத் தமிழ் இணைப்புப் பயிற்சி ஒன்றைத் தமிழ் மூலம் பாடங்களைப் பயில இருக்கும் கல்லூரிப் புகுமுக வகுப்பு மாணவர்களுக்காக உருவாக்கியுள்ளது. இந்தப்பயிற்சியில் வரலாறு, வணிகவியல், வேதியியல், புவியியல், மொழியியல் முதலான பல்வேறு துறை (disciplines) களிலிருந்து எடுக்கப்பட்ட 100 பாடங்கள் உள்ளன. இப்பயிற்சியில் உள்ள 100 பாடங்களும் இப்பயிற்சியைக் கற்கும் மாணவர்களின் பல்வேறு மொழித் திறன்களையும் அதாவது (விரிவுரையாளரின் விரிவுரையைக்) கேட்டு உணரும் திறனையும், (Llistening Comprehension) (விரிவுரையாளரின் விரிவுரையைக்)கேட்டுக் குறிப்பெடுத்துக் கொள்ளும் திறனையும் (Listening and note taking Competence) (தமிழ் 'மொழியிலுள்ள நூல்களைப்) படித்துணரும் திறனையும் (Reading Comprehension) குறிப்புகள் கொண்டு கட்டுரை எழுதும் திறனையும் (Guided Comprehension) ஆங்கிலத்தில் கொடுக்கப்பட்டுள்ள பகுதியைத் தமிழில் மூன்றில் ஒரு பகுதியாகச் சுருக்கும் திறனையும் (Epitomizing and English passage into Tamil) வளர்க்கும். மொழித்திறனை வளர்க்க உதவும் நிலையிலுள்ள பயிற்சிகள் ஒருபுறம் இருக்க மாணவர்கள் பாடங்களில் உள்ள செய்திகளைப் படித்துப் புரிந்து கொள்ளும் திறனையும் வளர்க்கிறது.

தமிழ் இணைப்புப் பயிற்சிப் பாடங்களின் தொகுப்பு ஆய்வுப் பரிசோதனைக்காக எஸ். எஸ். எல் சி. தேர்வு எழுதிய பின், தமிழ் மொழி மூலமாகக் கல்லூரியில் பாடங்களைப் பயிலப்போகும் மாணவர்களுக்காகத் தயாரிக்கப்பட்டுள்ளது. சென்னை, திருச்சி, கோயம்புத்தூர், மதுரை, நாகர்கோயில் முதலிய தமிழகத்தில் ஐந்து முக்கிய மாவட்டத் தலைநகர்களில் உள்ள 500 மாணவர்களுக்கு இந்த இணைப்புப் பயிற்சி நடத்தப்படும். ஒவ்வொரு நகரத்திலும் 100 மாணவர்கள் (50 மாணவர்கள் 50 மாணவியர்) இந்தப் பயிற்சி வகுப்பில் சேர்ந்து பயனடைவார்கள். இந்த இணைப்புப் பயிற்சி மே மாதம் 16-ஆம் தேதியிலிருந்து ஜூன் மாதம் 10 ஆம் தேதி வரை நடக்கும். ஐந்து நகரங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட இருக்கும் ஆயிரம் மாணவர்களுக்கு முன்னிலைத் தேர்வு (Pretest) ஒன்று 16—5—77, 17-5-77 ஆகிய இரு தினங்களில் நடைபெற்றது. இந்த முன்னிலைத் தேர்வு (1) தமிழ் இணைப்புப் பயிற்சியில் சேராத மாணவர்களுக்கும் (Controlled Group) 5 நகரங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்படப்போகும் 500 மாணவர்களுக்கு அதாவது ஒவ்வொரு நகரத்திலிருந்தும் (மாணவர்கள் 50 மாணவியர் 50 என்ற விகிதத்தில்) (2) தமிழ் இணைப்புப் பயிற்சியில் சேர்ந்து கற்கப் போகும் மாணவர்களுக்கும் (Experiment Groups) (ஐந்து நகரங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்படும் 500 மாணவர்களுக்கு அதாவது ஒவ்வொரு நகரத்திலிருந்தும் மாணவர்கள் 50 மாணவியர் 50 என்ற விகிதத்தில்) நடத்தப்படும்.

இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனத்தின் ஆலோசனைக்கு ஏற்ப இணைப்புப் பயிற்சியை நடத்துவதற்காகக் கல்லூரிக் கல்வி இயக்ககம், மேற்கூறிய ஐந்து நகரில் ஒவ்வொரு நகரத்திலும் ஒரு கல்லூரியையும், ஏழு விரிவுரையாளர்களையும் தேர்ந்தெடுத்துள்ளது. இந்த ஏழு விரிவுரையாளர்களில் ஒருவர் இணைப்பாளராகப் (Co-ordinator) பணியாற்றுவார். இணைப்பாளர்கள் உட்பட எல்லா விரிவுரையாளர்களும் ஒவ்வொரு நகரத்திலும் 100 மாணவர்களுக்கு இந்த இணைப்புப் பயிற்சியைக் கற்பிப்பார்கள். தமிழ் இணைப்புப் பயிற்சி வகுப்புகள் தொடங்குவதற்கு முன்னர், விரிவுரையாளர்களும், இணைப்பாளர்களும் இரண்டு நாட்களுக்குத் 'தமிழ் இணைப்புப் பயிற்சியை எப்படி நடத்துவது என்பதற்காக ஒரு பயிற்சி வகுப்பில் (Orientation Programme) கலந்து கொள்ள அழைக்கப்பட்டார்கள். இந்தப் பயிற்சி வகுப்பு 13-5-77, 14-5-77 ஆகிய இரு தினங்கள் மதுரையில் உள்ள ஸ்ரீமீனாட்சி அரசினர் கல்லூரியில் நடைபெற்றது. மைசூரில் உள்ள இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனம் இவ்வாசிரியப் பயிற்சி வகுப்பை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் மற்றும் கல்லூரிக் கல்வி இயக்ககம் ஆகிய நிறுவனங்களின் ஒத்துழைப்போடு நடத்தியது. இந்தப் பயிற்சி மாணவர்களுக்கு இலவசமாகத் தரப்படுகிறது. பயிற்சியை முடிக்கும் மாணவர்களுக்குச் சான்றிதழ் வழங்கப்படும். தமிழ் இணைப்புப் பயிற்சியின் 6 புத்தகங்கள் இலவசமாக வழங்கப்படும்.





# விவசாயத் தொழிலாளர்களுக்கு தமிழ்நாடு அரசு நிர்ணயித்துள்ள குறைந்தபட்ச ஊதியம்!











| | பெரியவர் கூலி ரூ.பை. | சிறியவர் கூலி ரூ.பை. |
|---|---|---|
| ஏர் உழ (சொந்த எருது, கலப்பையுடன்) | 9.00 | — |
| ஏர் உழ (பண்ணையாரின் எருது, கலப்பையுடன்) | 5.00 | — |
| விதை விதைத்தல், நாற்றுப் பறிக்க .... | 5.00 | 3.00 |
| நாற்று நட, களை எடுக்க .... | 3.50 | 2.10 |
| அறுவடை செய்ய .... | 5.00 | 3.00 |
| பால் கறக்க, கோழி வளர்க்க, வரப்பு கழிக்க, எரு சுமக்க, தேனீ வளர்க்க, பயிற்சி பெற்ற பிற பணிகளுக்கு | 5.00 | 3.00 |
| கால்நடை வளர்க்க | 3.50 | 2.10 |
| பயிற்சி பெருத பிற பணிகளுக்கு | 3.50 | |





வேலை நேரம் :
உழவு—5 மணி நேரம்.
பிற பணிகள்—7 மணி நேரம்.

நிர்ணயிக்கப்பட்ட ஊதியத்தைக் குறைத்துக் கொடுப்பது குற்றமாகும்! இக்குற்றத்திற்கு 6 மாதம் வரை சிறைத்தண்டனை அல்லது 500 ரூபாய வரை அபராதம் அல்லது இரண்டும் சேர்த்து விதிக்கப்படும்!

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு.

பதிவு எண். M. 8676

# தீ விபத்துக்களைத் தவிர்ப்போம்



குழந்தைகளைத் தீயிடம் நெருங்க விடவேண்டாம்.

படுக்கையில் புகை பிடிக்காதீர்.

சிமினி இல்லாத விளக்குகளை உபயோகிக்கக்கூடாது.

பீடி, சிகரெட் முதலியவைகளை நன்றாக அணைத்து எறியவும்.

சமையல் முடிந்த பிறகு நெருப்பை தண்ணீர் ஊற்றி நன்றாக அணைத்து விடவேண்டும்.

## அலட்சியமே தீ விபத்துக்குக் காரணம்!



## தீயைத் தவிர்ப்பது அனைவரின் பொறுப்பு

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600002.